திருக்கோயில்

மே 1980 ரூ. 1-25

இந்து சமய அறநிலைய (ஆட்சி)த் துறை வெளியீடு

சென்னைத் திருமயிலாப்பூர் அருள்மிகு மாதவப்பெருமாள் திருக்கோயில்
வசந்த கல்யாண மண்டபத்தினை
அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைத்தல். (20-6-80)

முகப்பு:

கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருப்பட்டீச்சுரம் அருள்மிகு தேனுபுரீசுவரர் கோயிலின் அழகிய தோற்றம்.

திருக்கோயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை: 22 | இரவுத்திரி ஆண்டு-வைகாசித் திங்கள்-மே-1980 | மணி: 8

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைத் குறிப்பிட்டு மாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

தூக்கத்திற்கு ஒரு தூய மருந்து
—டாக்டர் திரு இரத்தினவேல் சுப்பிரமணியம்.

கிருத்திகை விரத மகிமை
'மருதமலைச் சித்தர்'
—டாக்டர் திரு கே. வி. கிரி, R.I.M.P.

சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்துக்கள்
—திரு க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.

வீரசைவம்
—திரு ந. விவேகானந்தன், M.A.

திருப்புளிங்குடிக் கிடந்தான்
—திரு எஸ். ஆர். கிருஷ்ணன்

கோவர்த்தனம்
—திரு கா. அ. ச. ரகுநாயகன், M.A.

பசவேசுவரர் —திரு த. அல்லமதேவன்

கண்ணபிரானும், இராமாநுசரும்
—திரு பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்

தத்துவ நூல்களில் அளவையியல்
—டாக்டர் திரு ச. கங்காதரன், M.A., Ph.D.

சிறுபுலியூர் அருமா கடலமுதன்
—டாக்டர் திரு ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.

திருஞானசம்பந்தர் அருளிய கோள்அறு திருப்பதிகம்
—திரு மனசை ப. கீரன், B.A., B.T.

சைவத் திருமுறைகள்
—திரு வி. சந்திரசேகரன், B.Sc.

நம்பெருமாள் திருவுருவநலம்
—திரு அ. தேவராசன், B.A.

பேதையும் மேதையுமான சீதை
—திரு புரிசை சு. முருகேச முதலியார்

திருவாசகத்தின் இலக்கியத்திறன்
—திரு ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

புள்ளின் பின் போன தனி நெஞ்சம்
—ஆசிரியர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

தூக்கத்திற்கு ஒரு தூய மருந்து

''மருத்துவப் பேரறிஞர்''
டாக்டர் திரு இரத்தினவேல் சுப்பிரமணியம், அவர்கள்
B.Sc., M.D., F.R.C.P.(London), F.C.C.P. (U.S.A.), F.A.M.S.

நம் தமிழில் உள்ள சங்க இலக்கியங்கள் என்பவை, சுமார் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. அவைகளுள் குறுந்தொகை என்பது, ஒரு சிறந்த இலக்கியம். அதில் ஒரு சிறிய இனிய நல்ல பாடல்:

''நள்ளென் றன்றே யாமம்; சொல்அவிந்து
இனிது அடங்கினரே மாக்கள்; முனிவின்று
நனந்தலை உலகமும் துஞ்சும்;
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே!''

''இரவு நெடுநேரமாகிவிட்டது. நள்ளிரவும் வந்து விட்டது. எங்கும் இருள் மிகுதியாகக் கவிந்து சூழ்ந்து கொண்டது. மக்கள் எல்லோரும், தம் பேச்சும் ஒலியும் அடங்கி, நல்ல உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டனர். உலகத்திலுள்ள எல்லா உயிரினங்களுமே, தம்மை மறந்து, இனிதாக நெடுந்துயில் கொள்கின்றன. ஆனால் யான் ஒருத்தி மட்டும்தான், தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு பெருந் துன்பம் அடைந்து கொண்டிருக்கின்றேன்'' என்பது, இப்பாடலின் பொருள். இப்பாடலில் கூறப்படுவதுபோல, இரவில் சரியாகத் தூக்கம் வராமல், எத்தனையோ பலர் அவதியுற்று, அல்லற்பட்டு வருந்துகின்றனர்.

எனக்குத் தொழில் வைத்தியம். ஆதலால் என்னிடம் பலபேர் வந்து, பலவிதமான நோய்களைப் பற்றித் தங்கள் குறையைக் கூறுவதுண்டு. அதிலே ஒரு முக்கியமான குறை, தூக்கம் வரவில்லை என்ற பெருங்குறைதான். தூக்கம் வராமை, பல காரணங்களால் ஏற்படலாம். முக்கியமாக மனக்கவலைதான், தூக்கம் வராமைக்கு, ஒருபெரும் காரணமாகும். நாளைக்குத் தேர்வு என்றால் மாணாக்கர்களுக்கு இன்றைக்கே தூக்கம் வருவதில்லை. தேர்வில் நாம் என்ன எழுதுவோம்? எப்படி எழுதுவோம்? என்ற பயம்தான். அதேபோல் உடம்பில் நோய்நொடியினால் தூக்கம் வருவதில்லை. நோயினால் அவதியுறும்போது, மரணம் ஏற்பட்டுவிடுமோ! என்ற பயமிருந்தாலும் தூக்கம் வருவதில்லை. சில வர்த்தக அதிபர்களுக்குத் தம் தொழிலில் இழப்பு ஏற்பட்டாலோ, அல்லது ஏற்படலாம் என்ற பயம் உண்டானாலோ, தூக்கம் வருவதில்லை. இப்படி பலவிதமான மனக்கவலைகளினால் தூக்கம் வராமல் மக்கள் பலர் அவதிப்படுகின்றார்கள். உடம்பில் காய்ச்சல் இருந்தால், அக்காய்ச்சல் காரணமாகவும் தூக்கம் வருவதில்லை. அல்லது உடம்பில் ஏதாவது ஒரு பாகத்தில் ஏதேனும் வலியிருந்தாலும், அந்த வலியின் காரணமாகத் தூக்கம் வருவதில்லை. வலியில்லாமல் இருப்பதற்கு மருந்துகொடுத்தால் அவர்களுக்குத் தூக்கம் தானாக வரும்.

ஏதேனும் ஒரு காரணத்தினால் தூக்கம் வருவதில்லை என்றால், அந்தக் காரணத்தைக் கண்டுபிடித்து, அதற்குத் தக்க மருந்துகொடுத்தால் குணம் ஏற்படுவதுடன், தூக்கமும் வரும். பொதுவாக வயது முதிரமுதிர, ஒரு அளவிற்கு நமக்குத் தூக்கம் வருவதில்லை. வயது முதிரவில்லையானாலும், ஒருசிலர், சில சமயங்களில் எந்தக் காரணமும் இன்றித் தூக்கம் வராமல், படாதபாடு படுவர். இரவில் நெடுநேரம் தூக்கமில்லாமல் இருப்பர்; பிறகு நெடுநேரம் கழித்துத்தான் தூக்கம் வரும். இவ்வாறு காரணமின்றித் தூக்கம் வராமல் இருந்தால், அவர்களுக்கு மருந்துகொடுத்துத் தூக்கம் உண்டு பண்ணினால், அது பயன்தருவதில்லை. உடலுக்குக் கெடுதியையே நாளடைவில் விளைவிக்கும்.

அப்படிப்பட்டவர்கள், பகவத் தியானம், இறைவழிபாடு செய்வார்களேயானால், அவர்களுக்குத் தூக்கம் சுலபமாக வரும். அவ்வாறு அவர்கள் பகவத் தியானம் செய்வதனால், யாதொரு கெடுதலும் ஏற்படுவதில்லை; நன்மையே விளைகின்றது. தூக்கம் வரவேண்டும் என்ற ஒரே காரணத்தினால், நாம் பலாத்காரமாகத் தூக்க மாத்திரைக்கும், போதைப் பொருள்களுக்கும் அடிமையானால், அது நம் உடலுக்குத் தீங்கும் கெடுதலுமே விளைவிக்கும். தூக்கம் வராத நேரங்களில், தேவாரம் திருவாசகம் திருக்குறள் முதலிய நூல்களைப் படிக்கலாம். வைணவர்களானால் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் படிக்கலாம். அல்லது அவரவர்களுக்கு விருப்பமான வழிபாட்டிற்குரிய பாட்ல்களில், சுமார் 10-20 பாடல்களை மனப்பாடம் செய்து கொண்டு, அவற்றைத்திரும்பத் திரும்ப மனத்திற்குள் சொல்லிக்கொண்டே இருப்பார்களானால், சுலபமாகவும் நன்றாகவும் நிச்சயமாகவும் தூக்கம் வரும்.

ஆதலால், நான் என்னிடம் வருபவர்களிடம், தூக்கம் வராமல் துன்பப்படும் நேரத்தில், பகவத் தியானத்தைச் செய்வது, அல்லது பாடல்களைப் பாராயணம் செய்வது, நல்ல

பலன்தரும் என்று, அடிக்கடி சொல்வது வழக்கம். சாதாரணமாக, ஒருவர் ஒருசொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருக்கின்றார் என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பேச்சு சுவாரசியமாக இல்லாமல் இருந்தால், அவர் நிகழ்த்தும் பேச்சைக் கேட்பவர்களில், ஒருசிலராவது உறங்கி விழுவார்கள். அதற்குக் காரணம் பேச்சு நடக்கும் இடத்தில, வேறு எந்த வேலையும் செய்ய முடியாது. மேலும், நமது காதுகள் மட்டும் பேச்சைக் கூர்ந்து கேட்கும். கேட்டு, அந்தப் பேச்சைக் காதுகள் மூளைக்குச் செலுத்தும். தொடர்ந்து இவ்வாறு நிகழ்ந்தால், மூளை சோர்வடைகின்றது. இதன்முடிவாக, பேச்சிலே சுவாரசியம் இல்லாத காரணத்தினால், தூக்கம் தானாக வந்து விடுகின்றது.

இங்ஙனமின்றி, நாம் பகவத் நாமத்தை உச்சரித்துப் பாடும்பொழுது, நம்முடைய மனத்தில், எல்லாம் வல்ல பரம்பொருளை நினைத்துப் பக்தியுடன் தியானிப்போமேயானால், அப்பொழுது கடவுள் நமக்கு ஒரு சிறந்த நண்பராகவும், ஆகிவிடுகின்றார். கடவுளைப் பலவிதமாக வழிபடலாம். ஒருசிலர் தகப்பனார் என்றும், ஒருசிலர் தாயார் என்றும், வேறுசிலர் நண்பர் என்றும், மற்றும் சிலர் எசமான் என்றும், கடவுளைக் கருதி வழிபடுவதுண்டு. எவரெவர் எப்படி வழிபட்டாலும், எந்த நேரத்தில் வழிபட்டாலும், கடவுள் அருள் செய்கின்றார். இதுவே, பகவத் கீதையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

யோ யோ யாம் யாம் தனும் பக்த:
ச்ரத்தயா அர்ச்சிதும் இச்சதி,
தஸ்ய தஸ்ய அசலாம் ச்ரத்தாம்
தாம் ஏவ விததாம்யஹம்

இதன்பொருள் ''எவரெவர் எந்தஎந்த மூர்த்தியைச் சிரத்தையுடன் பத்தியாகப் பூசிக்க விரும்புகின்றனரோ, அவரவர்களின் அந்தச் சிரத்தையை நான் அசையாததாகச் செய்கிறேன்'' என்பது.

ஆகையால் இறைவனை இந்தப் பெயரால் தான் குறிப்பிடவேண்டும்; இந்தவிதமாகத் தான் பூசை செய்யவேண்டும் என்ற நியதி எதுவும் இல்லை. நாம் பூசை செய்தாலோ, அல்லது பிரார்த்தனை புரிந்து கேட்டாலோ, அப்பொழுதே கடவுள் நமக்கு வேண்டியதைக் கொடுக்கத் தயார் இருக்கின்றார். அவரே வேறு ஒரு இடத்தில்,

அஹம் கிரதுரஹம் யக்ஞ:
ஸ்வதாஹம் அஹம்அவுஷதம்; •
மந்த்ரோஹம் அஹமேவாஜ்யம்
அஹம் அக்னிர் அஹம் ஹுதம்

என்று கூறியருள்கின்றார். இதன் பொருள்: ''நானே வைத்தியன்; நானே மருந்து; நானே ஓமம்; நானே அக்கினி; ஓமத்தில் விடப்படும் நெய்யும் நானே; என்பது. இதன்படி இறைவன் ''தானே மருந்து'' என்று நமக்குச் சொல்கின்றார். இந்த மருந்தைக் காசுகொடுத்து நாம் வாங்க வேண்டியதில்லை. இருந்த இடத்திலேயே, நாம் நினைத்த நேரத்தில், கடவுள் நமக்கு அருள்புரியக் காத்துக் கொண்டிருக்கின்றார். ஆனால் இதற்குத் தேவையான மிக முக்கியமான ஓர் அம்சம் 'நம்பிக்கை' என்பதுதான். நம்பிக்கை என்னும் ஒன்றுமட்டும் இல்லாமற்போனால், நாம் வெறும் பூசனை செய்வதாலும், பிரார்த்தனை புரிவதனாலும் எந்த ஒரு பலனும் கிடைக்காது. இதை வற்புறுத்தி உணர்த்த, ஒரு கதை சொல்லுவது உண்டு;

யமுனை நதிக்கரையில் ஒரு சாமியார் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். ஒரு சமயம் யமுனை நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தயிர் விற்கும் பெண்கள் இந்தக் கரையிலிருந்து, அந்தக் கரையில் உள்ள ஊருக்குச் சென்று தயிர் விற்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால், அவர்களால் அந்தக் கரைக்குச் செல்ல இயலவில்லை. அந்தப் பெண்மணிகள் சாமியார் இருக்குமிடத்திற்கு வந்தார்கள். சாமியார் 'கிருஷ்ணா கிருஷ்ணா' என்று மனதில் நினைத்துக் கொண்டால், தண்ணீரின் மேல் நடந்து செல்லலாம் என்று பிரசங்கம் செய்து கொண்டிருப்பதைக் கேட்டனர். உடனே சிறிதும் தயங்காமல் நதியின் முன்பு நின்றுகொண்டு, நம்பிக்கையுடன் 'கிருஷ்ணா கிருஷ்ணா' என்று கூறிக்கொண்டே தண்ணீரின் மேல் நடந்து அந்தக் கரைக்குச் சென்றுவிட்டனர். அங்குத் தயிர் வியாபாரத்தை முடித்துக் கொண்டு திரும்பினர். வெள்ளம் வடிவதற்கு இரண்டு மூன்று நாட்கள் பிடித்தன; அந்த இரண்டு மூன்று நாட்களிலும் அவர்கள் 'கிருஷ்ணா கிருஷ்ணா' என்று சொல்லிக்கொண்டே, அந்தக் கரைக்குச் சென்றுவந்த வண்ணமிருந்தனர். இவ்வாறாக வெள்ளத்தின்போதும், அவர்கள் தங்கள் வியாபாரத்தைக் கவனிக்க முடிந்தது.

அந்தப் பெண்கள் வெள்ளத்தின்போது உதவியாயிருந்த சாமியாரை, ஒரு தடவை தங்கள் வீட்டிற்கு விருந்துண்ண அழைக்கத் தீர்மானித்தனர். சாமியாரிடம் சென்று விருந்துண்ண அழைத்தனர். சாமியாரும் அதற்குச் சம்மதித்தார். ஆனால் சாமியார், ''நதியில் வெள்ளம் ஓடுகிறதே; நான் எப்படி நதியின் அக்கரைக்கு வரமுடியும்'' என்று வினவினார். அதற்கு அப்பெண்கள் சாமியாரைப் பார்த்து, தாங்கள் தானே 'கிருஷ்ணா கிருஷ்ணா' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டால், நதியின் அக்கரைக்குச் சென்று வரலாம் என்று உபதேசித்தீர்கள்'' என்று வினவினார்கள். சாமியாரும் நம்பிக்கையில்லாமல், அவர்கள் சொல்வது உண்மையா என்று அறியவேண்டும் என்று நினைத்து, அவர்களுடன் புறப்பட்டார்.

அப்பெண்கள் நதிக் கரைக்கு வந்து, மிகவும் நம்பிக்கையுடன் 'கிருஷ்ணா கிருஷ்ணா' என்று மனதில் நினைத்துக்கொண்டே நதியைக்

கடந்து விட்டனர். சாமியாரோ நம்பிக்கையில்லாமல் சந்தேகத்துடன் நதியில் காலை வைத்தார். சாமியார் நதியோடே போய்விட்டார். இந்தக் கதையின் வாயிலாக, நமக்கு அறிவுறுத்தப்படுவது யாது? தியானம் அல்லது பிரார்த்தனைக்கு நம்பிக்கை மிகவும் அவசியம், இன்றியமையாதது என்பது அல்லவா?

அன்புடனும் நம்பிக்கையுடனும், நாம் பிரார்த்தனையும் தியானமும் செய்து பழகி வந்தால், நமக்குப் பலவகை நன்மைகள் ஏற்படும் என்பது திண்ணம். ''நம்பினவர்க்கு நடராசன் நம்பாதவர்க்கு எமராசன்'' என்பது பழமொழி

''முருகனே செந்தில் முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே!-ஒருகைமுகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்''

என்னும் பண்டைக்காலத்துப் பழைய பாடல் ஒன்றில், நக்கீரர், ''எப்பொழுதும் நம்பியே கைதொழுவேன் நான்'' என்று, நம்பிக்கையின் அவசியத்தைக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்,
மனக்கவலை மாற்றல் அரிது''

என்று, நம் தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூறியபடி, நாம் அன்புடனும் நம்பிக்கையுடனும் தனக்குவமையில்லாதவர் ஆகிய கடவுளைத் தியானித்துப் பிரார்த்தனை செய்து வந்தால், நம்முடைய கவலைகளும் கஷ்டங்களும் தீரும்; அச்சங்களும் ஆபத்துக்களும் நீங்கும். நமது மனம் அமைதியுற்று ஆனந்தத்தில் திளைக்கும். நமக்குத் துயரங்கள் ஒழிந்து, தூக்கம் நன்றாக வரும்! நாம் இவ்வுலகில் வாழ்கின்ற வரையில், ஓரளவேனும் நலமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழலாம்.!

நல்ல மருந்து இம் மருந்து!—சுகம்
நல்கும் வைத்தியநாத மருந்து!...

—இராமலிங்க வள்ளலார்.

வழிபாடு

''வழிபாடு என்பது, ஒருவன் தோற்றுவிக்கக்கூடிய மிகமிகச் சிறந்த வன்மைமிக்க ஒரு பேராற்றல் ஆகும். இவ்வாற்றல், நிலத்தின் ஈர்ப்பு ஆற்றல் எங்ஙனம் உண்மையானதோ, அங்ஙனம் உண்மையானதாகும். ஒரு மருத்துவன் என்ற முறையில், எல்லாப் பிற மருத்துவங்களும் பயனற்றுத் தோல்வியுற்றுவிட்ட பிறகு, வழிபாடு என்னும் அமைதியான முயற்சியின் மூலம், பிணியின்றும் கவலையினின்றும் மீட்டுவித்து உயர்த்தப்பெற்ற மனிதர்கள் பலரை, யான் கண்டிருக்கின்றேன்.

ரேடியம் என்னும் கதிரியைப் போல, வழிபாடு என்பது, தன்னில் இருந்து ஒருவன் தோற்றுவிக்கக்கூடிய ஒளிமிகுந்த ஆற்றலின் ஒரு பிறப்பிடம் ஆகும். வழிபாட்டின்கண் மனிதர்கள் தங்களுடைய ஓர் எல்லைக்குட்பட்ட ஆற்றலினை மிகுதிப்படுத்திக் கொள்வதற்கு, எல்லா ஆற்றல்களுக்கும் தாயகமான, எல்லையற்ற பரம்பொருளைத் துதித்து, அதனோடு தொடர்பு கொள்ள முயல்கின்றார்கள்.

வழிபாடு செய்யும்பொழுது, இவ்வுலகத்தைப் படைத்த குறைவிலா நிறைவாகிய இறைவனின் ஆற்றலோடு, நம்மை நாம் தொடர்புபடுத்திக் கொள்ளுகின்றோம். அப்பேராற்றலின் ஒரு பகுதியை நம்முடைய தேவைக்கு ஏற்பப் பகிர்ந்து அளிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

வேண்டிக் கொள்வதனாற்கூட, நம்முடைய மனித வாழ்வின் குறைபாடுகள் நிறைவெய்துகின்றன; நாம் புத்தாற்றலும் புத்துயிர்ப்பும் பெறுகின்றோம். உள்ளார்ந்த அன்பு மேலீட்டால், நாம் கடவுளைத் துதித்து வழிபடும்பொழுது, நாம் நம்முடைய உடலையும் உயிரையும் புதிய சிறந்த நிலைக்கு மாற்றிக் கொள்கின்றோம்.

எந்த ஓர் ஆணோ, பெண்ணோ ஏதாயினும் சில நலங்களைப் பெறாமல், ஒரு கணமேனும் வழிபாடு புரிதல் என்பது, நடவாத செயலாகும். ஒருகண நேரமேனும் உண்மையாக வழிபடுவோர், தாம் விரும்பும் நலங்களை அடைந்தே தீருவர்.''

இவ்வாறு Dr. Alexis Carrel என்னும் அமெரிக்க நாட்டு மருத்துவப் பேரறிஞர் கூறுவது, வழிபாடும் அதன் தத்துவங்களும் பற்றி, நாம் அறிந்துகொண்டு கடைப்பிடித்தற்கு, நமக்குப் பெரிதும் ஊக்கமூட்டித் துணைபுரிவதாகும்.

—ஆசிரியர்.

கிருத்திகை விரத மகிமை

''மருதமலைச் சித்தர்''

டாக்டர் திரு கே. வி. கிரி, R.I.M.P., R.M.P. (சிம்லா),

மருத்துவ அதிகாரி, மருதமலைத் திருக்கோயில் இலவச மருத்துவமனை, கோவை.

செந்தமிழ்த் தெய்வமாம் திருமுருகன் குடிகொண்டிருக்கும் எல்லாத் திருக்கோயில்களிலும், கிருத்திகை நாள், மிகவும் சிறப்பாகக் கருதப்பட்டு, சிறப்புப் பூசைகள் நடைபெற்று வருகிறது. அந்நாளில் பக்தர்கள் பெருவாரியாகச் சென்று முருகப்பெருமானைத் தரிசிப்பதும், நாம் யாவரும் நன்கறிந்த ஒன்றாகும். அந்தக் கிருத்திகை நாளன்று உண்ணா விரதம் இருப்பது - நம்முடைய மனம் தெய்வ சிந்தனையில் செல்லும்படி செய்ய, நமது முன்னோர்கள் ஏற்படுத்தியிருப்பது விஞ்ஞான முறைப்படியும், ஆன்ம தத்துவப்படியும் அமைந்த ஒன்றாகும். அத்தகு கிருத்திகை விரத மகிமையை இனி ஆராய்வோம்.

மனம்தான் மனிதனின் எல்லாவிதப் படைப்புகளுக்குமே உந்து சக்தி. 'மனஸ்' என்னும் தத்துவத்தை நாம் உடையவர்கள் ஆதலால் மனுஷ்யர்' எனப்படுகிறோம். மனதை அடக்க வல்லவன் தொடர்ந்து வரும் பிறவிப் பெருங்கடல்களைக் கடக்க வல்லவன் ஆகிறான். மனமும் - மனத்தோற்றமுமே - தொடர்ந்து பந்தத்திற்கும், பிறவிக்கும் காரணமாகின்றன. ஆகவே இம்மனம் பொங்கியெழாது அடங்கி வாழவும், அறுவகைப்படைகளாகிய காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய மனிதனை அழிக்கும் அறுவகைப் பகைகளிலிருந்து தன்னை நீக்கிக் கொள்ளும் பொருட்டுக் கிருத்திகை நாளிலே மனம் உச்சப்பட்டு நம்மை நாமே அமிழ்த்துக் கொள்ளாமல் இருக்கவே, நாம் உண்ணாமல் தெய்வ சிந்தனையோடு இருக்க வேண்டும் என்று, நம் முன்னோர்கள் ஏற்படுத்தியதே இக்கிருத்திகை விரதமாகும்.

கிருத்திகை விரதம் அனுசரிக்கும் ஒவ்வொருவரும் தத்தமது இல்லத்தைச் சாணமிட்டு மெழுகிக் கோலமிடல் வேண்டும். பூசைப் பாத்திரங்களையும், சமைக்கும் பாத்திரங்களையும் நன்றாய்த் துலக்குதலும், நீரில் முழுகுதலும், தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிந்து கொள்ளுவதும் அவசியம். இவற்றால் அசுத்தம் நீங்கி உடலுக்கும் மனதிற்கும் சுத்தம் ஏற்படுகிறது. விரதத்தின் பயன் யாதெனில் மனசுத்தியினால் தூய்மையும், தூய்மையினால் ஞானமும், ஞானத்தால் முக்தியும், அடைந்தால் மோட்சமடையலாம் என்பது ஆன்றோர் வாக்கு. அத்தகு மோட்சம் என்ற மாளிகைக்கு ஏணிப்படிகள் இரண்டு. அவை விரதம், ஞானம். எனவே, விரதங்களை அனுசரிப்பவர், அருளுடைமை, புலாலுண்ணாமை, தவம், ஒழுக்கம், கள்ளாமை, மெய்ம்மை, இன்னாசெய்யாமை, கொல்லாமை முதலியவற்றைக் கைக் கொண்டவராயிருத்தல் வேண்டும். இனி சிறப்புமிக்க கிருத்திகை விரதத்தின் மகிமையைப் பார்ப்போம்.

ஒவ்வொரு மாதத்திலும் கிருத்திகை நட்சத்திரம் வருகிறது, இது இருபத்தியேழு நட்சத்திரங்களில் மூன்றாவது நட்சத்திரமாக வருகிறது. கிருத்திகை நட்சத்திரத்துக்கு முதல் நாளான பரணி நட்சத்திரத்தன்று, ஒருவேளை உணவுண்டு, இரவில் முருகப்பெருமானை வணங்கித் தூங்கி, சூரிய உதயத்திற்கும் முன்பாகவே எழுந்து, 'சரவணபவ' எனவோதி, காலைக்கடன் கழித்து, நீராடி, திருவெண்ணீறணிந்து, பூக்கொய்து, நாளும் வழிபடும் நற்றமிழ்க் கந்தவேளைத் தீபங்களால் பூசித்துப் பின்னர் முருகன் குடிகொண்டிருக்கும் திருக்கோயில் சென்று திருவிளக்கேற்றி அருச்சித்து வீடு திரும்ப வேண்டும். தம்மைத் தேடி இல்லத்திற்குத் தாமாக எவரேனும் வந்தால், அவருக்கு அன்னமிட்டு உபசரித்து விட்டுத் தாம் உண்ணுதல் வேண்டும். உண்டபின் பிறருடன் வீணே பேசிப் பொழுதைப் கழிக்காமல், மருதவெற்பிலுறை முருகனின் புகழ்கூறும் கந்தபுராணம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருமுருகாற்றுப்படை முதலிய இனிய நூல்களைத் தாமாகவோ, பிறரைக் கொண்டு கூறவோ கேட்க வேண்டும். இக்காரணம் கொண்டு இன்று கிருத்திகை நாட்களில் முருக பக்தர்கள் பக்திப்பாடல் இசையரங்கு அன்னதானம் முதலியவற்றை முருகன் திருக்கோயில்கள் தோறும் நடத்தி வருவதைக் காணலாம்.

மாலையில் முருகனை மலர்மாலைகளால் அலங்கரித்துப் பூசித்து, அருச்சித்து வழிபட வேண்டும். ஆண்டவன் சோதிமயமானதால் கற்பூரதிபாராதனை செய்து வணங்கவேண்டும். அன்றிரவு முழுவதும் ஈசுவரதியானத்துடன்

இருந்து மறுநாள் விடியுமுன் அடியார்களுக்கு அன்னமிட்டு விரதத்தினை முடித்துக் கொள்ள வேண்டும். இதுவே வழக்கமான கிருத்திகை விரதமாகும். மகிமைமிக்க இவ்விரதத்தினை 12 ஆண்டுகள் அனுசரித்தால், முருகன் திரு வருள் அதிகம் சித்திக்கும், ஆயுள் பெருகும், உடல் நலமும் மனநலமும் மிகும். விரதத்தின் போது பசித்தால் பாலைப் பருகலாம். அது வும் முடியாதவர்கள் ஒருவேளை ஆகாரத்துடன் இருக்கலாம். அந்த ஒருவேளை ஆகாரமும் ருசி கவனியாது பசிதவிர்க்கும் உணவாயின் மிகவும் நல்லது.

உண்ணாநோன்பின் மகிமையைப் பற்றி மருத்துவர்கள் இரத்த சுத்திக்கும்; நோய்க் கிருமிகள் ஒழியவும் விரதமிருப்பது ஆரோக் கியத்திற்கு மிகவும் அவசியமானது என்று கூறி யிருக்கின்றனர். அதற்குச் சிறப்புபெற்ற விர தத்தைக் கிருத்திகை நாளில் கடைப்பிடிப்பது உடல் நலத்திற்கும், மன நலத்திற்கும் உகந் தது. திருமுருகன் திருக்கோயில் கொண்டுறை யும் திருக்கோயில்களுக்குச் செல்லும் அன்பர் கள், அங்கு எவரிடத்தும் வீண் பேச்சுப் பேசா மல், மௌன விரதம் காத்து, ஆலயத்தை மும் முறை வலம் வந்து, எண்சாண் உடம்பும் நிலத்தின் படும்படியாக வீழ்ந்து வணங்கிச் செபம், தோத்திரம், தியானங்கள் செய்து வழி பட்டு, இஷ்ட சித்திகளைப் பெற்று, இன்பம் எய்தி உய்ய எம் பெருமான் மருதமலை முரு கனை வேண்டி வணங்கிப்பிரார்த்திக்கிறேன்.

வழிபாடு

''உள்ளத்தையும் உணர்வையும் இறைவனை நோக்கி உயர்ந்து எழுமாறு செய்வதும், இறைவன்பால் நேசம் கொண்டு அவரிடம் உரையாடுவதும், அவர்தம் மெல்லிய குரலொலியை உற்றுக் கேட்டு உன் னித்து உணர்ந்து ஒழுகுவதுமே, வழிபாடு ஆகும். வழிபாடு என்பது, இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருவழிப்பாதை ஒன்றினை ஏற்படுத்துகின்றது; சுவர்க்க உலகத்தினோடு பேசித் தொடர்பு கொள்ளும் நெறியினை வகுக்கின்றது.

நாம் அன்புடன் நினைந்து துதிக்கும்போது, நம்மை இறைவன் கவனிக்கின்றார்; நம்மைத் தமது பாதுகாவலில் ஈர்த்து அமர்த்தி ஏற்றருள்கின்றார். நமது தந்தையாக விளங்கும் இறைவன்பால் நாம் அன்புத் தொடர்புகொண்டு தியானித்து உரையாடினால், அவர் நமக்கு இரங்கி, ஏற்ற இனிய மறுமொழி களைத் தருகின்றார். நாம் ஏதும் அறியாமலே நம்முள்ளத்தே போந்து, நல்லனவும் தீயனவும் பகுத்துக் காட்டி உணர்த்துகின்றார்! வழிபாடு நம் உள்ளத்திற்கு அமைதியையும், உணர்விற்கு ஆற்றலையும், உடலுக்கு நலத்தையும் விளைவிக்கின்றது.

இறைவனிடம் நம்மை முழுதாக ஒப்படைத்து அடைக்கலம் புகுதலும், இறைவனின் அருளைப் பெற விரும்பி அவரைப் போற்றித் துதித்தலும், அவர் நமக்குச் செய்து போதருகின்ற அளவில்லாத உதவிகளுக்கு நன்றி தெரிவித்துப் பணிதலும், நம்முடைய குற்றங்களையும் பாவங்களையும் மன்னித்துப் பொறுத்தருளுமாறு மனங்கரைந்து உருகி மன்றாடி இரத்தலும், அவர்தம் திருவுள்ளம் உகக்கும்வண்ணம் அறநெறி சிறிதும் பிறழாமல், மனமொழி மெய்கள் தூயனவாய், மன்னுயிர்களுக்கு உதவியாகுமாறு, வாழ்க்கையை ஏற்றபெற்றி அமைத்துக் கொள்ளுதலும் பிறவுமே, வழிபாடு ஆகும்.'' —ஆசிரியர்.

திருவாசகச் சொற்பொழிவுகள்

'தமிழ்க்கடல்' 'சிவமணி' திரு. இராய. சொக்கலிங்கம் அவர்களின் நினைவு அறக்கட்டளையின் சார்பில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L. அவர்கள், 24-3-80 முதல் 28-3-80 முடிய, ஐந்து நாட்கள், திருவாசகம் பற்றி,

1. திருவாசகச் சிறப்பு
2. திருவாசகத்தின் இலக்கியத் திறன்
3. திருவாசகமும் திருவருட்பாவும்
4. திருவாசகமும் திருக்கோவையாரும்
5. திருவாசகத்தில் சைவசித்தாந்தம்.

என்னும் தலைப்புக்களில், ஐந்து சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பேராசிரியர் திரு. டாக்டர் எஸ். அகஸ்தியலிங்கம், M.A.,Ph.D. திரு. டாக்டர் மு. கோவிந்தசாமி, M.A., Ph.D. ஆகியோர், இச் சொற்பொழிவுகளுக்குத் தலைமை தாங்கினர். டாக்டர் திரு. கே. இலட்சுமணசாமி, M.A., Ph.D. அவர்கள், முதல் நாளிலும், இறுதிநாளிலும் முறையே வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்றார்,

சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்துக்கள்

'சித்தாந்தக் கலைச்செல்வர்'

திரு க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.,

தனிஅலுவலர், சைவசித்தாந்தத் தத்துவத்துறை,

மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை-21.

எல்லா நூல்களாலும் ஆராயப்படும் பொருள்களை இறை, உயிர், தளை என்று மூன்றாகப் பகுத்து உணரலாம். இவை என்றும் உள்ள பொருள்கள். இவற்றுள் இறை என்பது இயற்கை முற்றுணர்வு உடைதாய், உயிர்களை உணர்த்தவல்லதாய் உள்ளது. அஃது ஒன்றே. உயிர்கள் தாமே உணரமாட்டாதனவாய், உயிர்களைப் பிணித்துக் கட்டுப்படுத்துவன. இவை ஆணவம், கன்மம், மாயை என மூன்றாக எண்ணப்படும். ஆணவம் உயிர்களின் இயற்கைக் குற்றமாய், அவற்றின் அறிவு, விழைவு, செயல் ஆற்றல்களை நிகழவொட்டாது பிணித்து மறைக்க வல்லது. பொருள்களைக் காண வல்ல கண்ணை அவற்றைக் காணாதபடி மறைக்கும் இருள் போன்றது ஆணவம்; உயிர்கள் கண் போன்றவை.

நம் அறிவிற்குப் புலப்படும் உலகத்துப் பொருள்களை உடம்பு எனவும், உடம்பில் அமைந்துள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி போன்ற கருவிகள் எனவும், உடம்பு உலவுவதற்கு இடமாகவுள்ள உலகு எனவும், உடம்பு நிலைபெறுதற்கு அதனால் நுகரப்படும்பொருள் எனவும் நான்காக வகுத்துக் காண்கின்றனர் சைவசித்தாந்திகள். இவற்றை முறையே தனு, கரணம், புவனம், போகம் என வழங்குவர். தனு-உடம்பு; கரணம்-உடம்பிற் பொருந்தியுள்ள கருவிகள்; புவனம்-உயிர்கள் உடம்போடு தங்கும் இடம்; போகம்-நுகர்ச்சி; இங்கு அச்சொல் நுகர்பொருள்களைக் குறிக்கின்றது. இருளில் அழுந்திப் பொருள்களைக் காணமாட்டாத கண், விளக்கு வரின் இருளால் வந்த மறைப்புச் சிறிது நீங்கிப் பொருள்களைக் காணும். அதுபோல, ஆணவத்தால் மறைக்கப்பட்ட அறிவு விழைவு செயல்களையுடைய உயிர்கள், உடம்பையும் அதன்கண் உள்ள கருவிகளையும் பெறும்போது, தம் அறிவு விளங்கப் பெற்றுப் பொருள்களை அறிகின்றன. ஆதலினால், ஆணவத்தை இருளுக்கு ஒப்பிட்டால், உடம்பை விளக்கிற்கு ஒப்பிடலாம். மேலும், உலகத்தையும் உலகப்பொருள்களையும் பற்றி ஆய்ந்து உணர்ந்து வருவதாற்றான் நம் அறியாமை தேய்ந்து அறிவு நுணுகி வளர்ந்து வருகிறது. ஆதலால் உடம்பு கருவி உலகம் நுகர்ச்சிப்பொருள் என்னும் நான்கையுமே விளக்கொளிக்கு ஒப்பிடுதல் தகும். இந்நான்கும் தோன்றி நின்று மறையும் மாற்றம் உடையனவாய் உள்ளன. இவற்றை ஆக்கப் பொருள்கள், காரியம் எனக் கூறுவது ஆய்வாளர் மரபு. ஆக்கப் பொருளெல்லாம் தமக்கு அடிப்படையான புலப்படாத, அருவமாய் உள்ளதொரு நுண்ணிய நிலையிலிருந்துதான் புலப்படும் உருநிலையை எய்தும் எனக்கொள்வதும் நூல்களின் துணிவு ஆகும். இவ்வாறு காணப்படும் பொருள்கள் எல்லாவற்றிற்கும் முதற் காரணமாய் உள்ள பொருளைச் சைவ சித்தாந்தத்தில் மாயை எனக் கூறுகின்றனர். சாங்கியர்கள் அத்தகைய பொருளைப் ''பகுதி'' (பிரகிருதி) என்பர். சைவ சித்தாந்தத்தில் அப்பகுதியும் ''காரியநிலை'' எனக்கொண்டு, அதனினும் நுண்ணியதாய், அருவாய், யாங்கணும் நிறைந்ததாய், வெவ்வேறு வடிவங்களாகத் தோற்றவல்லதாய், அறிவில்லதாய், ஆற்றல் உருவாய் ஒருபொருள் உண்டு; அதுவே 'மாயை' என்பர். மாயை என்னும் சொல் வடமொழியில் ''மாயா'' என வழங்கும். மா-ஒடுங்குதல்; யா-வருதல் எனச் சொற்பொருட் காரணங் காட்டி, எல்லாப் பொருளும் எதன்கண் ஒடுங்கி, மீள எதன்கண்நின்றும் வெளிப்படுமோ அதுவே 'மாயா' அல்லது 'மாயை' எனச் சித்தாந்தம் கூறுகிறது. ''இம் மாயையிலிருந்து உயிர்களின் நன்மையின் பொருட்டு இறைவனாற் படைக்கப்பட்டதே உலகு'' என்பது சைவநூல் துணிபு. மாயையும் அதன் காரியங்களும் உயிர்க்கு அறிவை விளக்குவனவாக அமைந்தபோதிலும், அவை நாம் காட்டும் பொருளையே காட்டி நின்று, உயிர் தன் உண்மையை அறியவொண்ணாமல் தடுக்கும்; ஆதலினால் மாயையும் தளை எனப்பட்டது.

உயிர்கள் ஆணவத்தால் மறைப்புண்டு கிடந்த நிலை கேவலம் எனப்படும். கேவலம்-தனிமை. அவ்வாறு தனிமையில் அறிவின்றிக் கிடந்த உயிர்கள் ஓரளவு ஆணவத்தின் பிணிப்பினின்றும் நீங்கி அறிவு பெற்று வளர்தற் பொருட்டு உடம்பு முதலியவற்றைப் பெறும் காலத்தில், அவை சகல நிலையை உடையன எனக் கூறப்படும். சகலம் என்பதன் பொருளைப் பின்னர்த் தெரிந்து கொள்ளலாம். இப்பொழுது, அஃது உடம்போடு கூடியுள்ள நிலை என்ற அளவில் தெரிந்து கொண்டால் போதும். உடம்பு என்பது நுண் உடலையும் குறிக்கும். ஆதலால், தத்துவங்களோடு கூடிப் பிறந்திறந்து வரும் நிலை சகலம் என்க. இனி, உயிர்கள் உடம்பு முதலிய கருவிகளைப் பெறும்போது அது நினைத்தல், பேசுதல், செய்தல் முதலிய வினைகளைச் செய்யும் போக்கு அமைந்து விடுகிறது. இப்போக்கை அல்லதுபழக்கத்தைத் தான் கன்மம் என்று சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன. இதுவரையில் விளக்கி வந்ததிலிருந்து, உயிர்களைக் கட்டுப்படுத்தும்தளைகள் ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும் என்பதை உணர்ந்து கொள்ளலாம். இறை, உயிர், தளை என்னும் இவற்றை வடமொழியில் பதி, பசு, பாசம் என்னும் சொற்களாற் குறிப்பர். பதி என்னும் சொல் காப்பாற்றுவது

என்னும் பொருளில் உள்ளது. பசு என்னும் சொல் ''கட்டுற்றது'' என்னும் பொருளில் உள்ளது. பாசம் என்னும் சொல் ''கட்டும் கருவி அல்லது கயிறு'' என்னும் பொருளில் உள்ளது. இந்த மூன்று பொருள்களும் ஒன்றி லிருந்து மற்றொன்று வந்தது எனவோ, அல்லது ஒன்றன் திரிபுக்காட்சிதான் மற்றவைஎன்பதோ சைவசித்தாந்தத்தில் கூறப்படுவதில்லை. பிற சமயங்கள் அவ்வாறு கூறும்.

உயிர்களின் நிலை :

மேற்கூறிய முப்பொருள்களுள் பதி எனப் படும் முதற்பொருள் எவ்வகை மாறுதலும் இல் லாத செம்பொருளாய் நிற்கும். 'செம்பொருள்' என்னும் தமிழ்ச் சொல்லுக்கு நேர் வடசொல் 'சத்து' என்பது. முதற்பொருள் செம்பொரு ளாய் நிற்பதோடு, அறிவின்ப வடிவாகவும் உள் ளது. ஆதலினால் அதன் தன்னியல்பை வட நூலார் ''சச்சிதானந்தம்'' (சத்து சித்து ஆனந் தம்) என்பர். தமிழ் நூலார் ''உண்மையறி வின்பப் பொருள்'' எனவும், ''போத ஆனந்த மெய்ப்பொருள்'' எனவும் முதற்பொருளை வழங்குவர்.

பாசம் எனப்பட்ட ஆணவம், மாயை, கன்மம் என்பவை அறிவில்லனவாய் இருப்பவை. அவற்றுள் ஆணவம் தன்வலி தேயக்கூடியது. மாயை என்றும் உள்ள பொருளாயினும், தன் ஒரு பாகத்தில் உடம்பு, கருவி, நிலம், நுகர்ச்சிப் பொருள் எனப் புலப்பட்டு வருவதாயும், மீள வும் அவ்வுரு நிலைகுலைந்து அருவமாவதாக வும் உள்ளது. வினையும் செய்யப்படும்போது நல்வினை, தீவினை எனப் புலப்பட்டு நிற்கும்: செய்தபின் செய்தவனது அறிவில் (புத்தியில்) பதிவு ரூபமாய்ப் புலப்படாது நின்று, 'புண்ணிய பாவம்' எனப் பெயர்பெறும். அப்புண்ணிய பாவமே பின் நுகரப்படும்போது, இன்பத் துன்பும் என விளைந்து மறையும். நல்வினை தீவினைகளை ஆகாமியம் எனவும், பருவினை (தூலவினை) எனவும் கூறுவர். அவை ஒருவன் புத்தியில் புண்ணிய பாவமாய் நிற்கும் நிலை யில் 'சஞ்சிதம்' எனவும், ''நுண்வினை'' (சூக் குமவினை) எனவும் பெயர் பெறும். இப் புண்ணிய பாவங்கள் இன்பத்துன்பமாக நுகரப் படும் காலத்தில், ''பிராரத்தம்'' எனவும், ''மிகுநுண்வினை'' எனவும் பெயர்பெற்று நிற் கும். மிகுநுண்வினை-அதிசூக்குமவினை. இத னால், பாசம் மூன்றும் நிலைவேறுபாடு உடை யன என்பது விளங்கும். நிலைவேறுபாடு உடையவற்றை வடநூலார், ''அசத்து'' என் பர். சிறப்பாக மாயையின் காரியமாகிய உடம்பு, கருவி, நிலம், நுகர்ச்சிப் பொருள் என்னும் நான்கும் அசத்தே ஆகும்.

உயிர் ஒரு கொடியைப்போல் ஏதேனும் ஒரு பொருளைச் சார்ந்து அதனைப் பற்றியே இருக்கும். தோற்றமில்லாக் காலமாக அஃது ஆணவத்தைப் பற்றித் தன் இருப்பும் தோன் றாது இருந்தது எனக் கொள்ளப்படுகின்றது. இந்நிலையே அதன் கேவலநிலை என மேலே குறிக்கப்பட்டது. இது தாயின் கருப்பத்தில் உள்ள குழவியின் நிலை போன்றது. ''காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண் இலாக் குழவியைப்போல்'' எனத் தாயுமானவர் இந் நிலையைக் குறிக்கின்றனர்.

கருவினின்றும் வெளிப்பட்டு உலகத்தில் விளையாடி வளர்ச்சியடையும் குழவியின் பரு வம் போன்றது உயிரின் சகல நிலை. இந்நிலை யில் உயிர் ஆணவத்தைப் பற்றி அறியாமையில் அழுந்தியும், மாயையின் காரியங்களைப் பற்றி நின்று சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய தாய்ப் பிறந்தும், பின் இறந்தும் வரும். இப் பிறப்பு நிலையிலும் உயிர்க்கு நினைப்பும் மறப் பும் மாறி மாறி வரும். இவற்றுள் நினைப்பு, விழிப்பு, பிறப்பு என்பவை மாயையின் காரிய மாகிய அசத்துக்களைச் சார்வது பற்றி உள வாகின்றன. பிறப்பு, உறக்கம், இறப்பு என் பவை உயிர் மாயையின் காரியங்களைப் பற்றா மல், ஆணவமாகிய அசத்தில் அழுந்துவதால் வருவன. கேவலம், சகலம் என்னும் இவ்விரு நிலைகளையும் மெய்ந்நூல்கள் முறையே இரவு எனவும் பகல் எனவும் குறிக்கும்.

இனி உயிர்க்கு இயற்கையில் இருத்தற் குரிய தூய முடிநிலையாகிய மாறுபடாத உயர் நிலை, இவை இரண்டையும் கடந்த இராப்பக லற்ற நிலை. அந்நிலையில் உயிர்க்குச் சார் பாகவும், சூழ்நிலையாகவும் உள்ளது இறைவ னது திருவருள் ஒளியேயாகும். முதல்வன் குண மாகிய திருவருளில் அழுந்தி நிற்கும் இந்நிலை சுத்தநிலை எனப்படும். இந்நிலையில், மூலமல மாகிய இயற்கையழுக்கும், மாயையாகிய செயற்கையழுக்கும் உயிரைப் பற்றுவதில்லை. நள்ளிரவில் விளக்கு ஒன்றும் இல்லாத நிலை போன்றது கேவலம் எனப்பட்ட அறியாமை நிலை. இராப்போதில் சிலவும் பலவுமாகிய விளக்குகள் எரியும் நிலைபோன்றது, பாச அறி வுள்ள சகலநிலை. விடிந்தபின் ஞாயிற்றின் ஒளியில் இருளும் விளக்கொளியும் மறைய, எல் லாப் பொருள்களையும் விளங்கக்காணும் நிலை போன்றது சுத்தநிலை எனப்பட்ட தூய முடி நிலை. இதனால் உயிர் பிறப்பு நிலையில் அசத்தாகிய பாசத்தைச் சார்ந்து அசத்தாக நிற்கும் என்பதும் ஓரளவு விளங்கும். உயிர் இவ்வாறு அசத்தைச் சார்ந்து அசத்தாய் இருந்து, பின் சத்தைச் சார்ந்து அசத்தின் நீங்கிச் சத்தாய் நிற்கும் இயல்புடைமை பற்றிச் ''சதசத்து' எனப்படும். உயிரின் நிலைகளைக் கேவலம், சகலம், சுத்தம் என மூன்றாக வழங்கி னோம். ஆயினும், அவற்றைப் 'பிறப்பு நிலை' 'வீட்டுநிலை' என இரண்டாக வழங்குவதும் உண்டு. பிறப்பு நிலையைக் 'கட்டுநிலை' என வும், 'பந்தம்' 'பெத்தம்' எனவும் குறிப்பர். வீட்டு நிலையை மோட்சம் அல்லது முத்திநிலை எனக் குறிப்பர்.

உயிர்களின் பிறப்புநிலை பற்றி ஆராய்ந்து உரைக்கும் இயல்புகள் பொது இயல்பு அல்லது தடத்தலக்கணம் எனப்படும். வீட்டுநிலை பற்றிக் கூறப்படும் இயல்புகள் தன்னியல்பு, உண்மை இயல்பு, சிறப்பியல்பு, சொரூபலக்க ணம் என்னும் பெயர்களாற் குறிக்கப்படும். முப்பொருள்களைச் சிறப்புநிலை பற்றிக் குறிக் கும்போது அவை பதி, பசு, பாசம் எனக் குறிக் கப்படும்; அவையே முத்திநிலை பற்றிக் குறிக் கப்படும்போது சிவம், ஆன்மா, மலம், மாயை கன்மம் எனக் குறிக்கப்படும்.

***

வீரசைவம்

திரு. ந. விவேகானந்தன், M.A.,

'வீரசைவம்' என்னும் சொல், பேச்சு வழக்கில் மக்கள் பலராலும் பலகாலும் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் மக்கள் அதன் உண்மைச் சொற் பொருளை யுணர்ந்து கொள்ளாமல், விபரீதமான முறையில், மிகவும் பிழையான திரிபுபட்ட பொருட்குறிப்பிலேயே வழங்கி வருதலைக் காண்கின்றோம். 'வீரம்' என்பதனை மக்கள் பலரும், முரட்டுத்தனம் பிடிவாதம் மூர்க்கத்தனம் என்பன போன்ற பொருள்களின் குறிப்பிலேயே. பெரிதும் தவறாக வழங்கி வருகின்றனர். 'வீரசைவம்' என்றால், அஃது ஏதோ பிற சமயங்களை வெறுக்கும் குறுகிய நோக்குடைய பிடிவாதச் சைவம் போலும் என்றே மக்கள் பலரும் பொதுவாகப் பிழைபடக் கருதுவதாகத் தெரிகின்றது.

வீரசைவம் என்பது கன்னட நாட்டில், கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒருவகை மறுமலர்ச்சி இயக்கச் சமயம் ஆகும். சிவ வழிபாட்டிலும் நெறியிலும் மிகவும் ஈடுபாடு கொண்டு, உறுதியுடன் அசைவின்றி நின்ற சமயமே 'வீரசைவம்' என்னும் சிறப்புப்பெயர் பெறுவதாயிற்று.

நமது தமிழ்நாட்டில், அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் என்னும் சமய குரவர்கள் நால்வராலும், அவர்கள் வழியே தோன்றிய மெய்கண்டார், அருள்நந்தி சிவாசாரியர், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாசாரியர் என்னும் சந்தான குரவர்கள் நால்வராலும் பரப்பி வளர்க்கப்பட்ட சிவ வழிபாட்டுக் கொள்கையும் நெறியுமே 'சைவசமயம்' 'சித்தாந்த சைவம்' 'சைவசித்தாந்தம்' என்னும் பெயர்களால் தொன்றுதொட்டு வழங்கி நிலவி வருகின்றது.

ஆயினும் சிவ வழிபாட்டில் உறுதி, சிவனடியார்க்குப் பணிபுரிதலில் ஈடுபாடு, முதலிய சில கொள்கை ஒப்புமைகள் காரணமாக, கன்னட நாட்டில் தோன்றிய வீரசைவம், தமிழ்நாட்டிலும் அங்கங்கே தழுவிக் கொள்ளப்பட்டுப் பரவி நிலைபெற்றுள்ளது.

வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார், கொலைமறுத்தல் என்னும் நூல்களை இயற்றியருளிய கோவைப் பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், விருத்தாசலம் குமார தேவர், திருவண்ணாமலைக் குகை நமச்சிவாயர், குருநமச்சிவாயர், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள், மயிலம் சிவஞான பாலைய சுவாமிகள், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் முதலிய சான்றோர் பெருமக்கள் பலரும், வீர சைவ நெறியினைப் போற்றி ஒழுகியவர்களே ஆவர்! துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியருளிய பிரபுலிங்க லீலை, சித்தாந்த சிகாமணி முதலியன தமிழிலுள்ள சிறந்த வீரசைவ நூல்கள் ஆகும்.

வீரசைவர்கள், தம் குருவினால் முறைப்படி அளிக்கப்பெற்ற இலிங்கத்தினைத் தலை கழுத்து தோள் மார்பு என்னும் இடங்கள் ஒன்றில், எப்போதும் பிரிவற அணிந்து கொண்டிருப்பர். இலிங்கதாரணம் வீரசைவர்களுக்கு இன்றியமையாத ஒரு பெருஞ்சிறப்பு அடையாளம் ஆகும். வேதம், ஆகமம், உபநிடதம், புராணம் முதலிய பலவற்றாலும் வற்புறுத்தப்படுவது இலிங்கதாரணம் என்பது வீரசைவக் கொள்கை.

சதுமறை யுள்ளும், மிக்க
சாத்திரங் களினும், ஈரொன்
பதுவித புராணத் துள்ளும்
பகர்தரு காமி கம்தான்
முதல்வரும் ஆக மத்தும்
மொழிந்திடப் பட்டிடும், சந்
ததமும் மெய்விடா இலிங்க
தாரணம் விறற்சை வர்க்கே

—சித்தாந்த சிகாமணி

எனவரும் செய்யுளால், இலிங்கதாரணம் செய்து கொள்ளுதல் வீரசைவத்திற்கு மிகவும் இன்றியமையாத சிறப்பியற் கொள்கை என்பது உணரலாம். . அதுபற்றியே வீரசைவர்களுக்கு 'இலிங்காயதர்' என்றும் பெயர் வழங்கும்.

வீரசைவர்கள் தம் உடலில் பிரிவற எப்பொழுதும் அணிந்து கொண்டு, பூசைபுரிந்து வழிபட்டு வரும் இலிங்கத்தை 'இஷ்டலிங்கம்' எனப் போற்றி வழங்குவர். அதற்குச் செய்யும் பூசை தரிசனம் மூர்த்தம் பிரசாதம் நிஷ்டை தியானம் ஆகியவற்றையே அவர்கள் பெரிதும் முதன்மையும் சிறப்புமாகக் கொள்வார்கள். தத்தமக்குரிய இஷ்டலிங்கத்தைத் தவிர, வேறு பரார்த்தம் என உள்ள பிற லிங்கங்கள் மாட்டும், அவர்கள் அத்துணை அன்பு செலுத்த மாட்டார்கள். கற்புடைய நங்கை ஒருத்தி, தனக்கென விரும்பி வரித்துக்கொண்ட கணவனைத் தவிர வேறுபிறர் எவரையும் மனத்தி

னாற் கருத மாட்டாளாதல் போல, தனக்குரிய இஷ்டலிங்கம் தவிர வேறு பிறிது எதிலும் அன்பு செலுத்தாத உறுதிப்பாடு உடைமையே, 'வீரசைவம்' ஆகும்.

கணவன்பால் இன்பமுறும் கற்புடையாள்
வேறோர்
திணவன்பால் இன்பமுறச் சிந்தித்து-அணைவுறாள்;
ஆங்கதுபோல் இஷ்டலிங்கத் தாகும்அன்பு
வேற்றுலிங்கத்
தோங்கவிடா தாங்கதும் வீரம்
—அத்துவித வெண்பா

வீரசைவர்கள், தீக்கை செய்துகொண்டு தம்மைப்போல் இஷ்டலிங்க பூசை செய்துவரும் இயல்பினர் அல்லாத ஏனையோர் பிறர், எத்தகைய சிறப்பும் அன்பும் உடையவர்களேயாயினும், அவர்களோடு ஒன்றாக இருந்து உண்ணுதல் முதலிய எந்தச் செயலையும் செய்ய ஒருப்படாத திடமான கொள்கை உடையவர்கள் ஆவர்! இத்தகைய உறுதிப்பாட்டினாலும் அவர்களின் நெறிக்கு 'வீரசைவம்' எனப்பெயர் அமைவதாயிற்று.

இவ்விரதம் இல்லாதார் எவ்விரதர் ஆயிடினும்
அவ்வவரோ டொன்றாய் அருந்தல் முதல்
எவ்வெவையும்
உள்ளத்தா லும்நினையா துற்றஇடம் சற்றகலாக்
கொள்கைத்தாம் கோலமும் வீரம்
—அத்துவித வெண்பா.

இங்ஙனம் தமது உடலில் இலிங்கதாரணம் செய்துகொண்டு, தமது ஞானாசிரியர் உபதேசித்தருளிய முறைப்படியே இஷ்டலிங்க பூசை புரிதலில் மிகுந்த திடமும் உறுதியும் பூண்டு ஒழுகும் வீரம் உடைய சைவரே, வீரசைவர் எனப்படுவர்.

இதனைப் பின்வரும் சித்தாந்த சிகாமணிச் செய்யுள் தெளிவுற விளக்குதல் காணலாம்.

அத்தனை அகம் தரிக்க
அசத்தன் எனினும் அதாஅன்று
சத்தனே எனினும் ஞான
தற்பர லிங்க மேஎன்
புத்தியின் திட்பம் எய்திப்
புறத்து இலிங்கம் தரிக்க
வித்தக நெறியு ணர்ந்தோர்
வீர சைவர்கள் தாம் அன்றே (1)

தம்பொருளாம் இலிங்கம் தன்னை
வள்ளிதழ் அவிழ்ந்த
வம்பலர் கந்தம் ஆதி
மருவுற முறையிற் கொண்டு
கம்பமில் மனத்தி னோடு
கரபீடத் தினில்அர்ச் சிப்பர்
இம்பரின் என்றும் சுத்தர்
எனப்படும் வீர சைவர் (2)

வீரசைவன், என்னும் சொல்லுக்குத்துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாம் இயற்றிய 'சித்தாந்த சிகாமணி' என்னும் நூலில் பின்வருமாறு பொருள் விளக்குகின்றார்கள்.

(1) அருமை மிகுந்த வேதாந்தச் செந்நெறியினால் விளைகின்ற ஞானமே வித்தை எனப்பெயர் பெறும். அவ்வித்தையில் அன்பு கொண்டு ஈடுபட்டு விரவி நிற்பவன் வீரன் என்னும் சிறப்பைப் பெறுவான்.

அரியவே தாந்தத்தின் ஆகும் ஞானமே
மருவரும் வித்தை என் றுரைப்பர்; மற்றதில்
விரவினோன் யாவன்? மற் றனையன் வீரன்என்று
உரைதரு கிற்பர் மெய்யுணர்ந் துளோர்களே

(2) வீ என்பது வித்தையைக் குறிக்கும். ர என்பது ரமித்தல் அல்லது மகிழ்தலையுணர்த்தும். சைவம் என்பது சிவனை வழிபடும் நெறி. சிவனை வழிபடும் நெறியாகிய ஞானவித்தையில் ஆர்வம் கொண்டு ஈடுபட்டு மகிழ்பவன் எவனோ, அவனுக்கு வீரசைவன் என்று பெயர்.

சித்தம் ஆகும் சிவமயம் ஆகிய
வித்தை யூடு விசேடம தாகியே
எத்தினால் இங்கு இரமிப்பன்; அன்னவன்
பொய்த்தி டாத புகழ் வீர சைவனே.

(3) சிவனும் சீவனும் ஆகிய இருவரும் ஒன்றுபடுதல் ஆகிய சிவசீவஐக்கியம் என்னும் வித்தையில், பிறப்பு இறப்புக்கள் கெடுமாறு, ஒன்றி மகிழ்ந்து ரமிப்பவன் எவனோ அவன் வீரசைவன் ஆவான்.

தீது அகன்ற சிவசீவ ஐக்யமாம்
வீத ரும்பெரு வித்தையின் நன்குறச்
சாதம் இன்றி ரமிக்கும் அச் சைவன்மற்று
ஓதில் அன்னோன் உயர் வீரசைவனே

இனி இப்பொருள்களிலெல்லாம் வேறாக, மிகவும் புகழ் வாய்ந்த தத்துவநூற் பேராசிரியர் ஆகிய சுரேந்திரநாத் தாஸ் குப்தா என்பவர், ஒரு பொருள் கூறுகின்றார். அயலார் அல்லது பகைவர்களிடம் இருந்து தம்முடைய சமயத்தினைப் பாதுகாத்துக் கொள்ளுதலில் வீரத்திறன்மிக்கு விளங்கியவர்கள் ஆதலின், வீரசைவர்கள் என்று அழைக்கப்பட்டனர் எனக்கொள்ளுதல் பொருத்தம் எனக் குறிப்பிடுகின்றார் அவர்!

நாட்டின் நலத்திற்காகவும் பாதுகாப்பிற்காகவும் அருஞ்செயல்கள் பல ஆற்றலும், உயிர் கொடுத்து உதவுதலும், ஒப்புயர்வற்ற பெருமை உடையனவாக உலகெங்கணும் மதிக்கப் பெறுகின்றன. அங்ஙனமே தங்கள் சமயநெறிக்குப் பிறராற் கேடு நேராமற் பேணிப் பாதுகாத்துக்

"The Siddanta-Sikhamani gives a fanciful interpretation of the word, 'Vira' as being composed of 'Vi' meaning knowledge of identity with Brahman, and 'ra' as meaning someone who takes pleasure in such knowledge . But such an etymology accepting it to be correct would give the form 'Vira' and not 'Veera'. No explanation is given as to how 'Vi' standing for 'Vidya' would lengthen its vowel into 'Vee'......

I therefore venture to suggest that Veerasaivas were called Veeras or Heroes for their heroic attitude in an aggressive or defensive manner in support of their faith.

—Surendranath Dasgupta, A History of Indian Philosophy, Vol. V., P.44-45.

கொள்ள முயலுதலும் சிறப்புக்குரியதேயாகும். நாட்டுப்பற்று மிக்கு விளங்கி, அதன்கண் உறைப்பும் விழிப்பும் பெற்று ஒளிர்தல் இன்றியமையாத கடமையாதல் போலவே, தத்தம் சமயவுரிமைகளையும் பண்பாடுகளையும் நெறிமுறை சிறிதும் பிறழாமற் போற்றிப் பாதுகாத்துக் கொள்ளும் கருத்தும் கடமையுணர்வும் பெற்று வாழ்தலும், பெருமைக்குரியதாகும் என்பதில் ஐயமில்லை. கி. பி. 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் தம் கன்னட நாட்டில், சைவ சமயம் நலிவுற்றழிந் தொழியாமற் பொலிவுறச் செய்யும் பொருட்டு, அதன்கண் ஆழ்ந்த பற்றும் அளப்பரிய ஈடுபாடும் வாய்ந்து சிவலிங்க தாரணம் செய்துகொண்டு சிவ வழிபாட்டில் உறைத்து நின்றவர்களே, வீரசைவ நெறியினர் என்பது சாலவும் பொருந்துவதேயாகும். தாஸ் குப்தா அவர்களின் கருத்தை வலியுறுத்தும் முறையில் பின்வரும் சித்தாந்த சிகாமணிச் செய்யுள் அமைந்திருத்தலும் அறிந்து இன்புறுதற்குரியன.

யாண்டொரு தாவ ரத்திற்கு
இடையூறு வரினும், பத்தர்க்கு
ஏண்தரு சிவவே டத்தோர்க்கு
இடர்கள்வந் துறினும், நில்லாது
ஆண்டுஉயிர் விடுத்தே யேனும்
அளிக்க! மெய்ப் பரன் பொருட்டு
மாண்டவன் சிவனோ டொன்றாம்
பதத்தினை மருவும் அன்றே!

இதுகாறும் விளக்கியவற்றால், 'வீர சைவம்' என்பது ஏதோ பிற சமயங்களை வெறுக்கும் குறுகிய நோக்குடைய பிடிவாதச் சைவம் போலும் எனச் சாதாரண மக்கள் சிலர் கருதுவது தவறு என்பதும், கன்னட நாட்டில் தோன்றியருளிய பசவர் முதலிய சான்றோர்களால் வளர்க்கப்பெற்ற ஒரு சிறந்த பண்பாட்டு நெறியே அஃது என்பதும், தமிழ்ப் பெருஞ் சான்றோர்கள் பலர் அதனைத் தழுவிப்போற்றி வளர்த்து மகிழ்ந்துள்ளனர் என்பதும் பிறவும் தெளியப்படும்.

ஆசிரியரின் வேண்டுகோள்!

நமது 'திருக்கோயில்' திங்கள் இதழ், 1958-ஆம் ஆண்டுமுதல், கடந்த 22 ஆண்டுகளாக, மிகவும் நல்லமுறையில் சிறப்புற நடைபெற்று வருகின்றது. இதற்குச் சமயம்-தத்துவம்-இலக்கியம்-வரலாறு-கல்வெட்டு முதலியன பற்றிய பலதிறக் கட்டுரைகள், தக்க அறிஞர்களிடமிருந்து வரவேற்கப் பெறுகின்றன.

பொதுவர்கக் கடவுளுணர்ச்சியையும், சமயநெறி ஒழுக்கத்தையும் வளர்க்க வல்லனவாக, கட்டுரைகள் இருத்தல் வேண்டும். தமிழக மக்களின் இரு கண்கள் போல விளங்கிவரும் சைவம் வைணவம் பற்றியும்—அவற்றுடன் தொடர்புடைய பல்வேறு தோத்திரங்கள் சாத்திரங்கள் இலக்கியங்கள் பற்றியும்—அவற்றைச் சேர்ந்த அடியார்கள் ஞானிகள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள் வாய்மொழிகள் பற்றியும்—அவற்றிற்குரிய தலங்கள் கோயில்கள் விழாக்கள் முதலியன பற்றியும்—விளக்குவனவாகக் கட்டுரைகள் அமைதல் இன்றியமையாதது.

கட்டுரைகள் ஒவ்வொன்றும், தனித்தனியான அழகிய தலைப்புக்களில், 3 அல்லது 4 பக்கங்களுக்கு மேற்படாமல், நல்ல தமிழில், கலப்பும் கொச்சையும் அற்ற தூய நடையில், இனிதாக எழுதப் பெற்றிருத்தல் வேண்டும். கட்டுரைகளைப் பத்திகள் பிரித்தும், உள்தலைப்புக்கள் கொடுத்தும், கட்டுரையின் அமைப்பிற்குரிய எடுப்பு தொடுப்பு முடிப்பு ஆகிய உறுப்புக்களுடன், தாளின் ஒரு பக்கத்தில், தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும். மேற்கோட் பாடல்களைக் கடின சந்திகள் பிரித்தும், சீர் தளைகள் பிரித்தும், அச்சில் அழகுற அமையத் தகுந்தபடி வரிகள் பிரித்தும், எழுதுதல் வேண்டும்.

வரப்பெறுகின்ற கட்டுரைகளில், நல்ல தரமுள்ளவையாகவும், பயனுள்ளனவாகவும், இத்துறையினால் கருதப்படும் கட்டுரைகள், 'திருக்கோயில்' இதழில், அவ்வப்போது தொடர்ந்து வெளியிடப் பெற்றுவரும். வெளியிடப் பெறாத கட்டுரைகள் குறித்து, அன்பர்கள் கடிதப் போக்குவரத்துகள் எதுவும் செய்தல் வேண்டா. கட்டுரைகள், என்றும் போற்றிப் பாதுகாத்து வைத்திருந்து, பயின்று பயன்கொள்ளத் தக்கனவாக அமைதல், முதன்மையாகும்.

ஒவ்வொரு மாதமும் கடைசி வாரத்திற்குள், கட்டுரைகள் வந்து சேர்தல் வேண்டும். சுவாமி அம்பாள் முதலிய தெய்வத் திருவுருவங்கள், சிறந்த நல்ல சிற்பங்கள் ஓவியங்கள், கோபுரம் திருக்குளம் முதலிய கோயில் தோற்றங்கள், ஆகியவற்றின் அழகிய நிழற்படங்களையும் அன்பர்கள் அனுப்பி வைக்கலாம்.

—ஆசிரியர்.

திருப்புளிங்குடிக் கிடந்தான்

[திரு. எஸ். ஆர். கிருஷ்ணன், B.A.]

திருப்புளிங்குடி என்பது, ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற பாண்டிய நாட்டுத் திவ்விய தேசங்களில் ஒன்று. இது திருநெல்வேலி-திருச்செந்தூர் இருப்புப் பாதையில் ஒரு நிலையமாக உள்ள திருவைகுண்டம் என்னும் தலத்திற்குக் கிழக்கே 2 கல் தொலைவில் உள்ளது. ஆழ்வார்திருநகரி, தொலைவில்லி மங்கலம் (இரட்டைத் திருப்பதி), திருப்பேரை, சிரீவரகுணமங்கை, திருக்குளந்தை என்னும் தலங்கள், இத்தலத்திற்கு மிகவும் அருகில் உள்ளன. இங்குள்ள பெருமாளுக்குக் காய்சினவேந்தன் என்றும், பிராட்டியார்க்கு மலர்மகள் நாச்சியார், திருப்புளிங்குடி வல்லி என்றும் பெயர்கள் வழங்கும், நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில், திருப்புளிங்குடி என்னும் இந்தத் தலத்தை மங்களா சாசனம் செய்துள்ளார்.

''பண்டை நாளாலே நின்திரு வருளும்,
பங்கயத் தாள்திரு வருளும்
கொண்டு, நின்கோயில் சீய்த்துப் பல் படிகால்
குடிகுடி வழிவந்து ஆட்செய்யும்
தொண்டரோர்க்கு அருளிச் சோதிவாய்
திறந்து, உன்
தாமரைக் கண்களால் நோக்காய்,
தெண்டிரைப் பெருநல் தண்பணை சூழ்ந்த
திருப்புளிங் குடிக்கிடந் தானே''
—நம்மாழ்வார்.

சிறந்த இந்தத் திருப்பாடலின் சொற்பொருட் சுவைநலங்கள், பெரிதும் சிந்தித்து உணர்ந்து, மிகவும் சுவைத்து மகிழ்ந்து இன்புறத்தக்கவை.

பாடலின் பொருள்

''தெளிந்த அலைகளையுடைய தாமிரபரணியாறு பாய்கின்ற, குளிர்ந்த நீர்வளம் மிக்க வயல்களால் சூழப்பெற்ற திருப்புளிங்குடி என்கின்ற திருத்தலத்தில் பள்ளிகொண்டருள்பவனே! உன்னுடைய திருவருளையும், தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பெரிய பிராட்டியாருடைய திருவருளையும், பண்டைநாள் முதலாகவே அடைந்து, நின்னுடைய திருக்கோயிலில் திருவலகிடுதல் மெழுகுதல் முதலிய தொண்டுகளைச் செய்து, தொன்றுதொட்டு வழிவழியாக அடிமை செய்து வருகின்ற தொண்டர்களாகிய எங்கள்பால் இரக்கம் கொண்டு, ஒளிமிக்கு அழகிய நின் திருவாயைத் திறந்து, இனிய நல்லுரைகள் பலவற்றைக்கூறி, உன்னுடைய தாமரைமலர் போன்ற திருக்கண்களால் எம்மை நோக்கி யருள்வாயாக''! என்பது, இப்பாடலின் திரண்ட பொருள்.

உம்மைத் தவிர வேறு புகல் அற்ற அடியேன்பால் இரக்கம்கொண்டு, ஏதேனும் ஓர் ஈர நற்சொல் அருளிச் செய்யவும், எம் பிறவித் துயர் வெப்பம் தீரும்படி குளிர நோக்கியருளவும் வேண்டும் என்பது, இப்பாடலின் கருத்து.

பாடற்பொருள் நலங்கள்

(1) முதல் இரண்டு வரிகளாலும், ஆழ்வார் தொன்றுதொட்டு நெடுங்காலமாக வழிவழியே தொண்டு பூண்டொழுகும் தம்முடைய இயல்பினைக் குறிப்பிடுகின்றார். திவ்விய தம்பதிகள் எனப்படும் திருமகளும் திருமாலும் ஆகிய இருவரின் திருவருளையே துணையாகக் கொண்டு, நித்தலும் கோயில் தொண்டு புரிந்து வரும் நற்குடிப் பிறப்பில் தோன்றப் பெற்ற தமது பெருமையை, விதந்து பேசுகின்றார்.

(2) ''எதிர்சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய விதிசூழ்ந்ததால் எனக்கேல் எம்மான் திரிவிக்கிரமனையே' என்று அருளிச் செய்தவர் ஆகையாலே, ''பண்டை நாளாலே நின்திருவருள் கொண்டு'' என்று அருளிச் செய்தார். பெரிய பிராட்டியின் முயற்சியும் பரிந்துரையும் காரணமாகவே, பெருமாளின் திருவருள் வாய்த்தமையால் 'பங்கயத்தாள் திருவருளும் கொண்டு' என்று மொழிந்தருளினார்.

(3) முற்சொலற் பாலதை முன்னும், பிற்சொலற் பாலதைப் பின்னும் சொல்ல வேண்டுவதே முறை. அம்முறையில் பங்கயத்தாள் திருவருளை முன்னரும், பெருமாளின் திருவருளைப் பின்னரும், குறிப்பிட்டிருத்தல் வேண்டுமாயினும், காரியத்தை முன்னே சொல்லி, காரணத்தைப் பின்னர்க் கூறுவதும் ஒருவகை முறையாதலின், ''நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு'' என்று அருளிச் செய்தார்.

(4) குடிகுடி வழிவந்து ஆட்செய்யும் தம் தொண்டின் திறம் கூறுவார் ''நின்கோயில் சீய்த்து'' என்றார். இறைவன் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசங்களில் திருவலகிடுதல் மெழுகிடுதல் கோலமிடுதல் முதலியன பலவும், சிறந்த தொண்டுகளாக இத்தொடரால் குறிக்கப்பெற்றன.

(5) இறைவனுக்குத் தொண்டு பூண்டு ஒழுகுதல் சிறப்புடைத்தேயாயினும், இறைவனுக்கு வழிவழியே, பரம்பரை பரம்பரையாகக் குடிகுடி ஆட்செய்யும் சூழலிற் பிறந்து, தொண்டு புரிந்து ஒழுகல், மிக்க பெரும் சிறப்புடையதாதலின், ''பல்படி கால் குடிகுடி வழி வந்து ஆட்செய்யும் தொண்டர்'' என்று சிறப்பித்து விதந்தோதினார்.

(6) ''தொண்டனேற்கு'' என்று ஒருமையாகக் கூறாமல், 'தொண்டரோர்க்கு' என்று பன்மையாகக் கூறியது, தம்மோடொத்த பிறரையும் சேர்த்துக் கொள்ளும் பரந்து விரிந்த மனப்பான்மையால்.

(7) தமக்கு ஏதேனும் இனிய நல்லசொற் கூறியருளுதல் வேண்டுமென்பார் 'சோதிவாய் திறந்து' என்றார். பூ அலருமாபோலே வாய் திறக்கவும், அப்போது திருமுகத்தில் மலர்ச்சியும் செவ்வியும் மிளிரவும் வேண்டும் என்பார் ''சோதிவாய்'' என்றார்.

(8) இங்ஙனம் சோதிவாய் திறந்து கூறும் நல்ல இனிய சொற்களில் தோற்றாத பாசமும் பரிவும், பார்வையிலே நன்கினிது புலப்படும்படி குளிர நோக்கிக் கடைக்கணித்தருளல் வேண்டும் என்பார், ''உன் தாமரைக் கண்களால் நோக்காய்'' என்றார். இறைவனின் திருவருட் கடைக்கண் நோக்கம் படுதலால், எல்லா நலன்களும் இனிது விளையும் என்னும் உண்மை இதனால் வலியுறுத்தப் பெற்றது.

கவிதைச் சுவைத்திறன்

இங்ஙனம் மொழிக்கு மொழி தித்திப்பாக அமைந்துள்ள இச்சிறந்த பாடல், கற்போர் உள்ளத்தைக்கொள்ளைகொண்டு களிகூரும்பச் செய்வதாகும். காணுந் திறனற்ற குருடரும், கேட்கும் திறன் இழந்த செவிடரும், பேசும் நலம்பெறாத ஊமையரும், நடக்கமாட்டாத முடவரும், உலகிற் பலர் உளராதல் போலவே, கவிதைத் திறத்தையும், இலக்கியக் கலைநலத்தையும் சுவைத்து உணரமாட்டாத மனப்புலக் குறையரும், உலகில் மிகப் பலர் உண்டு. என்றி டேவிட் தோரே என்னும் பேரறிஞர் ஒருவர் கூறுவதுபோல, ''ஒரு கோடி மக்களில் யாரேனும் ஓரிருவர் மட்டுமே கவிதையின்பம் நுகர வல்லவராக விளங்குவர்*''. திருவள்ளுவப் பெருந்தகையார் மொழிந்ததனை அடியொற்றி, ''மலரினும் மெல்லிது செய்யுள்; சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்'' என நாமும் குறிப்பிடலாம். 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' என்று தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கணம் கூறுவதற்கேற்ப, கலைநலப் பொருளியல்புகளைச் சுவைத்துணரும் திறம்பெற்ற, ஒரு சில அறிஞர் பெருமக்களுக்கே, சிறந்த கவிதையின் சொற்பொருட் சுவைத்திறங்கள் புலனாகும். சிறந்த பெருமக்கள் இருவர் இப்பாடலின் பொருள் நலனை எங்ஙனம் நோக்கிச் சுவைத்து அநுபவித்தனர் என்பது இங்கு அறிந்து மகிழற்பாலது.

தேவப் பெருமாள் அரையர்

திருவரங்கம் பெரியகோயிலில் பிள்ளை தேவப்பெருமாள் அரையர் என்பவர் ஒருவர் இருந்தார். அரையர் என்பவர்கள், திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களைப் பெருமாள் திருமுன்பு இசையுடன்பாடி, அபிநயம் பிடித்துப் பொருள் விளக்கம் புரிபவராவர். அத்தொண்டு புரிந்துவந்த பிள்ளை தேவப்பொருமாள் அரையர், ஒருநாள் திருமுன்பு இத் திருப்பாசுரத்தைச் சேவிக்க நேர்ந்தது. அங்ஙனம் சேவிக்கையில் 'உன் தாமரைக் கண்களால் நோக்காய்' என்னும் தொடரை ஓரிரு முறை சொல்லி நிறுத்தாமல், எம்பெருமான் தம்பால் இரக்கம் கொண்டு கடைக்கணித்துத் தம் குறைகளையெல்லாம் போக்கி உய்வித்தருளல் வேண்டும் என்னும் வேண்டுகோள் புலப்பட, 'நோக்காய்-நோக்காய்' என்று பலகாலும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு, மேல் வரிக்குப் போகமாட்டாமல், தம்வயம் இழந்து நின்றார். பெருமானின் தாமரை மலர்போன்ற கண்களின் அழகில் ஈடுபட்டுப் பத்தி மேலிட்ட பரவச வுணர்ச்சியால், அவர் அங்ஙனம் செய்து உள்ளம் உருகி மகிழ்ந்தார்.

திருவரங்கப் பெருமாள் அரையர்

அப்போது அத்திரளில் வீற்றிருந்த அவர் தம் திருத்தந்தையாரான, ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் என்பவர் எழுந்திருந்து, ''பிள்ளாய்! நீ செய்வது என்? எம்பெருமான் திருவுள்ளம் புண்படும்படி, இங்ஙனே 'நோக்காய் நோக்காய்' என்று பலகாலும் சொல்லி நிர்ப்பந்திக்கலாமோ? அழகிய மிடற்றைத் தந்து, நல்ல பாடலைத் தந்து, மற்றும்பொருட் செல்வம் மக்கட்செல்வம் முதலிய செல்வங்களை எல்லாம் பெருமாள் நினக்குத் தந்தருளியிருக்க, அவர் ஒன்றும் செய்யாதவர்போல் நினைத்து, இன்னமும் நோக்காய் நோக்காய் என்றால், இஃது என்னே? நன்றி கொன்ற அபசாரமாம் அன்றோ? மேலே பாடுக! என்று பணித்தருளினார்'' என்பது வரலாறு.

முடிவுரை

இவ்விரு பெருமக்களின் திருவுளப் பாங்கு இருந்தபடியையும், இவ்விருவரும் வெவ்வேறு வகையில் இப்பாடற் பொருளில் தோய்ந்து ஈடுபட்ட திறத்தினையும், இவ்வரலாற்றுச் சுவை நிகழ்ச்சி உணர்த்துதல் காணலாம். அருளிச் செயற் பாசுரங்களில் நாம் எங்ஙனமெல்லாம் அன்புகொண்டு ஈடுபட்டு அநுபவித்தல் வேண்டும் என்பது, இதனாற் புலனாகும்.

---

*"The millions are awake enough for physical labour but only one in a million is awake enough for effective intellectual exertion and only one in a hundred mllions to a poetic rapture or divine life."

–*Henry David Thoreau*,
Where I lived and What I lived for

கோவர்த்தனம்

திரு கா. அ. ச. ரகுநாயகன், எம்.ஏ.

திருப்பத்தூர், வடார்க்காடு.

பெரியாழ்வார்:

ஆழ்வார்கள் பன்னிருவரில் பெரியாழ்வார் என்பாரும் ஒருவர். விட்டுசித்தன் என்பது அவர் இயற்பெயரெனத் தெரிகிறது. 'பல்லாண்டு பல்லாண்டு' எனத் திருமாலுக்கே வாழ்த்துக் கூறும் இவரது உள்ளத்தின் உயர்வைப் போற்றி, இவருக்கு இப்பெயர் உண்டானது என்பர். ஆண்டாள் என்னும் சிறப்புப் பெயர்பெற்ற கோதை இவருடைய வளர்ப்பு மகள். பாமாலை புனைந்தும் பூமாலை வனைந்தும் இறைவனுக்குச் சூட்டி அவன் காதலைப் பெற்றவள் கோதை. இறைவனையே காதலித்து அவனுடன் இரண்டறக் கலந்த கற்பினாள் அவ்வாரணங்கு. அப் பெண் மகவைப் பூமியில் காணப்பெற்று எடுத்து வளர்த்த பெருமையுடையவர், பெரியாழ்வார்.

பெரியாழ்வார் இரு நூல்களை அருளிச் செய்துள்ளார். ஒன்று 'திருப்பல்லாண்டு' என்பது; மற்றொன்று 'பெரியாழ்வார் திருமொழி' என வழங்குவது. பன்னிரண்டு பாடல்களைக் கொண்டது திருப்பல்லாண்டு. பெரியாழ்வார் திருமொழியில் நானூற்றறுபத்தொரு பாடல்கள் உள்ளன.

பிள்ளைத் தமிழ்:

கண்ணன் பிறப்பு, வளர்ப்பு, அவன்மாயச் செயல்கள் ஆகியவற்றில் இவர் பெரிதும் ஈடுபட்டவர். கண்ணன் மகவாகவும் சிறுவனாகவும் இருந்தபோது அவன் செய்த செயல்களையெல்லாம் இவர் மிக விரிவாகப் பல பாடல்களில் பாடியுள்ளார். குழந்தைப் பாடல்களைப் பாடுவதில் இவர் வல்லவர். பிற்காலத்தில் 'பிள்ளைத்தமிழ்' என்னும் பிரபந்தம் தோன்றி வளர்ச்சி பெற்றதற்கு, இவர் பாடல்களே வழிகாட்டியாகும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இவர் பாடல்களே, உலக இலக்கிய வரலாற்றில் முதன்முதலாகக் குழந்தைப் பாடல்களை விரிவாகப் பாடிய இலக்கியமாக அமையும். தாயின் உள்ளத்தையும், குழந்தையின் இயல்பையும் விளக்கும் நுண்ணிய செய்திகளை இவர்போல் வேறு எவரும் கூறவில்லை.

ஆழ்வார்களின் பாடல்களில் ஆழ்ந்து திளைத்தவர் கம்பர்பெருமான். அவற்றிலிருந்து பல அரிய கருத்துக்களையும், சொற்களையும் சொற்றொடர்களையும் பொன்னேபோல் போற்றித் தம் காப்பியத்தில், அவர் அமைத்திருப்பதைக் காண்கிறோம். பெரியாழ்வாரையும் அவர் பயின்றிருப்பார் என்பதில் ஐயமில்லை. அவ்வாறிருந்தும் கம்பர், குழந்தைப் பாடல்களைப் பாடாமல் விட்டிருப்பது வியப்புக்குரியதாகும். வால்மீகி முனிவர் குழந்தைப் பாடல்களைப் பாடவில்லை என்று, இரவீந்திர நாத தாகூர் கூறுகிறார். வால்மீகியிலிருந்து எத்தனையோ வகையில் மாறுபட்ட கம்பர், இந்த ஒன்றில் வால்மீகியைப் பின்பற்றினார் என்று கூறுவது பொருத்தமில்லை.

கண்ணன் சிறுவனாக இருந்தபோதுசெய்த அரிய செயல்களில் கோவர்த்தன மலையைக் குடையாய்ப் பிடித்ததும் ஒன்றாகும். இந்தச் செய்தியைப் பெரியாழ்வார் பத்துப் பாடல்களில் வியந்துபாராட்டுகின்றார். பத்துப் பாடல்களைப் பெற்ற இந்த மலை, திருப்பதிகளுள் ஒன்றாக வைத்து எண்ணப்படவில்லை. இது போலவே பிருந்தாவனமும் ஒரு பதிகத்தைப் பெற்றிருந்தும், தனி ஒரு திருப்பதியாகச் சேர்க்கப்படவில்லை. இவையிரண்டும் வடமதுரைப் பதியோடு சார்புடையனவாக எண்ணப்படுகின்றன. ஆனால், நைமிசாரண்யம் என்னும் காட்டினைத் திருமாலாகவே எண்ணி வழிபடுகின்றனர். அங்கே தனியாகக் கோயில், மூர்த்தம் எதுவும் இல்லை; அந்தக் காடே ஒரு திருப்பதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. திருமங்கை மன்னன் என்னும் ஆழ்வார், அந்தக் காட்டைப் பத்துப் பாடல்களால் பாடியுள்ளார்.

கோவர்த்தன மலை:

கோவர்த்தனம் என்னும் மலை, ஒரு சிறு குன்றாயினும், வளமிக்க ஒரு பெரிய மலைபோல், அது பாடப்பெற்றுள்ளது. குறிஞ்சிக் காட்சிகள் அனைத்தையும் அழகுற அமைத்துப் பாடியுள்ளார் ஆழ்வார். வகுள மரத்தை முல்லைக்கொடி சுற்றி ஏறுகிறது. மான்கணங்கள் துள்ளி விளையாடுகின்றன. குரங்குகள் மரக் கிளைகளில் தாவிக் குதிக்கின்றன. ஆண் யானையையும், குட்டியை ஈன்ற பெண்

யானையையும் பார்க்கின்றோம். புலியும் சிங்கமும் உலாவுகின்றன. முகிற்கூட்டம் பெருமழையைக் கொட்டுகிறது. நீர் அருவிகள் இழிந்தோடுகின்றன. கோவர்த்தன மலையைப் பாடும் ஆழ்வார், அம்மலையில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கூறி, ஒன்பான் சுவைகளையும் நாம் சுவைத்து மகிழவைக்கின்றார்.

1. மான் வேட்டையாடும் வேடுவர் மான் கன்றுகளைக் கொல்வதில்லை. அவற்றைப் பிடித்து வந்து தம் மகளிரிடம் கொடுப்பர். அவர்கள் அவற்றுக்குப் பாலூட்டி அன்போடு வளர்ப்பர். அவர்கள் பாலூட்டி வளர்ப்பினும் தாயைக் கொன்று கன்றைப் பிரித்த செய்கை அருவருக்கத் தக்கதாகும். எனவே அந்தக் காட்சி, இளிவரல் சுவையை நம் மனத்தில் ஏற்படுத்துகிறது.

2. பெண் யானை குழவி ஒன்றை ஈன்றெடுக்கிறது. குழவி மிகச் சிறியது; தாயை விட்டு நீங்காமல் இருக்கிறது. ஒரு சிங்கம் இவைகளைக் கண்டு துரத்துகிறது. சிறிது தொலைவு அஞ்சி ஓடிய அந்தப் பெண் யானை பின்னர் சிங்கத்தை எதிர்த்து நின்று போரிடுகிறது. சிங்கத்துடன் போரிடும்போது, தன் இளங்குட்டிக்கு ஊறு ஏதும் விளையாமல் பாதுகாப்பதற்காக, அதனைத் தன் கால்களினிடையே வைத்து மறைத்துக் கொண்டு சிங்கத்தின் மேல் பாய்கிறது.

யானை தன் பெருவலியால் புலியை அடித்துக் கொல்வதும், புலி தன் சூழ்ச்சித் திறத்தால் யானையைக் கொல்வதும் உண்டு. இதனை விளக்கும் 'புலி கொன்ற யானை' என்னும் தொடரை, இலக்கண நூல்களில் காண்கிறோம். ஆனால் சிங்கத்திடம் யானை அஞ்சி நடுங்கும் என்பர். சிங்கத்தின் உறுமுகளைக் கேட்டாலும் யானையின் உயிர் போகுமாம். 'சிம்ம சொப்பனம்' என்று அச்சத்தைக் குறிக்கும் தொடர் ஒன்று, வழங்கி வருகிறது. சிங்கத்தைக் கனவில் கண்டாலும், யானை அஞ்சி நடுங்கித் துன்புறும் என்பதே இதன் பொருள்.

இவ்வாறு சிங்கத்துக்கு அஞ்சி நடுங்கும் இனமான யானை-ஒரு பெண்யானை-சிங்கத்தை எதிர்த்துப் போரிடும் ஆற்றல் பெற்றது எங்ஙனம்? தாயன்பு ஒன்றே அதனை அவ்வாறு கிளர்ந்தெழச் செய்கிறது. தன் குட்டியைக் காப்பது ஒன்றே, அதன் அன்பின் செயல். தன் உயிர்க்கு வரும் ஊறையும் அது எண்ணிப் பார்க்கவில்லை. 'மறத்திற்கும் அஃதே துணை' என்று ஆசிரியர் திருவள்ளுவர் கூறிய பண்பு இங்கே விலங்கினத்திலும் காண்கிறோம். தாயன்பிலிருந்து வெகுளி தோன்றுகிறது. அதனைக் கற்கும் நாம் வெகுளிச் சுவையைப் பெறுகின்றோம்.

"இழவு தரியாதது ஓர் ஈற்றுப் பிடி,
இளம்சீயம் தொடர்ந்து முடுகுதலும்,
குழவி இடைக்கால் இட்டு எதிர்ந்துபொரும்
கோவர்த்தனம் என்னும் கொற்றக்
குடையே!"

என்னும் இவ்வடிகள், மிக உயர்ந்த இலக்கியக் காட்சியைத் தருவனவாகும்.

3. கானில் குறமகளிர் பணிசெய்து கொண்டிருக்கின்றனர். அப் பெண்களின் கண்கள் மானின் கண்களைப் போல மருண்டு நோக்குகின்றன. இதனைக் காணும் ஆண் மக்கள் காதலால் மயங்கி, அப் பெண்களை மான்களோ என மருண்டு, தம் வில்லை வளைக்கின்றனராம். இது படிப்போர் உள்ளத்தில் உவகைச் சுவையை ஊட்டும் காட்சியாகும்.

4. இந்திரனால் ஏவப்பட்ட முகிற்கூட்டங்கள் எல்லாம் ஒன்றுதிரண்டு சென்று, கடலில் உள்ள நீரை யெல்லாம் முகந்து கொண்டு, கோவர்த்தன மலைமீது இவர்ந்து, சிறுசிறு துளியாகப் பெய்யும் தம் இயற்கைக்கு மாறாகக் குடத்திலிருந்து கொட்டுவதைப்போல், ஏழு நாள் அளவும் விடாமல் நின்று பெய்கின்றன. இதனால் ஆனினமும், ஆயரும் அஞ்சி நடுங்குகின்றனர். இந்த நடுக்கம் அதனைப் படிக்கும் நமக்கு அச்சச் சுவையை அளிக்கிறது.

5. மதம் பிடித்த யானை ஒன்று; கானமெல்லாம் ஓடி ஆடித் திரிகிறது. எதிர்ப்பட்ட மரங்களையும் பாறைகளையும் ஓங்கி அடிக்கிறது. அப்படி அடிக்கையில் அதன் கொம்பு ஒன்று, ஒடிந்து விழுந்து விடுகிறது. கொம்பொடிந்த வாய்ப்பக்கத்திலிருந்து மதநீர் மேலும் வழிகிறது. அப்போது அந்தி வானத்தில் பிறைநிலா தோன்றுகிறது. அது யானையின் கொம்பு போலவே வளைந்தும் வெளுத்தும் தெரிகிறது. அதனை வாங்கித் தன் வாயில் பொருத்திக் கொள்ள எண்ணுகிறது யானை; தன் தும்பிக்கையை உயரத் தூக்கி மேலே அண்ணாந்து பார்க்கிறது. யானையின் இழப்பும் அதன் ஏக்கமும் படிப்போர் மனத்தில் அழுகைச் சுவையை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.

கோவர்த்தன மலையைக் கண்ணன் குடை போலக் கவிழ்த்துப் பிடித்து நிற்கின்றான். மலையின் எல்லாப் பக்கங்களிலும் அருவிகள் வீழ்கின்றன. அவைகள் முத்துச் சரங்களைத் தொங்கவிட்டிருப்பது போலக் காட்சி தருகின்றன. அருவியின் நீர், கண்ணன் மேனியில் விழும்போது, அவன் முத்துச் சட்டையை அணிந்திருப்பவன் போலத் தோன்றுகிறான். அந்த அழகில் நாம் ஈடுபட்டு நிற்கிறோம். நம் மனம் அமைதி பெறுகிறது. சமநிலைச் சுவையில் நாம் திளைக்கிறோம்.

7. சிறுவர்களை உறங்க வைத்தற்குத் தாய்மார்கள் கதைகளைச் சொல்வார்கள்; பாடுவார்கள்; முதுகுப்புறத்தில் மெல்லத் தட்டிக் கொடுப்பார்கள். கோவர்த்தன மலையில் வாழும் குரங்குகளும், தம் குட்டிகளை உறங்க வைத்தற்கு நம்மைப் போலவே கதைகள் சொல்கின்றன. அவை சொல்லும் கதை என்ன? அவைகளின் குலத் தலைவனான அனுமனுடைய வீரக் கதைகள்—அவன் இலங்கைக்குச் சென்று அதன் பெருமையை அழித்துவிட்டானே அந்தக் கதைகள் — அவன் செயல்களைப்

புகழ்ந்து பாடுகின்றன தாய்க்குரங்குகள்; குடங்கை கொண்டு தம் குட்டிகளைத் தட்டி உறங்கச் செய்கின்றன. அனுமனை எண்ணிக் குரங்குகளுக்கு எவ்வளவு பெருமிதம்! பெருமிதச் சுவை நம் உள்ளத்திலும் பாய்கின்றது.

8. காடுகளில் குடிசைகளை அமைத்துக் கொண்டு வாழ்கின்றனர் முனிவர்கள். அவர்கள் சினத்தை வென்றவர்கள்; அன்புருவானவர்கள்; எவருக்கும் ஊறு செய்யாதவர்கள். இயல்பாகவே சினமுடையது வேங்கை; தன் இரைகளை வாயினால் கடித்துக் கொல்லும் ஆற்றலுடையது. அக் கொடிய விலங்கும் தன் இயல்பை மறந்து முனிவர்கள் வாழும் இடங்களில் பயில்கின்றது. முனிவர்களும் அவற்றிடம் அன்பைச் சொரிகின்றனர். வீட்டில் வளர்க்கும் ஆன் கன்று நம் அருகே வந்து நிற்கும்போது, நாம் அதன் கழுத்தில் சொறிந்து அதற்கு ஒரு மெல்லிய இன்ப உணர்வை ஏற்படுத்துகிறோம் அன்றோ? அதுபோல வேங்கையின் கழுத்தில் சொறிகிறார்கள் முனிவர்கள். இன்ப உணர்வில் அந்தக் கொடிய விலங்கும் உறங்குகிறது. இயற்கைக்கு மாறுபட்ட இந்த நிகழ்ச்சியைப் படிக்கும் நாம், மருட்கைச் சுவையை நுகர்கின்றோம்.

கோவர்த்தன மலையில், பெண் குரங்குகள் குட்டிகளை ஈன்றுள்ளன. குட்டிகளுக்கு மரத்தின்மேல் ஏறவும், கிளைகளில் தாவிக் குதிக்கவும் தெரியாது. அதனால் அந்தக் குரங்குகள், குட்டிகளைத் தம் முதுகில் வைத்துக்கொண்டு அவற்றிற்கு மரத்தின்மேல் ஏறுவதற்குக் கற்றுத் தருகின்றன. மரத்தின்மேல் ஏறத்தெரிந்து கொண்டபின், மரக் கொம்புகளின்மேல் குட்டிகளை இருக்கச் செய்து, அங்கிருந்து கொம்புகளில் தாவிக் குதிக்கவும் கற்றுத் தருகின்றன. இந்த இயற்கைக் காட்சியைக் காட்டுகிறார் ஆசிரியர் விட்டுசித்தன். தம் இனத்தின் வளர்ச்சியில் மனிதரைப் போலவே விலங்கினமும் ஆர்வம் கொண்டிருப்பதை எண்ணி வியக்கின்றோம். இயற்கையின் இந்த ஆற்றல் மீண்டும் நம்மை மருட்கைச் சுவையில் ஆழ்த்துகிறது.

9. ஆய்ப்பாடியிலுள்ள ஆயரும் ஆவினமும் அஞ்சும்படி மழையைப் பொழிந்த முகிற் கூட்டம், அவர்களுக்கு எவ்வித ஊறும் விளையாமல், கண்ணன் காத்து நின்றதைக் கண்டு தன் ஆற்றாமைக்கு வருந்துகின்றது. அதன் உடல் வெளுத்துப்போயிற்று. கோவர்த்தன மலையின் உச்சியில் ஏறி அக்கூட்டம் தங்குகிறது. அப்போது அது முன் நெற்றியில் முடி நரைத்தது போலக் காட்சி தருகிறது என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். அதைக் கண்டு நாமும் நகைக்கின்றோம்; நகைச்சுவையைப் பருகுகின்றோம்.

பாடலும் பயனும்:

அறுசுவை விருந்திட்ட ஒருவர் விருந்துண்ண வந்தவர்க்குப் பரிசளித்து, வீட்டுக்கும் கொண்டு சேர்த்தால், அவர் அடையும் மகிழ்ச்சி எத்தகையது! அதுபோல நாமும் மகிழும் வண்ணம், ஒன்பது சுவை கலந்த தெய்வப் பாடல்கள் பத்தினைப் படைக்கின்றார். அவைகளைப் பாடிப் பரவும் நமக்குப் 'பக்தர்' என்னும் பட்டமளித்துப் 'பரமான வைகுந்தம் நண்ணுவீர்' எனவும், வாழ்த்துக் கூறுகின்றார், நம் பெரியாழ்வார்!

அரவிற் பள்ளிகொண்டு அரவம் துரந்திட்டு
அரவப் பகையூர்தியவன் உடைய
குரவிற் கொடிமுல்லைகள் நின்று உறங்கும்
கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடைமேல்,
திருவிற்பொலி மாமறைவாணர் புத்தூர்த்
திகழ் பட்டர்பிரான் சொன்ன மாலை பத்தும்,
பரவும் மனம் நன்கு உடைப் பத்தர்உள்ளார்,
பரமான வைகுந்தம் நண்ணுவரே!

பக்தியுணர்வின் படிநிலைகள்

பெண்மையானது பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண் என்னும் ஏழுவகைப் பருவங்களையுடைதாதல்போல, அன்பின் பெருக்கமாகிய பக்தியும், அபிலாஷை-சிந்தனை-அநுஸ்மிருதி-இச்சை-ருசி-பரபக்தி-பரமபக்தி என்னும் ஏழுவகையான படிநிலைகளை உடையதெனச் சமய தத்துவ நூல்கள் கூறும். முதன் முதலில் கண்ட அளவில் உண்டாகும் அன்பு, **அபிலாஷை.** கண்ட ஒருவரை நினைவுகூர்தல், **சிந்தனை.** அந்நினைவு இடையறாது தொடர்ந்து வளர்ந்து பெருகுதல், **அநுஸ்மிருதி.** அந்நினைவின் மிகுதியால் அவரைக் கூடிக் கலந்த மகிழவேண்டும் என எழும் விருப்பம், **இச்சை.** அவ்விருப்பம் வேறு எதனாலும் மாற்றி நீக்க இயலாதபடி பெருகி முதிர்ந்து நிற்கும் தன்மை, **ருசி.** அத்தகையவர் ஒருவரைக் கூடுதலே இன்பமாகவும், பிரிதலே துன்பமாகவும் நிகழும் உணர்வு, **பரபக்தி.** அன்பிற்குரியவரைப் பிரிந்த அளவில், அல்லது பிரிய நேரும் என்னும் உணர்வு நிகழ்ந்த அளவில், மூர்ச்சையுற்று மயங்கி உயிர்விடும் முதிர்ந்த பேரன்புநிலை, **பரமபக்தி.** இப் பரமபக்தியே அன்பின் முடிவான நிலை எனப் போற்றப்படும். ''பெருநீர் அறச் சிறுமீன் துவண்டாங்கு நினைப் பிரிந்து வெரு நீர்மையேனை விடுதி கண்டாய்'' என அருளிச் செய்திருத்தலால், மாணிக்கவாசகர், அனைய சிறந்த அயராப் பேரன்பின் திறனை எய்தியிருந்தமை இனிதுணரப்படும்.

—ஆசிரியர்.

பசவேசுவரர்

—திரு. த. அல்லமதேவன்.

வீரசைவ இயக்கத்தைத் தோற்றுவித்து அருளியவர், பசவர் என்னும் கன்னட நாட்டுச் சான்றோர் ஆவர். அவர் பிராம்மண குலத்தில் தோன்றியருளியவர். பம்பாய்க்கு அருகேயுள்ள கல்யாணிநகரில் ஆண்டு வந்த விச்சலன் (கி.பி. 1157-1167) என்னும் அரசனின் தலைமை அமைச்சராக விளங்கியிருந்தவர். இவரைத் திருநந்திதேவர் அவதாரமாகப் பசவ புராணம் முதலிய வீரசைவ நூல்கள் கூறும்.

நமது இந்திய நாடு, தொன்றுதொட்டுச் சான்றோர்கள் பலர் தோன்றிவரும் சிறப்பு உடையது. அச்சான்றோர்களின் வரிசையில் பசவேசுவரர் மாட்சிமிக்க ஒருபெரும் சிறப்பிடம் பெறுபவராவர். அவர் மிகச் சிறந்த ஓர் அருளாளர், ஞானச்செல்வர்,. பெருங்கவிஞர், தத்துவவித்தகர், சமயத்தலைவர், சமுதாயச் சீர்திருத்தக்காரர், ஒப்பற்ற பெரும் அமைப்பாளர்! அவர் உலக மக்களிடையில் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் பரப்பினார். சாதி வேறுபாடுகளைக் கடிந்தார். ஏழை எளிய மக்களின் நலம் குறித்துப் பணியாற்றினார். ''சமவாய்ப்புச் சமுதாயக் கொள்கை'' என இந்நாளில் கூறப்படும் கருத்துக்களை, மிகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பரப்பியருளிய பெருமை பசவேசுவரருக்கு உண்டு எனலாம். அவர், தாம் கூறியதையே கடைப்பிடித்தார். கடைப்பிடித்து ஒழுகியதையே எவர்க்கும் கூறி அறிவுறுத்தியருளினார்.

பசவேசர் பணிகள்

பசவேசுவரர் வருணாச்சிரம முறையின் தீமைகளைக் கடிந்தார். தீண்டாமையை ஒழிக்க முனைந்தார். ஆண் பெண் என்னும் பால்வேறுபாட்டைப்போக்க முயன்றார். பெண்களின் விடுதலைக்குப் பாடுபட்டார். சமுதாயப் பொருளாதார சமத்துவம் குறித்துப் பெரிதும் வற்புறுத்தினார். உடலுழைப்பின் மேன்மையை உணர்த்தினார். ''தொழிலே தொழுகை'' (கயகவே கைலாச) என்று போதித்தார். மக்களுக்குக் கடவுளிடத்து அன்பும், தொண்டில் ஆர்வமும் ஏற்படச் செய்தார். மக்களின் மனத்திலும் சிந்தனையிலும் ஒரு பெரும் மாறுதலை நிகழ்த்தினர். சமய ஆன்மீகத் துறைகளில் ஓர் ஒருமைப்பாட்டை உருவாக்கினார். அனைத்துயிர்களின் மாட்டும் அன்பு செலுத்துவதின் அவசியத்தை யாவரும் இனிது உணரச் செய்தார்.

வாழ்க்கைக் குறிப்புகள்

இத்தகைய பல சிறப்புக்களையுடைய பசவேசுவரர் கருநாடக தேசத்தில், பீஜப்பூர் மாவட்டத்தில், மாணிக்கவல்லி முத்தகே என்னும் ஊர்களுக்குச் செல்லும் வழியின் நடுவே யுள்ள, பாகேவாடி என்னுமிடத்தில்மாதிராஜன் மாதலாம்பாள் என்னும் தந்தை தாயருக்குப் புதல்வராகத் தோன்றினார். 'சிவதத்துவ சிந்தாமணி' என்னும் நூல் சித்தார்த்தி ஆண்டில், கார்த்திகை மாதத்தில், இவர் அவதரித்தார் என்று கூறுகின்றது. அதன்படி இவர் கி.பி 1131-ஆம் ஆண்டில் அவதரித்தருளினார் எனத் தெரிகின்றது.

இவர் தமது தாயின் ஊராகிய இங்களேசுவரத்தில் தோன்றியதாகவும் கூறுவர். அது பாகேவாடியிலிருந்து ஆறு கல் தொலைவில் அருகிலேயே இருப்பது. அங்கு இவரது தாய் மாமனாகிய பலதேவர் இருந்தார். இங்களேசுவரத்தில் இரேவண சித்தேசுவரர் (இரேணுகாச்சார்யர்) வாழ்ந்திருந்த குகை உள்ளது. அவர் வெறும் சடங்குகளையே முதன்மையாகக் கொண்டிருந்த வைதிகமதத்தைக் கடிந்து, பக்தி நெறியைப் பெரிதும் பரப்பியவராவர். அதனால் இளம் பருவத்திலேயே பசவேசுவரர் பக்திநெறிச் சூழலில் வளர்ந்து, ''பக்தி பண்டாரி'' எனப்படும் சிறப்பைப் பெற்றார்.

இளமையிலேயே இவருக்கு ஜடவேதமுனி (ஈசானிய குரு) என்னும் சான்றோர் ஒருவரின் அருளும் ஆசியும் கிடைத்தன. அவர் பீஜப்பூர் மாவட்டத்தில் உன்குந் வட்டத்தில், கிருஷ்ணாநதியும் மலைப் பிரபாநதியும் கலக்கும் இடத்தில் உள்ள, கூடலசங்கமம் என்னும் தலத்தில் இருந்தவர். ஆதலின் தமது குருவாகிய ஜடவேதமுனியின் மூலம், பசவேசுவரருக்குக் கூடலசங்கமத்துக் கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் (கூடல சங்கமேசுவரர்) மீது, இளமை முதலே பக்தி ஏற்பட்டு வளர்ந்து வந்தது.

பசவேசுவரருக்கு எட்டு வயதாயிற்று. அந்நிலையில் அவர் தம் தந்தையார், அவருக்குப்

பூணூல் இடுதலாகிய உபநயனச் சடங்கு செய்ய முற்பட்டார். தாம் தோன்றிய பொழுதே தமக்குச் சிவலிங்கதாரணம் செய்யப் பெற்றிருப்பதனால், தமக்குப் பூணூல் இடும் உபநயனச் சடங்கு தேவையில்லை என்று, பசவேசுவரர் மறுத்துவிட்டார். தந்தை தம்மைப் பெரிதும் வற்புறுத்தியதனால், அதனை ஏற்க விரும்பாத பசவேசுவரர், தம் தாய் தந்தையரையும் வீட்டையும் துறந்து, பாகேவாடியினின்று 40 கல் தொலைவில் உள்ள, கூடல சங்கமத்திற்குப் போய்விட்டார். இங்களேசுவரத்தில் தமது தமக்கையாராகிய நாகலாம்பாள் அம்மையாரின் கணவர் ஆகிய பலதேவர் என்பவரின் ஆதரவில் வளர்ந்து வரும்பொழுது, அங்கிருந்த சிவபக்தர்களின் திருக்கூட்டத்தில் சேர்ந்து பழகி மகிழ்ந்தார்.

கல்வி கேள்வி

கூடல சங்கமம் என்னும் அத்தலத்தில், வேதம், ஆகமம், காவியம், புராணம், சாத்திரம் என்னும் பல கலைகளையும் பயின்றவர்கள் மிகுதியாக வாழ்ந்து வந்தனர். அங்கே இவர் அப்பக்தி நூல்களையெல்லாம் ஆழ்ந்து பயின்றார். ஜடவேதமுனி, ஜேதரதாசிமய்யர், சங்கரதாசிமய்யர், இரேவணசித்தேசுவரர், சகலேச மாதரசர், கொண்டகுலிகேசிராசர் போன்ற, அருளாளர்களின் கோட்பாடுகளால் உள்ளம் கவரப்பெற்றார். தமிழ்நாட்டில் வாழ்ந்த அறுபான்மும்மை நாயன்மார்கள் ஆகிய ''புராதனர்களின் வரலாறுகள்'' அவர்தம் உள்ளத்தையும் உணர்வையும் பெரிதும் கவர்ந்தன. 'அர்ச்சுனவவாடா' என்னும் இடத்தில் உள்ள கல்வெட்டு ஒன்று, பசவேசுவரர் தமிழகத்துச் சைவ நாயன்மார் ஆகிய அறுபத்துமூவரின் பக்தர் என்று குறிப்பிடுகின்றது.

இல்லற வாழ்வு

இங்ஙனம் சிறந்த சான்றோர்களோடு பழகி, நற்பண்புகள் அனைத்தும் அமைய வாழ்ந்து, கல்வி கேள்விகளில் நிறைந்து புலமை எய்தியிருந்த பசவேசுவரருக்கு, அவர்தம் தாய் மாமனாகிய பலதேவர் என்பவர், தமது மகள் கங்காம்பிகை என்னும் அம்மையாரைத் திருமணம் செய்து கொடுத்தார். பால்குர்க்கி சோமநாதர், பீமகவி, சிங்கிராஜர் என்னும் நூலாசிரியர்கள், இவருக்கு மாயிதேவி (நீலலோசனி அல்லது நீலாம்பிகை) என்னும் மனைவியும் இருந்ததாகக் கூறுகின்றனர். பசவேசுவரர் மேலும் சில ஆண்டுகள், கூடலசங்கமத்திலே தங்கி இருந்து இல்லற வாழ்க்கை நடாத்தி வந்தார்.

அப்போது அவரது தமக்கையாரும், பலதேவரின் துணைவியாருமாகிய நாகலாம்பாள், சென்ன பசவேசுவரர் என்னும் தெய்விகக் குழந்தையைப் பெற்றெடுத்தார். அக்குழந்தைக்குப் பசவேசுவரர் தமது திருக்கையினால் இலிங்கதாரணம் செய்தார். பின்னர்ச் சில காலம் பசவேசுவரர் மகாராட்டிர மாநிலத்தில் ஷோலாப்பூர் மாவட்டத்தில், பந்தர்பூர் (பண்டரிபுரம்) வட்டத்திலுள்ள, மங்களவாதம் என்னுமிடத்தில் இருந்து கொண்டிருந்தார். பசவேசரருக்குப் பாலசங்கய்யர் (சிக்கசங்கய்யர்) என்னும் புதல்வர் ஒருவர் இருந்தார். ஹரிஹரர் என்னும் கவிஞர், பசவேசுவரர்க்குச் சித்தராசர் என்னும் மற்றொரு புதல்வரும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். பசவேசுவரரின் குடும்பம் முழுவதும் ஒரு தெய்விகக் குடும்பமாக விளங்கியது.

அமைச்சராதல்

அப்போது மைசூர் மாநிலத்தில், பீடார் மாவட்டத்தில், உமனாபாத் வட்டத்தில் உள்ள கல்யாணபுரம் என்னும் தலைநகரில், மேலைச் சாளுக்கிய மன்னனான இரண்டாம் ஜகதேக மல்லன் என்பவனுக்குப் பிறகு, மூன்றாம் தைலபன் (கி. பி. 1151-1156) என்னும் சாளுக்கிய வேந்தன் அரசாண்டு வந்தான். அவ்வரசன் போதிய திறமையும் வலிமையும் இல்லாதவன். ஆதலின் அவனது உறவினனாகிய விச்சலன் என்பவன் மெது மெதுவாக அரசாட்சியைக் கைப்பற்றிக்கொண்டு, தானே அரசாண்டு வந்தான். அவனிடத்திலேயே பலதேவர் அமைச்சராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். பலதேவர் இயற்கை எய்தி இறைவனடி சேர்ந்த பிறகு, அப்பொறுப்பு விச்சலமன்னனால் பசவேசுவரருக்கு வழங்கப்பெற்றது. கி. பி. 1162-ல் பசவேசுவரர், விச்சலன் (கி. பி. 1156-1167) என்னும் அச்சாளுக்கிய மன்னனின் அமைச்சராயினார்.

காலநிலை

அக்காலத்தில் கருநாடகநாட்டில் பலவகையான குழப்பங்களும் சீர்கேடுகளும் நிலவி வந்தன. சென்னபசவர் தமது வசனமொன்றில் குறிப்பிட்டிருத்தல் போல, அக்கால நிலையில் ''சைவர்கள் தெளிவின்றிக் கலங்கி நெறி பிறழ்ந்து இருந்தனர். பாசுபதர்கள் உண்மை நெறியைக் காண இயலாது உழன்றனர். காளாமுகர்கள் உணர்வற்ற குருடர்களாக அலைந்தனர். மாவிரதியர் அகந்தை மிக்க ஆடம்பர வாழ்வில் அழுந்தியிருந்தனர். சந்நியாசிகள் கடவுள் மறுப்பாளர்களாக வாழ்ந்து வந்தனர். கடவுளர்கள் பித்துப் பிடித்து உன்மத்தர்களாக ஒழுகினர்''. மக்களிடையில் பக்திமார்க்கம் குன்றி நாடு நிலை குலைந்திருந்தது.

வைதிக சமயம், பற்பல உட்குழுக்களாகப் பிரிந்து சிதறிக் கிடந்தது. அவர்கள் கருமமார்க்கத்தையே பெரிதும் அழுத்தமாகக் கடைப்பிடித்தனர். கொலை வேள்விகள் பெரிதும் மலிந்திருந்தன. சமய வாதங்களும், பேதங்களும் தலைவிரித்தாடின. காதிமோதி வாதாடும் நூல் கற்றிடுவோர் பலர், பெருகி இருந்தனர். சமண பௌத்தத் துறவிமார்கள். தமது சீரிய கொள்கை ஒழுக்கங்களைக் கைவிட்டு, ஆடம்பரமான சுகபோக வாழ்க்கையில் ஈடுபடலாயினர். ஐம்புல நுகர்ச்சிகளில் பெரிதும் அழுந்திக் கூடாஒழுக்கங்களில் தலைப்பட்டனர். பொது மக்களிடத்தில் சமய உணர்வு, தனது செல்வாக்கை இழந்து மிகவும் நைந்து நலிந்து இருந்தது.

சிவானுபவ மண்டபம்

இந்நிலையில்தான், பசவேசுவரர் பக்தி இயக்கத்தைத் தொடங்கி வலிவூட்டி வளர்க்க முற்பட்டார். சமுதாயத்தில் சமயத்திற்குத் தொடர்பும் சிறப்பும் ஆதரவும் பெருக, ஆக்க மும் ஊக்கமும் அளித்தார். பக்தியையும் ஒழுக் கத்தையும் பரப்பினார். பல புதிய சீர்திருத் தங்கள் நிகழுமாறு செய்தார். கல்யாணபுரத் தில் ''சிவானுபவ மண்டபம்'' என்னும் ஒரு பெரிய சமய அமைப்பை நிறுவினார். பொது மக்களுக்குப் புரியும்படி, அவர்களின்தாய்மொழி யிலேயே தமது உயரிய கருத்துக்களை, எளிய இனிய நடையில், அனைவர் உள்ளத்திலும் பதி யும்படி, ''வசனங்கள்'' எனப்படும் ஒருவகைச் சிறந்த உரைச் செய்யுட்களால் போதித்துப் பரப்பினார். சங்கமர் (சிவசரணர்) என்னும் அடியார்களைப் போற்றிப் பெருகச் செய்தார். தாம் நிறுவிய அனுபவ மண்டபத்தில், எல்லா மக்களும் எத்தகைய வேறுபாடும் இன்றிக் கலந்து பங்கு கொள்ளும்படி செய்தார். ஜேத ரதாசிமய்யர் ஒரு நெசவாளர். சங்கரதாசி மய்யர், ஒரு தையற்காரர். மடிவாலமாச்சை யர் ஒரு சலவையாளர், கின்னரி பொம்மைய் யர் ஒரு பொற்கொல்லர், வக்கல முத்தைய்யர் ஒரு உழவர். அடபாத அப்பண்ணர் ஒரு நாவி தர், ஜோதரமாதண்ணர் ஒரு படைவீரர், கணாத கண்ணப்பர் ஒரு மீனவர். தோகர கக் கய்யர் தோல் பதனிடுவோர், மாதர சன்னய் யர் செம்மார், அம்பிகார சவுடய்யர் ஒரு படகு ஓட்டி. இங்ஙனம் பல்வேறு குலத்தினரையும் இணைத்துப் பிணைத்துப் பெருமை அளித்து ஒருமைப்படுத்தியவர் பசவேசுவரரேயாவர். மதுவையா என்னும் பிராமணரின் மகளுக்கும், அருளய்யா என்னும் தீண்டாதவரின் மகனுக் கும் கலப்புத் திருமணம் நடைபெற்றமை யைப் பசவேசுவரர் பெரிதும் ஆதரித்தார்.

அவர்தம் காலத்தில் அவரோடு உடன் இருந்து, இலிங்காயதம் என்னும் வீரசைவ சம யத்தைப் பரப்பியருளிய பெரியவர்கள் பலர். அவர்களுள் அல்லமதேவர், சித்தராமய்யர், சென்னபசவர், அக்கமாதேவி முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவராவர். வீரசைவப் பெண் மணிகளுள் நீலாம்பிகை, நிம்மவை, மகாதேவி யம்மா, இலக்கம்மா, முத்தாயி அக்கா என்ப வர்கள் தலைசிறந்தவர்களாவர்.

பசவர் உபதேசங்கள்

(1) மனிதர் அனைவரும் சமநிலை யினரே. (2) மனிதர்களில் எவரும் பிறப்பினா லோ தொழிலினாலோ பாற்பகுப்பினாலோ தம் முள் சிறிதும் உயர்வு தாழ்வு உடையவர் அல்லர் (3) மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலோ, அன்றி ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடை யிலோ, வேறுபாடு எதுவும் இருத்தலாகாது. (4) ஆன்மீக வளர்ச்சி நெறியில் ஓர் ஆணுக்குப் போலவே, ஒரு பெண்ணுக்கும் சம உரிமைகள் உண்டு. (5) தான் விரும்பும் ஒரு தொழிலை ஒவ்வொருவரும் செய்யலாம்; வேலையில்லாமை யும் பிச்சையேற்றலும் ஆகிய சமுதாயத் தீங்குகள் அறவே ஒழிக்கப்படல் வேண்டும். (6) பெண்களும்கூட ஒரு தொழிலை மேற் கொள்ளலாம். (7) உடலுழைப்பால் செய்யப் பெறும் தொழில் எதுவாயினும், அது பெரு மைக்குரியதேயாகும்; தொழிலில்உயர்வு தாழ்வு என்பது இல்லை. (8) வருணம் ஆசிரமம் பற்றிய வேறுபாடுகள் புறக்கணிக்கத்தக்கவை. (9) உடலுழைப்பின் மூலமாகவே ஆன்மீக வளர்ச்சி யைத் தேடிக்கொள்ளுதல் கூடும். (10) வெறும் துறவும், காடுகளிற் சென்று வசித்தலும், வாழ்க் கைத் துன்பங்களிலிருந்து தப்பியோட முயலும் கோழைத்தனமேயாகும். (11) கலப்பு மணங் களும், கலந்து உணவு உண்ணலும், பெரிதும் போற்றி வளர்க்கத் தக்கனவாகும். (12) சமு தாய வாழ்வில் தீண்டாமை என்பது கூடாது; மக்கள் அனைவரும் ஒரு குடும்பத்தினர்போலக் கலந்து பழகுதல் வேண்டும். (13) ஆன்மீகத் துறையிலும் சமுதாயத்துறையிலும் ஒவ்வொரு மனிதனும், தானே சுயமாகச் சிந்திக்க உரிமை யுடையவன் ஆவான். (14) நிரந்தரமான சிந் தனைக்கும் ஆன்மீக முன்னேற்றத்திற்கும், அறிவும் அநுபவமுமாகிய இரண்டும்தான் உண்மை வழிகாட்டக்கூடிய ஒளிவிளக்குகளாகும் (15) ஆன்மீகக் கல்விக்கும். உலகியற் கல்விக் கும், மக்கள் வழங்கும் தாய்மொழியே உரிய கருவியாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். (16) சமய ஆராய்ச்சிகளில் கலந்து கொள்ளு வதற்கும், ஆன்மீக ஞானத்தைப் பெறுவதற் கும், ஆன்ம வளர்ச்சி நெறியைப் பின்பற்றுவ தற்கும், எல்லா மனிதர்களும் சம உரிமை உடையவர்களாவர்.

சமய வாழ்வியற் சாதனங்கள்

பசவேசுவரர், இலிங்காசாரம், சதாசாரம் சிவாசாரம், பிரத்தியாசாரம், ஞானாசாரம், என்னும் பஞ்ச ஆசாரங்களை வகுத்தார். பக்தன் மாகேசுவரன் பிரசாதி பிராணலிங்க சரணன் ஐக்கியன் என்னும் ஷட்ஸ்தலங்களை யும், குரு லிங்கம் சங்கமம் பாதோதகம் பிர சாதம் விபூதி உருத்திராக்கம் மகாமந்திரம் என்னும் அஷ்டாவரணங்களையும் அமைத்துக் கொடுத்தார். இவற்றுள் பஞ்சாசாரங்கள் என்பன, ஒரு தனி மனிதன், உலகியலில் சீலம் மிக்க உயரிய சிறந்த வாழ்க்கை நடத்துவ தற்குப் பெரிதும் துணை புரிகின்றன. அஷ்டா வரணங்கள் என்பன, ஒருவன் ஆன்மீக நெறி யில் சென்று உறுதி பெறுவதற்கு நற்பெரும் துணையாக அமைந்து நலம் விளைவிக்கின்றன. ஒருவன் ஆன்மீக நலத்தில் வளர்ச்சியுற்றுச் சிறப்பெய்தி இறைவனோடு ஒன்றி இயைவ தற்கு உரிய படிகளாக ஷட்ஸ்தலங்கள் அமை கின்றன. இவை மூன்றும் சமய வாழ்வில் தலை சிறந்த பெரும் சாதனங்களாகும். இவற்றை வகுத்து உருவாக்கித் தந்த பெருமை பசவேசுவ வரருக்கே உரியதாகும்.

பசவேசுவரர் மனித குலம் அனைத்துக்கும் சகோதரத்துவ உணர்வைப் பரப்பியருளினார். அதனால் இலிங்காயதர் என்னும் வீரசைவப் பெருமக்கள், ஆண்கள் எவரையும் அண்ணா அப்பா அய்யா (அய்யர்) என்றும், பெண்களை அக்கா, அவ்வா என்றுமே, மிக்க அன்புடனும் மதிப்புடனும் போற்றி வழங்குதல் காணலாம்.

பெண்களை எல்லாம் உலகத் தாய் ஆகிய அம்பிகையின் கூறாகவே மதித்துப் போற்றுதலின் அடையாளமாக, தேவி என்று பெருமதிப்புடன் போற்றிச் சிறப்பித்துக் குறிப்பிடும் வழக்கமும், அவர்கள்பால் இருத்தலைக் காணலாம். இத்தகைய ஒப்புயர்வற்ற சிறந்த பண்பாடுகளுக்கு எல்லாம், அடிப்படை அமைத்து வளர்த்தருளிய பசவேசுவரர், அன்பையும் அருளையும் பரப்பிக்கொண்டு, இந்நிலவுலகிற் சிலகாலம் வாழ்ந்திருந்து, தாம் வழிபட்டுவந்த கூடல சங்கமேசுவரர் திருவருளில் (கி. பி. 1131-1167), ஒன்றிக்கலந்து மறைந்தருளினார்.

முடிவுரை

பசவேசுவரரின் உபதேசங்களை ஒருபெரும் ''ஞானப்பொய்கை'' என்று கூறலாம். பண்டைப் பெரியோர்களின் அருளுரைகளாகிய நீர்க்கால்கள், அதன்கண் வந்து நிறைந்து நின்றன; அதனினின்றே பிற்காலத்தில் பல பெரியோர்கள் அருளிய நற்கருத்துக்களாகிய நதிகள் பெருகின. கார்ல்மார்க்ஸ், காந்தியடிகள் போன்றவர்களின் கருத்துக்களையும் கொள்கைகளையும், எத்தனையோ பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, பசவேசுவரர் வெளியிட்டு வலியுறுத்தியுள்ளார். இரக்கத்தில் புத்தரும், எளிமையில் மகாவீரரும், மென்மையில் இயேசுவும், துணிவில் நபிநாயகமும் போலப் பசவேசுவரர் சிறந்து விளங்கினார். பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் பசவேசுவரர் அருளிய ''வசனங்கள்'' எனப்படும் ஞானோபதேசங்கள் அமைந்து காணப்படுகின்றன. அவைகள் ஒருவகையில் மார்க்கஸ் அரேலியரின் ஆத்ம சிந்தனைகளையும், தாமஸ் அ கெம்ப்பிஸ் என்பவரது 'இயேசுவைப் பின்பற்றி' என்னும் நூலின் கருத்துக்களையும், எபிரேய தீர்க்கதரிசிகளின் அருள் மொழிகளையும் போலச் சிறந்துவிளங்குகின்றன. அவற்றைக் கற்று உணர்ந்தும் கடைப்பிடித்து ஒழுகியும், நாம் அனைவரும் பசவேசுவரரின் திருவருளைப் பெற்று உய்ய முயலுவோமாக.

சைவசித்தாந்த சாத்திரங்கள்

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு எனப்படும். அவற்றின் பெயரும், அவற்றை இயற்றிய ஆசிரியர்களின் பெயரும், முறையே பின்வருவன ஆகும்.

1.	திருவுந்தியார்	...	திருவியலூர் உய்யவந்த தேவர்
2.	திருக்களிற்றுப்படியார்	...	திருக்கடவூர் உய்யவந்த தேவர்
3.	சிவஞானபோதம்	...	மெய்கண்டார்
4.	சிவஞானசித்தியார்	...	அருள்நந்தி சிவாசாரியார்
5.	இருபா இருபஃது	...	,, ,,
6.	உண்மை விளக்கம்	...	திருவதிகை மனவாசகங்கடந்தார்
7.	சிவப்பிரகாசம்	...	உமாபதி சிவாசாரியார்
8.	திருவருட்பயன்	...	,, ,,
9.	வினாவெண்பா	...	,, ,,
10.	போற்றிப் பஃறொடை	...	,, ,,
11.	கொடிக்கவி	...	,, ,,
12.	நெஞ்சுவிடுதூது	...	,, ,,
13.	உண்மை நெறி விளக்கம்	...	,, ,,
14.	சங்கற்ப நிராகரணம்	...	,, ,,

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கின் பெயர்களையும் ஒருங்கே சேர்த்துத் தொகுத்துப் பின்வரும் வெண்பா ஒன்று இனிது உணர்த்துகின்றது.

''உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்—வந்தஅருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று''

'சிவப்பிரகாசம்' முதல் 'சங்கற்பநிராகரணம்' ஈறாக உள்ள எட்டு நூல்களையும், ''சித்தாந்த அஷ்டகம்'' என வழங்குதல் உண்டு. இவற்றுள் 'உண்மைநெறி விளக்கம்' என்பதனை இயற்றியவர் உமாபதி சிவம் அல்லர்; சீர்காழித் தத்துவ நாதர் எனவும் அறிஞர்கள் கூறுவர்.

—**ஆசிரியர்.**

கண்ணபிரானும், இராமாநுசரும்

மகாவித்வான் திரு பி. ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்.

கண்ணபிரானுக்கும் இராமாநுசருக்கும் இடையே பலதிற ஒப்புமைத்தன்மைகள் உண்டு. இராமாநுசரின் எல்லையற்ற பெருமையினை இனிது உணர்தற்கு, இத்தகைய ஒப்புமைத் தன்மைகளை ஆராய்ந்துணர்தல், மிக்க பெருந்துணை புரியும்.

1. கண்ணபிரான் திருவவதாரஞ் செய்த இடம் சிறைக்கூடம் என்பது உலகமறிந்தது. இராமாநுசர் அவதரித்த இடமும் சிறைக் கூடமே. எப்படியெனில், 'அமரரோடு உயர் விற் சென்று அறுவர், தம் பிறவி யஞ்சிறையே' என்ற நம்மாழ்வார் திருவாக்கின்படி, இந்த சம்ஸார மண்டலமே ஒரு சிறைக்கூடமன்றோ. இஃது 'இருள்தருமா ஞாலமாதலால்' இருள் மலிந்தவிடத்தே வந்து பிறந்தார் ஆசாரியர். கண்ணனும் 'இருள் நாள் பிறந்த வம்மான்' என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தின்படியும், 'வேண்டித் தேவரிரக்க வீங்கிருள் வாய் வந்து பிறந்ததும்' என்ற நம்மாழ்வார் பாசுரத்தின்படியும் இருள்மலிந்த போழ்தன்றோ வந் பிறந்தருளினார்.

2. கண்ணபிரான் அவதரித்தபோது சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையனாகவே சுடர் விளக்கத்தோடு திருவவதரித்தான். இராமாநுசர் அவதரிக்கும் போதும் நம்போலியரைப் போலே அழுதல் அரற்றுதல் செய்யாதே மிக்க ஞான வெள்ளச் சுடர் விளக்கத்தையே காட்டிக் கொண்டு அனைவரும் வியப்புறுமாறு அவதரித்தார். கண்ணபிரான் பிறந்த இடம் ஒன்று, இளமையில் வளர்ந்த இடம் வேறொன்று. பிறகு வளர்ந்தவிடம் மற்றொன்று. அதாவது வடமதுரையிலே பிறந்தது; திருவாய்ப்பாடியிலே இளமையில் வளர்ந்தது; பிறகு முதுமையில் துவாரகை முதலான இடங்களில் வளர்ந்தது. இராமாநுசருக்கும் பிறந்தது திருப்பெரும் பூதூரில்; இளமையில் வளர்ந்தது காஞ்சிபுரத்தில்; பிறகு வளர்ந்தது திருவரங்கம், திருநாராயணபுரம் முதலானவிடங்களில். ''திருமந்திரத்திலே பிறந்து துவயத்திலே வளர்ந்து'' என்கிற நம் முன்னோர்களின் முதுமொழியின்படியே திருவெட்டெழுத்து மகா மந்திரத்தினால் சொரூபவுணர்ச்சி பெறுதலாகிற பிறவியைப் பெற்று, துவயம் என்கிற மந்திரத்தின் அநுசந்தானத்தையும், அதன்படி அனுட்டானத்தையும், செல்வ வாழ்க்கையாகக் கொண்டிருப்பவர் என்க. பிறக்குமிடம் திருமந்திரம், வளருமிடம் துவயம். ஆகையாலே இதனால் கண்ணனோடு ஒப்புமை.

3. கண்ணபிரான் பிறந்த வயிற்றில் இவனொருவனே பிறக்கவில்லை; ''மக்கள் அறுவரைக் கல்லிடை மோத இழந்தவள் தன் வயிற்றில், சிக்கன வந்து பிறந்து நின்றாய்'' (பெரியாழ்வார் திருமொழி 5-3-1). என்கிறபடியே, மற்றும் பல மக்கள் பிறந்தாருண்டு. ஆனால் அந்தப் பிள்ளைகளினால் உலகுக்கு யாதொரு உதவியும் நேர்ந்ததில்லை; அவர்கள் பிறந்ததும் இறந்ததுமே தெரிய வருகின்றது. இதுபோல, ஆசாரியர் திருவவதரித்த இவ்வுலகத்தில் மற்றும் பலபேர்களும் ஒக்கப் பிறக்கின்றார்களெனினும், அவர்களால் உலகுக்கு ஒரு நன்மையுமில்லையாயிற்று. அவர்களின் பிறப்பும் இறப்புமேதான் உலகுக்குத் தெரியும்.

4. கண்ணபிரான் வடமதுரையில் நின்றும் திருவாய்ப்பாடிக்கு எழுந்தருளும்போது பேராழமான பெருவெள்ளமும் முழந்தாழ் அளவாக வற்றிப்போயிற்று என்று தெரியவருகிறது. அதுபோல, ஆசாரியர் சிறிது சஞ்சரிக்கத் தொடங்கும் போதே, ''பிறவி என்னுங் கடலும் வற்றிப் பெரும் பதமாகின்றதால்'' என்ற பெரியாழ்வார் திருவாக்கின்படியே உலக வாழ்க்கையாகிற மிக்க பெருங்கடலும் வற்றத் தொடங்கிற்றென்க.

5. பராத்பரனான பெருமான் தனது பெருமைகளையெல்லாம் மறைத்து அடக்கிக் கொண்டு நீறுபூத்த நெருப்புப் போலேயாகி இடக்கை வலக்கை அறியாத ஆயர்களோடே கலந்து பழகினான். அதுபோல ஆசாரியரும் மிகுஞானச் சிறுகுழவியாய்த் தமது ஞான சக்திப் பெருமைகளையெல்லாம் மறைத்துக் கொண்டு அறிவிலா மனிதரோடே கலந்து பழகியிருந்தனர். கண்ணன் இடையர்களோடு மாத்திரம் கலந்து பழகியிருந்தானல்லன்; தன்னை வதைக்க வழிபார்த்திருந்த அசுரர்களோடும் கலந்திருந்து காலங் கழித்தனன். ஆசாரியரும் தம்மை மாய்க்க எண்ணின யாதவப்பிரகாசர் போல்வாரிடத்திலும் கலந்திருந்து காலங் கழித்தருளினார்.

6. வளர்ந்தருளுமிடத்தில் தீயபுந்திக் கஞ்சனால் ஏவப்பட்ட பூதனை, தாய் வேடம் பூண்டுவந்து நஞ்சு தீற்றிய முலையை உண்ணக் கொடுத்துக் கண்ணனைக் கொல்ல முயன்று தானே முடிந்து போனாள். இந்தப் பூதனை யின் வரலாற்றைப் பேசுகின்ற தேசிகர், யாத வாப்யுதயத்தில், மாயை என்கிற சொல்லாற் கூறினர். மாயை என்று மூலப் பிரகிருதிக்குப் பெயர். அது உண்மையில் விடம் போன்றதா யிருக்கச் செய்தேயும், தன்னிடத்தில் போக் கியதா புத்தியை உண்டு பண்ணிக்கொண்டு தன் பக்கலிலே ஈடுபடுத்தி நம்போல்வாரை முடிக்கப் பார்க்கிறது. இப்படியே ஆசாரியரையும் முடிக் கப் பார்க்கையில் அவரை முடிக்கமாட்டாமல் அவரது அளவற்ற பெருமையினால் தானே முடிந்து நின்றது.

7. ''கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி'' என்றபடி, அசுராவேசம் பெற்ற ஒரு சகடத்தைக் கண்ணன் திருவடியால் தீண்டி நொறுக்கி முறித்து முடித்தனன் என்பது பிர சித்தம். ஆசாரியரும் தமது திருவடி தீண்டுத லால் சகடபங்கம் செய்தவரே! எப்படியென் னில், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு போகும் சாதனம் சகடமெனப்படு வது. இங்கிருந்து நாம் அப்பால் செல்லப் பல வழிகள் உண்டு; நரகம் சுவர்க்கம் முதலான வற்றின் வழிகளிற் கொண்டு செல்வது கள்ளச் சகடமாகும்; ஆசாரியருடைய திருவடி சம் பந்தத்தினால் அது தொலைந்து ஒழிந்ததேயாம். அர்ச்சிராதி மார்க்கமாகிய நல்வழியிற் செல் லும் சாதனமே மேம்பட்டுத் தீயவழிகளில் செல்லும் சாதனம் சிதைந்து ஒழியுமென்க.

8. கயிற்றினால் கட்டி ஓர் உரலிலே பிணித்துவிடப் பெற்ற கண்ணன் அவ்வுரலை யும் இழுத்துக்கொண்டு தவழ்ந்து இரட்டை மருத மரங்களின் நடுவே எழுந்தருளிய பொழுது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடி யினாலே அந்த இரட்டை மரங்களிரண்டும் முறிந்து விழுந்தனவாக வரலாறு உள்ளது. இணைபிரியாதே நின்ற இரட்டை மருத மரங்கள்போல, இணைபிரியாது நின்று நம்மை நலியுமவை பலவுண்டு. பகவத் கீதையில் பல விடங்களில் துவந்துவம் (இரட்டை) என்று பல சொல்லப்பட்டுள்ளன; இன்பு துன்பு, அகங்கார மமகாரம், காமம் குரோதம், புண்ணிய பாபம் என்னுமிவையெல்லாம் இரட்டைகளாம். இவை யெல்லாம் ஆசாரியர் திருவடி சம்பந்தம் பெற்ற அளவிலே இற்றொழிந்தனவென்க.

9. ''வையம் ஏழுங் கண்டாள் பிள்ளை வாயுளே'' என்றும், ''வாயுள் வையகங்கண்ட மடநல்லார்'' என்றும் சொல்லுகிறபடியே, கண்ணபிரான் தனது திருவாயில் ஏழுலகங் களையும் அன்பர்களுக்குக் காட்டினன். அது போல ஆசாரியரும் 1. சுருதிகள், 2. மிருதிகள், 3. இதிகாசங்கள், 4. புராணங்கள், 5. பாஞ்ச ராத்திரங்கள், 6. ஆழ்வார் அருளிச் செயல்கள், 7. ஆசாரிய திவ்விய சூக்திகள் ஆகிய ஏழையும் தமது திருவாக்கில் அன்பர்கட்குக் காட்டுவர்.

10. யமுனையாற்றில் ஓர் மடுவில் இருந்து கொண்டு, அம்மடு முழுவதையும் தன் விட மாகிய நெருப்பினால் கொதிப்படைந்த நீருள்ள தாக்கிப் பெருங்கேடு விளைத்த காளியன் என் னும் கொடிய நாகத்தைக் கண்ணபிரான் கொழுப்படக்கினன். இவ்வரலாற்றை யாதவாப் யுதயகாவியத்தில்தேசிகன் கூறுமிடத்து (4-125) இராமாநுசர் செய்தருளின செயலையே உவமை யாகக் காட்டியருளினர். ஐந்தலைவாய் நாக மாகிய காளியன் யமுனையாற்றைக் கலக்கிக் கெடுத்தது, விஷவாக்குக்களான புறமதத்த வர்கள் மனம் போனபடியெல்லாம் கூறும் தவ றான பொருள்களாலே வேதங்களைக் கெடுத்த படியாம். அந்தக் கெடுதியைக் கண்ணபிரான் நீக்கி யமுனையை எல்லாரும் இனிமையாகப் பருகும்படி செய்தது-ஆசாரியர் தவறான பொருள்களை நீக்கி நல்ல பொருள்களை வெளி யிட்டு, வேதத்தைக் கொண்டு நல்லவர்கள் உய் யும்படி செய்தருளினார். யமுனையின் நிலை யில் வேதம்; காளியன் நிலையில் குதர்க்க வாதிகள்; கண்ணனின் நிலையில் ஆசாரியர். ''தூயபெருநீர் யமுனைத் துறைவனை'' என் னும்படி யமுனையாறு இடையறாத பகவத் சம்பந்தத்தை உடையதாயிருந்ததுபோல, வேதமும் பகவத் சம்பந்தத்தை நியதமாக உடையதாக இருக்கும்.

காளியன் ஐந்து தலைகளாலும் நஞ்சை யுமிழ்ந்து நாசம் விளைவித்ததுபோல, புற மதத்தவர்கள்ஐந்துவிதமான துர்வாதங்களாலே நாசத்தை விளைவிக்கின்றனர்; எப்படியென் னில்: 1. ஈசுவரனே இல்லையென்னுதல், 2. ஈசுவரன் உண்டெனினும் அவன் அனுமானத் தால் சித்திப்பவனேயன்றிச் சாத்திரத்தால் சித் திப்பவன் அல்லன் என்னுதல்; 3. சாத்திரங் களைக்கொண்டே ஈசுவரனை அங்கீகரித்தும் அவனுக்குக் குணங்களும் விக்கிரகமும் இல்லை என்னுதல், 4. ஈசுவரன் ஒருவனே என்பதில்லை பல ஈசுவரர்கள் உண்டென்னுதல். 5. பிர பஞ்சமே இல்லை-சர்வம் சூன்யம் என்னுதல். ஆக இப்படிப்பட்ட ஐவகையான தவறான பொருள்களால் புறமதத்தவர்கள் வேதங்களைக் கெடுக்க, அந்தக் கெடுதல்களை ஆசாரியர் போக் கியருளினர். காளியன் தலையிலே கண்ண பிரான் அடியிட்டு நடனம் புரிந்தாற்போலவே ''நாவலிட்டு உழிதருகின்றோம் நமன் தமர் தலைகள் மீதே'' என்ற கணக்கிலே கூத்தாடப் பெறுதலுங்காண்க.

11. குதிரை வடிவங்கொண்டு மகாபயங் கரனாக வந்த கேசி என்னும் அசுரனைக் கண்ண பிரான் தொலைத்தருளினன்; அதுபோல நம் பேராசிரியர் உபநிஷத்திற் குதிரைகளாகச் சொல்லப்பட்ட இந்திரியங்களின் வலியை அடக்கி வென்றவராய் வாழ்ந்தவர்.

12. கம்சனால் ஏவப்பட்ட அசுரர்களில் ஓர் அசுரன் விளாமரத்தின் வடிவமாய், தன் கீழே கண்ணன் வரும்போது மேல்விழுந்து கொல்வதாக எண்ணி வந்து நிற்கவும், மற் றோர் அசுரன் கண்ணனை முட்டிக் கொல்லும் பொருட்டுக் கன்றின் வடிவங்கொண்டு நிற்க

வும், இவற்றையறிந்த கண்ணபிரான், ''விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே'' ''கன்று கொண்டு விளங்கனியெறிந்து'' என்கிறபடியே, கன்றைச் சுழற்றி விளவின் மீதெறிந்து, இரண்டையும் ஒரு சேர முடித்தருளினன் என்ற வரலாறு, முள்ளைக்கொண்டே முள்ளைக் களைகின்றபடியைக் காட்டுகின்றது. இதுபோலவே சுவாமி பாஷ்யகாரர் புறமதங்களைக் கண்டிக்குமிடத்து அவை ஒன்றற்கொன்று விரோதங்களாயிருக்கும்படியை நன்கு நிருபித்துக்காட்டி அவைகளைக் கொண்டே அவற்றை மறுத்தொழிப்பவர்.

13. இடையர்கள் வழக்கப்படி, இந்திரனுக்குப் பூசை செய்யப் பற்பல வண்டிகளில் சோறும், தயிரும், நெய்யும், காய்கறிகளும் சேகரிப்பதைக் கண்டு, கண்ணன் அப்பூசனையனைத்தையும் கோவர்த்தனமலைக்கே இடும்படி கட்டளையிட்டுத் தானே ஒரு தேவதாரூபம் கொண்டு, அவற்றை முற்றும் அமுது செய்தருள, இந்திரன் பசிக் கோபத்தினால் மேகங்களைஏவிக் கடூரமான கல்மழையை ஏழு நாள் பெய்விக்க, அதனால் யார்க்கும் யாதொரு தீங்கும் நேரிடாதபடி கண்ணன் அம்மலையையே குடையாக எடுத்துப் பிடித்து நின்றனன் என்பது, பிரசித்தமான கதை. தேவதாந்தரத்திற்கு வழிபாடு செய்வதைப் பொறாத தன்மையும், அந்த வழிபாடுகளையெல்லாம் தானே ஏற்றுக் கொள்ளுந் தன்மையும், அதனால் எதிரி என்ன தீங்கு செய்ய நினைத்தாலும் அதற்குப் பிரதியாகத் தீங்கிழைக்க நினையாத பெருந்தகவும், தன்னை அடுத்தவர்களைத் தான் காத்துக்கொண்டு நிற்றலுமாகிய செய்திகள், நூல்களில் கிடைக்கின்றன. மறந்தும் புறந்தொழா மாந்தர் என்றிருக்கும் இராமாநுசர் பிற தெய்வ வழிபாட்டைச் சிறிதும் சகியார். ''திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு'' என்று துணிந்து உபதேசிப்பர். பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து என்று சொல்லுகிறபடியே, எம்பெருமானே ஆசாரியனாக வந்து பிறந்ததனால் ஆராதனைகளெல்லாம்ஆசாரியனுக்கே சேரும். ''குற்றஞ்செய்தவர்கள் பக்கல் பொறையும் கிருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரங்களாய் நடக்கவேணும்'' என்றிருப்பவர் ஆசாரியராகையாலே, தீங்கிழைப்பார் திறத்தினும் பிரதியாகத் தீங்கிழைக்க நினையார். பெருமழையில் நின்றும் கண்ணன் காத்தருளினது போல, இராமாநுசரும் நம்மைத் துயர்ப்பெருமழையினின்று காத்தருளினர். கண்ணன் ஏழு நாள் காத்தனன். ஆசிரியர் காப்பது ஏழேழ் பிறவிக்கும்.

14. கண்ணன் நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக, அவளது தந்தை மகட் கொடைப் பரிசாகக் குறித்தபடி அசுர ஆவேசம் பெற்ற ஏழு எருதுகளை வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்து கொண்டனன். நம்பரமாசாரியர் ''எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்களசூத்திரம் போலே திருமந்திரம்'' என்கிறபடியே, திருமந்திரமாகிற திருமங்கலியத்தைச் சேதநர்களுக்குக் கட்டி விவாகம் நடத்துகைக்கு அங்கமாக, காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் அழுக்காறு என்கிற ஏழு விரோதிகளையும் தொலைத்தருளினர்.

15. கண்ணன் இரண்டு மல்லர்களை மடித்ததுபோல, ஆசிரியர் நீர் நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து என்கிறபடியே, அகங்கார மமகாரங்களை அடியறுத்தவர். கண்ணன் குவலயாபீடம் என்கிற மதயானையை முடித்தாற்போலே, '' மதக்களி றைந்தினையும் சேரிதிரியாமல் செந்நிறீஇ'' என்கிற பொய்கையார் பாசுரத்தின்படியே மதகளிறாகிய இந்திரியத்தின் துடுக்குத் தன்மையைத் தொலைத்தவர். கண்ணன் மாலாகாரர் திருமாளிகைக்கு எழுந்தருளி அவர் தந்த பூவைப் பெற்று உகந்தது போல, நம் ஆசிரியர் அகிம்சை இந்திரியநிக்கிரகம் தயை பொறுமை ஞானம் தவம் தியானம் அன்பு என்னும் எண்வகை மலர்கள், சீடர்கள் பக்கலிலே செறித்து வளரக் காணப்பெற்றுக் களித்தமையறிக

16. கண்ணபிரான் கம்சன் சிசுபாலன் கௌரவர் என்பவர்களை முடித்துப் பஞ்ச பாண்டவாதிகளை வாழ்வித்ததுபோல நம் பரமாசாரியர் 'தற்கச் சமணரும் சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன் சொற்கற்றசோம்பரும் சூனியவாதரும் நான்மறையும் நிற்கக் குறும்பு செய்நீசரும் மாண்டனர்' என்னும்படியாக நாட்டிய நீசச் சமயங்களை மாள்வித்து அர்த்த பஞ்சகம் முதலிய சிறந்த பொருள்கள் எங்கும் விளங்கச் செய்தனர். இவற்றால் இராமாநுசரின் எல்லையற்ற அருமை பெருமைகளை யாவரும் இனிதுணரலாம்.

தத்துவ நூல்களில் அளவையியல்

டாக்டர் திரு. ச. கங்காதரன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
சைவசித்தாந்தத் தத்துவத்துறை,
மதுரை-காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை-625021

முன்னுரை :

இந்தியத் தத்துவக் கொள்கைகள், தாம் கொள்ளும் முடிபுகளை மட்டும் தராமல், எம்முறைகளில் அவைகள் நமக்குக் கிடைக்கின்றன என்பதையும் விளக்குகின்றன. இவைகள் தாம் எடுத்துக்கொண்ட பொருளை ஆராய்வதற்கு முன்னர், அறிவு ஆய்வுஇயல் (Critique of Knowledge) என்று கருதக்கூடியதைத் தருகின்றன. வேறுவகையாகச் சொன்னால், இந்நிலையில் இந்தியத் தத்துவம் தன்னையே அறியத் தொடங்குகின்றது எனலாம். அதன் ஒரு முக்கியப் பிரிவாக ''அளவையியல்'' (Epistemology) எழுகின்றது.

அளவை என்ற சொல், அளத்தல் என்ற சொல்லோடு தொடர்புடையது. அளவை என்பது அளந்தறியப்படுவது. மெய்கண்ட சாத்திரத்தின் அடிப்படை நூலான சிவஞானபோதத்தில், அளவை இயலைப் பற்றிய செய்திகள் கூறப்படவில்லை. ஆயினும் அதன் விளக்கமாக எழுந்த சிவஞான சித்தியார் என்ற நூல், பதினான்கு பாக்களின் மூலமாக அளவையை விளக்குகிறது.

சிவஞானபோதம் :

சிவஞான போதத்தின் நான்காம் சூத்திரத்தில் 'விளம்பிய உள்ளத்து மெய், வாய், கண் மூக்கு அளந்து அறிந்து அறியா' என்ற தொடர் வருகிறது. சொல்லப்பட்ட மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் அறிகருவிகள், அதாவது ஞானேந்திரியங்கள், பொருள்களை அறிந்தாலும், அவைகள் 'நாம் பொருள்களை அறிகின்றோம்' என்னும் தன்னுணர்வு பெறவில்லை. அதாவது கண் பொருளைப் பார்க்கும். ஆனால் நான் பார்க்கின்றேன் என்று, கண் அறியாது. இதுபோலவே ஏனைய ஞானேந்திரியங்களும் ஆகும். பொருள்களை அறிந்தால் மட்டும் போதாது. பொருள்களை அறியும் போதே, அவற்றையறியும் அறிவின் எல்லையையும் சேர்த்து அறிய வைண்டும். இதுவே ''அளந்து அறிந்து(ம்) அறியா'' என்னும் தொடர் மூலமாகச் சிவஞான போதத்தில் விளக்கப்படுகிறது.

மறைஞான தேசிகர், ''அளவை விளக்கம்' என்னும் நூலில் இருந்து, ஒரு பாட்டைத் தம் சிவஞானசித்தியார் உரையில், மேற்கோளாகத் தருகிறார். அப்பாட்டு:

'பண்ணிலாற் கில்லாத பாட்டிற் பயன்போன்றும்
கண்ணிலாற் கில்லாக் கவின்போன்றும்-எண்ணில்
அஞ்சொல் அளவை அறியா தவற்கில்லை
செஞ்சொல் அளவின் சிறப்பு'

என்பது. பண்ணில்லாத பாட்டினால் பயன் மிகுதிப் படாதது போலவும், கண் இல்லாதவர் இயற்கை அழகை நுகர இயலாததுபோலவும், அளவை இயலின் தன்மையை அறியாதவர்கள், செவ்விய சொற்களின் சிறப்பை அறிய இயலாது என்பது, இப்பாடலின் கருத்து. இதனால் அளவை இயலின் இன்றியமையாமை நமக்குப் புலனாகிறது.

அளவையியல் :

அளவை இயலில் அறிவின் தோற்றம், உண்மை, எல்லை ஆகியவைகளைப் பற்றி அறிகிறோம். அளவை இயலில் சில சொற்களின் பொருளை மறவாமல் கொள்ள வேண்டும். நம் உணர்வு அறிவு, நினைவு என இருவகைப் படும். பொருள்களை நேரே அறியும்போது நமக்கு அறிவு கிடைக்கிறது .இந்த அறிவையே பின்பு எண்ணும்போது நினைவு உண்டாகிறது. அறிவு பொய்யறிவு,மெய்யறிவு என இருவகைப் படும். நினைவும் பொய்ந் நினைவு, மெய்ந் நினைவு என இருவகைப்படும். அவற்றில் மெய்யறிவே, அளவைஇயலில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுவது. மெய்யறிவு வடமொழியில் பிரமா அல்லது பிரமை எனப்படும்.

ஒரு செயல் நிகழ்ச்சிக்குச் சிறந்த காரணமாக அமைவது எதுவோ, அது வடமொழியில் கரணம் எனப்படும். இதே முறையில் மெய்யறிவைப் பெறுவதற்குச் சிறந்த காரணமாக இருப்பதே பிரமாணம் எனப்படும். ''பிரமா கரணம் பிரமாணம்'' என அளவை இயல் அறிஞர் இதைக் கூறுவர். பிரமாணம் எனினும், அளவை எனினும் ஒன்றே.

மூன்று அளவைகள் :

1. பொதுவாகக் காட்சி, கருதல், உரை என மூன்று அளவைகளைக் கூறுவார்கள். காட்சியளவை என்பது, ஐம்பொறிகளுள் ஒன்றின் மூலம் பொருள்களை நேரே அறியும் அறிவு. இங்குக் கண் என்ற அறிகருவி மூலம் பெறும் அறிவு மட்டும் அல்லாமல், ஐம்பொறி

கள் அனைத்தின் மூலமாகவும் பெறும் அறிவும் காட்சி எனப்படும். ஆங்கிலத்தில் Perception என்ற சொல், காட்சி என்ற சொல்லுக்கு இணையான சொல். பிரத்தியட்சம் என்பது இதற்குத் தொடர்பான வடமொழிச் சொல்.

2. கருதல் அளவை என்பது, விட்டு நீங்காமல் இருக்கும் இரு பொருள்களின் தொடர்பையறிந்து, அவற்றில் ஒன்றை நேரே பார்த்து, பார்க்காத மற்றொன்றும் நிச்சயம் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தல். இது 'வழி அளவை' என்றும் கூறப்படும். நாம் அடுப்பில் புகைக்கும் நெருப்புக்கும் உள்ள தொடர்பைப் பார்த்து, இரண்டும் விட்டு நீங்காமல் இருக்கின்றன என்னும் முடிவுக்கு வருகின்றோம். பின் வெகு தொலைவில் உள்ள மலையின் புகையை மட்டும் பார்த்து, புகைக்கும் நெருப்புக்கும் உள்ள விட்டு நீங்காத் தொடர்பால், கண்ணால் நேரே பார்க்க இயலாத நெருப்பும், மலையில் இருக்கிறது என்னும் முடிவுக்கு வருகிறோம். இச்செய்தி வடமொழியில் அனுமானம் என்றும், ஆங்கிலத்தில் Inference என்றும் அழைக்கப்படும்.

3. சில உண்மைகளை நாம் பொறிகள் வாயிலாக நேரே பார்க்கவும் இயலவில்லை, பகுத்தறிவின் மூலமாக அறியவும் இயலவில்லை. அப்படிப்பட்ட வாழ்க்கைக்குத் தேவையான உண்மைகளை, நாம் ஆப்தர் எனப்படும் நம்பிக்கைக்குரிய பெரியவர்களின் வாய்மொழி மூலம் அறிகின்றோம். இது உரை அளவை எனப்படும். இஃது, ஆகம அளவை என்று வடமொழியிலும், Verbal testimony என ஆங்கிலத்திலும் சொல்லப்படும்.

முற்றுணர்வுடைய இறைவன் திருவருள் வெளிப்படுத்தும் நூல்களாகிய பொதுநூல், சிறப்புநூல் என்பவை, உரையளவை எனக் கூறப்படும். அவை கருமகாண்டம், உபாசனா காண்டம், ஞானகாண்டம் என மூவகைப்படும். இவற்றுள் கரும காண்டம் என்பவை, செய்ய வேண்டிய கடமைகளை உணர்த்தும் பகுதிகள். உபாசனா காண்டம் என்பவை, இறைவனை மன மொழி மெய்களால் அணுகும் முறையை உணர்த்துவன. ஞானகாண்டம் என்பவை, இறை உயிர் தளை என்னும் பொருள்களின் இயல்புகளை உணர்த்துபவை.

மற்றும் சில அளவைகள் :

இந்த மூன்று அளவைகளுடன் உபமானம், அருத்தாபத்தி, அபாவம் என்ற மூன்று அளவைகளைச் சேர்த்து, அளவைகள் ஆறாகவும் கூறும் மரபு உண்டு. இவற்றுள் உபமானம் என்பது, பொருள்களின் ஒப்புமை பற்றி வரும் ஞானம். 'கவயமா' என்னும் காட்டுப் பசுவை ஒருவன் அறிய விரும்புகின்றான். காட்டுப் பசுவை முன்பே அறிந்த ஒருவர், அது நாட்டுப்பசு போல இருக்கும் என்று சொல்கின்றார். அவன் அந்த அறிவுடன் காட்டுக்குச் சென்று, நாட்டுப் பசுபோல, ஆனால் சில வேறுபாடுகளைஉடைய காட்டுப் பசுவை அறிகின்றான். இங்ஙனம் அறிந்த பொருளைக் கொண்டு, அறியாத பொருளைக் கருதியுணர்வது உபமானம் எனப்படும்.

இனி அருத்தாபத்தி. அருத்தம் பொருள், ஆபத்தி, பெறுதல். எனவே இது பொருட்பேறு எனவும் கூறப்படும். ஒருவர் பகல் முழுவதும் உண்ணா நோன்பு இருக்கிறார். ஆனால் அவர் பகட்டுமேனியில் பல நாட்களாக ஒரு மாற்றமும் காணப்பட இல்லை எனின், அவர் இரவில் நமக்குத் தெரியாமல் உண்கின்றார் என்று கருதி உணர்கின்றோம். இதுபோல, இரண்டு பொருள்கள் உள்ள இடத்தில், ஒன்றைப் பற்றிக் கூறினால், இனம் பற்றி மற்றொன்றை நாம் கருதியுணர்வன போல்வன எல்லாம், அருத்தாபத்தி எனப்படும்.

ஆன்ம சிற்சத்தி :

இங்கு ஒரு முக்கியமான உண்மையை மனதில் கொள்ளவேண்டும். அளக்கப்படுகின்ற பொருள், அளக்கின்ற கருவிக்கு வேறாக இருக்க வேண்டும் என்பது, யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மை. நெல்லை மரக்காலால் அளக்கின்றோம் என்னும்போது, மரக்கால் நெல்லுக்கு வேறாகத்தான் இருக்கவேண்டும். இதைத்தான் அளவை இயல்மொழியில் 'பிரமாணம் பிரமேயத்திற்கு வேறாக இருக்க வேண்டும்' என்று கூறுகின்றார்கள். அவ்வாறு பார்க்கும்போது கண்ணின் மூலமாகப் பொருள்களை அறிகிறோம். பொருள்களை அறிய உதவும் கண்ணும் பார்க்கப்படு பொருளாகிறது. ஆகவே கண் பிரமாணம் அல்ல, கண்ணை அறிவதற்குக் கண்ணினும் நுட்பமான ஒன்று வேண்டும். அதுவே பிரமாணம் என்ற சொல்லுக்கு உண்மையில் பொருந்தக்கூடியது. சைவசித்தாந்தம், ஆன்ம சிற்சத்தியைப் பிரமாணம் என்ற சொல்லுக்கு உண்மையான பொருளாகக் கருதுகிறது.

ஆன்ம சிற்சத்தி என்னும் தொடருக்கு, ஆன்மாவின் அறிவாற்றல் (சித்-அறிவு, சத்தி-ஆற்றல்) எனப் பொருள் கொள்ளலாம். அருள்நந்திசிவம் 'உயிரின் ஒடு உணர்வு' என இதைக் குறிக்கிறார். சிவஞான சுவாமிகள் இதற்குத் 'தன்னை நோக்கி நிற்கும் அறிவாகிய ஆன்மாவினின்றும் விடயங்களை நோக்கி ஓடும் அறிவாகிய சிற்சத்தி' என்று விளக்கம் கூறுகின்றார்.

இதைச் சிறிது விளக்கலாம். 'யான் இந்த ஒலிபெருக்கியைக் காண்கின்றேன்' என்னும்போது, யான் என நிகழும் உணர்வு, காண்பவனாகிய நான் ஆகும். இதைத் தான் 'தன்னை நோக்கி நிற்கும் அறிவு' என்று, சிவஞான முனிவர் கூறுகிறார். இவ் அறிவே உயிர் எனவும், ஆன்மா எனவும் குறிக்கப்படுவது. இந்த ஒலிபெருக்கி என்பது, புறத்தே உள்ளதொரு பொருள் அல்லது விடயம். என் அறிவு அதனை நோக்கிச் செல்கிறது. செல்லும்போது கண்ணைத் தனக்குத் துணையாகக் கொள்கிறது. புறப் பொருளை நோக்கி ஓடும் அறிவைச் சிற்சத்தி, ஆன்ம சிற்சத்தி என்பர். அவ் அறிவிற்குத் துணையாக நிற்கும் வாயில், வியஞ்சகம் அல்லது காட்டு என்பர். (வியஞ்சகம்- விளக்குவது.)

இங்கே ஒலிபெருக்கியைக் காணும்போது, காணுதலுக்குக் கருவியாவது ஆன்ம சிற்சத்தி. அவ் அறிவிற்கு வியஞ்சகமாக, அதாவது உத வியாக நிற்பது, கண் என்று நாம் பகுத்தறிய வேண்டும். எவ்விடத்தும் நமக்கு விளங்கும் எல்லாவகையான அறிவு விளக்கங்களுக்கும் பொதுவாகக் கருவியாய் நிற்பது, ஆன்ம சிற் சத்தியே ஆகும். அச் சிற்சத்தி தானாகப் பொருள்களை நேரே அறியமாட்டாது. மனம் எனும் கரணம், வித்தை என்னும் தத்து வம் ,பொறிகள், பொருள்கள், சொற்கள் முதலியவற்றை உதவியாகக் கொண்டே ஆன்ம சிற்சத்தி அறியும். ஆகவே அப்பொருள்களை யும் உபசாரமாக அளவை என்று கூறுகின் றோம்.

காட்சியளவை :

1. காட்சியளவை, வாயிற்காட்சி, மான தக் காட்சி, தன்வேதனைக்காட்சி, யோகக் காட்சி என நான்கு வகைப்படும். உளவியல் முறைப்படி, பொருளை அறியும் முறையை, இரண்டு வகையாகக் கருதலாம். பொருளை முதன் முதலில் அறியும்போது, அந்தப் பொரு ளின் விவரங்களை அறியாமல் பொதுவாக அறிகின்றோம். ஆன்ம சிற்சத்தி, ஐம்பொறிக ளாகிய வாயில்களுள் ஒன்றைப் பற்றி, எதிர்ப் பட்ட பொருளை அறிவது, வாயிற்காட்சி எனப்படும். வாயிலின் மூலமாக அதாவது ஐம் பொறி மூலமாக இக்காட்சி நிகழ்வதனால், இது வாயிற்காட்சி என அழைக்கப்படுகிறது. அறியப்படும் பொருளின் தன்மையை நோக்கி இதே காட்சி நிர்விகற்பக் காட்சி எனப்படும். நிர் என்ற வடசொல்லின் பகுதி, இல்லை என்னும் பொருளைத் தரும். ஆகவே விகற்பம் என்னும் பொருளைப் பற்றிய விவரம் இல்லாத காட்சி, நிர்விகற்பக் காட்சி எனப்படும்.

2. இவ்வாறு பொறிகள் ஆகிய வாயில் களுள் ஒன்றால், நிர்விகற்பமாக அறிந்த ஆன்ம அறிவு, பின் மனம் முதலிய அகக் கருவிகளுடன் (அந்தக்கரணங்களுடன்) சேர்கிறது. மனம் எதிர்ப்பட்ட பொருளைப் பற்றும், புத்தியா னது அந்தப் பொருளை இன்னது என்று நிச்சயிக்கும், புத்தி இவ்வாறு பொருளை நிச்ச யிக்கச் சித்தம், அகங்காரம் என்று இருகருவி களின் தொழிற்பாடு தேவைப்படும். அகங் காரம் செயல் செய்வதற்கான எழுச்சியைத் தோற்றுவிக்கிறது. சித்தம் இப்போது அறி கின்ற பதிவை முன்நினைவுகளோடு சேர்த்துப் பொருளை இன்னதுதான் என நிச்சயிக்கப் புத்திக்குத் துணை செய்கிறது. இந் நிச்சய உணர்வே, மானதக் காட்சி எனப்படுவது. இது சவிகற்பக் காட்சி எனவும் வழங்கப்படும். ச என்ற வடமொழிச் சொல்லின் பகுதிக்கு, உடன் என்பது பொருள். ஆகவே விகற்பத் துடன் (பொருளின் விவரங்களுடன்) கூடிய காட்சி, சவிகற்பக்காட்சி எனப்படும். இக்காட்சி மனம் ஆகிய அந்தக் கரணத்தின் வழியாக வருவதனால், மானதக் காட்சி எனவும் வழங் கப் படும். ஆகவே சவிகற்பக்காட்சி, மானதக் காட்சி என்ற இரண்டும், ஒரு பொருளைக் குறிக்கும் இரு சொற்களேயாகும்.

3. பிற சமயங்கள், பொதுவாக வாயிற் காட்சி, மானதக்காட்சி என இவ்விரு காட்சி களோடு மட்டும் நிற்கின்றன. ஆனால் சித் தாந்த நூல்கள் ,இவற்றுக்கு மேற்பட்டு, இவற் றின் பயனாக வரும் தன்வேதனைக்காட்சி என ஒன்றையும், யோகக்காட்சி என ஒன்றையும் சேர்த்து, காட்சிகள் நான்கு வகைப்படும் என்று சொல்கின்றன. பொருளை இஃது இன் னது என நிச்சயிக்கும் புத்தி தத்துவம், அவ் வாறு நிச்சயிக்கும்போது எதிர்ப்பட்ட பொரு ளின் தன்மைக்கும், தன்கண் அமைந்த பழைய பழக்கத்துக்கும் ஏற்றபடி, எதிர்ப்பட்ட பொருளை உறவென்றோ, பகையென்றோ, இரண்டும் அல்லாத நொதுமல் என்றோ எண்ணி அதன்மூலம் பாதிக்கப்படுகிறது. இதனால் புத்தியானது, சத்துவ குணமாகவோ, இராசத குணமாகவோ, தாமத குணமாகவோ மாறு படுகிறது என்று, இந்திய மனத் தத்துவநூல் கூறுகிறது. இவ்வாறு முக்குணங்களுள் ஒரு குணமாகத் திரிந்துநிற்கும் புத்தி தத்துவம் உள் அந்தக்கரணம் எனப்படும். அது கலை, வித்தை, அராகம் என்பவற்றைக் காட்டாகக் கொண்டு, அழுந்தி அறிகிறது. புத்தியின் சத் துவகுண பரிணாமம் இன்பம், இராசத குண பரிணாமம் துன்பம், தாமதகுண பரிணாமம் மயக்கம். இவ்வாறு முக்குணங்களுள் ஒன்று, தன்பால் மேம்பட்டு நிற்க, ஆன்மா அதில் அழுந்துகிறது. இவ்வாறு அழுந்தி அறிதலைத் தான், சித்தாந்த நூல்கள் அநுபவம் அல்லது நுகர்ச்சி எனக் கொள்கிறது. இவ் அநுபவமே தன்வேதனைக் காட்சி எனப்படுகிறது.

எதிர்ப்பட்ட பொருளைப் பற்றிய விளக் கம், இவ்வாறு நிர்விகற்பக் காட்சி எனவும், சவிகற்பக்காட்சி எனவும், தன்வேதனைக் காட்சி எனவும், புறத்தே உள்ள பொருளி லிருந்து ஆன்மாவரை, கடல் அலைகள் போல வந்து சேரும் என்பது சைவநூல் துணிபு.

4. தியான சமாதிகளால் ஆன்மாவின் அறி யாமை ஓரளவு நீங்குதலால், ஒருவன் ஓரிடத்தே ஒரு காலத்தே இருந்து, முக்காலத்துப் பொரு ளையும், மூவிடமும் பற்றித் தெளிய உணர்வ தாகிய ஆன்ம சிற்சத்தியை, யோகக்காட்சி என நான்காவது வகையாகக் கூறுவர்.

கருதல் அளவை :

கருதல் அளவை, தன்பொருட்டு அநு மானம், பிறர்பொருட்டு அனுமானம் என இரு வகைப்படும். ஒரு பொருளை ஒருவன் கருதி யுணர்வது, தன்பொருட்டு அனுமானம் எனப் படும். பிறர்பொருட்டு அனுமானம் என்பது, அவ்வாறு தான் உணர்ந்த உணர்வைப் பிறரும் பெறவேண்டும் என்னும் கருத்துடன், சொற் றொடர் வடிவில் வைத்து உணர்த்துவது.

அச்சொற்றொடர் மூன்று உறுப்புக்களை உடையது. அவை மேற்கோள், ஏது, எடுத்துக் காட்டு என்பவை. எடுத்துக்காட்டைச் சொல் லும்போது, ஏதுவிற்கும் துணியப்படும் பொரு ளுக்கும் உள்ள விட்டுநீங்காத தொடர்பை அறி விக்கும் சொற்றொடரை 'வியாத்தி உரை' என்

பர். ஓர் உதாரணம் மூலம் இவற்றை விளக்க லாம்.

1. 'இம்மலை நெருப்புடையது' - மேற்கோள் (பிரதிஞ்ஞை).
2. 'புகையுடைமையால்'-ஏது
3. 'எங்கு எங்குப் புகையுண்டு, அங்கு அங்கு நெருப்பு உண்டு'(வியாத்திஉரை); 'அடுப்புபோல' -(எடுத்துக்காட்டு)

இந்த அமைப்பை விளக்கமாக அறியலாம். மேற்கோளில் எழுவாய், பயனிலை என இரண்டு உறுப்புக்கள் உள்ளன. மேற்கோளில் எழுவாயாகக் குறிக்கப்படுவது, ஐயுற்றுத் துணிதற்கு இடமாக உள்ளது. அதனைப் பக்கம் (மலை) என்பர். மேற்கோளின் பயனிலையால் குறிக்கப்படுவது சாத்தியம் (நெருப்பு). நெருப்புடைத்தாதல் என்பது சாத்தியம், அதாவது துணியப்படுபொருள். இஃது அனுமானத்தைக் கூறுவோனுக்குத் தெளியப்பட்டதாகவும், கேட்போனுக்குத் தெளியப்பட வேண்டுவதாகவும் இருத்தல் வேண்டும்.

மூவகைக் ஏதுக்கள் :

ஏதுவானது, சாத்தியத்தோடு தனக்குள்ள தொடர்பு பற்றி மூன்று வகைப்படும். அவை யாவன, காரியஏது, இயல்புஏது, இன்மைஏது எனப்படுபவை. தன் காரணத்தை விட்டு நீங்காத காரியத்தைக் காரியஏது என்பர். காரிய இன்மையினைத் துணியச் செய்யும் காரண இன்மையினையும், காரண இன்மையினைத் துணியச் செய்யும் காரிய இன்மையினையும் இன்மைஏது (அநுபலப்தி ஏது) எனக்கூறுவர். இன்மைஏது, அநுபலத்திஏது எனவும் வழங்கப்படும். புகையுடைமை என்பது காரிய ஏது. பனி இன்மையனால் குளிர் இல்லை எனத் துணிவதும், குளிர் இன்மையினால் பனி இல்லை எனத்துணிவதும் இன்மை ஏது. இயல்பு ஏது என்பது, 'மா' என்னும் ஓரெழுத்துச் சொல், மாமரம் விலங்கு பெருமை திருமகள் என்னும் பொருள்களுள் ஒன்றை, அவ்வவ்விடத்திற்கு ஏற்ப இயல்பாக உணர்த்தி நிற்கும்.

மூவகைப் பக்கங்கள் :

வியாத்தி உரை என்பதுதான், அநுமானத்தில் மிக முக்கியமான பகுதியாகும். விட்டு நீங்காத தொடர்பு (Concomittance) வடமொழியில் அவிநாபாவம்என்பர். இவ்வுரையை உடன்பாட்டாலும், எதிர்மறையாலும் கூறலாம். உடன்பாட்டில் கூறும்போது எடுத்துக்காட்டாகக் கொடுக்கப்படும் உவமையும், ஏது சாத்தியம் என்னும் இரண்டும், சொல்வோனுக்கும் கேட்போனுக்கும் தெரிந்த இடமாக இருக்கும். அவ் எடுத்துக்காட்டைச் சபக்கம் என்பர். 'இம்மலை நெருப்புடையது' என்னும் அனுமானத்தில் வியாத்தி உரை, உடன்பாட்டில் உள்ளது. ஆகவே அங்குக் கொடுக்கப்படும் எடுத்துக்காட்டுச் சபக்கம் ஆகும். இதற்கு மாறுபட்டது விபக்கம். 'இம்மலை நெருப்புடைத்து' என்பதில், மலை பக்கம்; 'எங்கு எங்குப் புகையுண்டோ, அங்கங்கு நெருப்புண்டு அடுக்களைபோல' என்பதில் அடுக்களை சபக்கம். 'எங்கெங்குப் புகையில்லையோ அங்கங்கு நெருப்பில்லை, குளம்போல' என்பதில் குளம் விபக்கம்.

ஐந்துறுப்புகள் :

சில ஆசிரியர்கள் அநுமானத்தைப் பிரதிஞ்ஞை ஏது திருட்டாந்தம் உபநயம் நிகமனம் என்னும் ஐந்து உறுப்புக்களோடு சொல்லவேண்டும் என வற்புறுத்துவர். அவற்றிற்கு எடுத்துக்காட்டு வருமாறு:

1. 'இம் மலை தீயுடையது'-பிரதிஞ்ஞை
2. 'புகையுடைமையால்'-ஏது
3. 'எங்கு எங்குப் புகை, அங்குஅங்கு நெருப்பு, அடுப்புபோல'-திருட்டாந்தம்
4. 'இம்மலை புகையுடையது' - உபநயம்
5. 'ஆகவே இம்மலை தீயுடையது' -நிகமனம்

புகைக்கு நெருப்பு காரணம் என்பதை, 'எங்கு எங்குப் புகை அங்கு அங்கு நெருப்பு' என்று உடன்பாட்டில் கண்டால் மாத்திரம் போதாது. நெருப்பு இல்லாத இடத்தில் புகை இல்லை என்ற எதிர்மறை முறையிலும் முடிவு செய்த பிறகுதான், புகைக்கு நெருப்புக் காரணம் என்பதை அறிய இயலும். எதிர்மறையில் சொல்ல வேண்டுமாயின், இவ் அனுமானத்தை இந்த முறையில் சொல்லவேண்டும்.

> ''எங்கெங்கு நெருப்பில்லை, அங்கங்குப் புகையில்லை: தாமரை பூத்த தடாகம் போல',

இங்குக் காட்டப்படும் எடுத்துக் காட்டு விபக்கம் (தடாகம்) எனப்படும். இது, சாத்தியம் இல்லாத இடத்தில் எதுவும் இல்லை என்பதைச் சொல்வோனும் கேட்போனும் தெளிந்த இடமாகும். உடன்பாட்டை அந்நுவயம் என்றும், எதிர்மறையை வெதிரேகம் என்றும் வடநூலார் வழங்குவர். சபக்கத்தை நிகர்பக்கம் எனவும், விபக்கத்தை நிகரில்பக்கம் எனவும் கூறுவது மரபு.

மூவகை அனுமானம் :

இவ் அனுமானத்தினால் துணியப்படும் பொருள், காட்சி அளவைக்கு எய்துவதாகவும் இருத்தல் கூடும். நமக்குப் புலனாகும் மணத்தைக் கொண்டு, அம்மணத்தையுடைய மலர் இன்னது என நிச்சயிக்கும்போது, இவ் அநுமானமே உள்ளது. இது பூருவக் காட்சி அநுமானம் எனப்படும். காட்சிக்கு எய்தாமற் கருத்துக்கு எய்தும் பொருளையே அநுமித்து உணர்தலும் உண்டு. ஒரு நூலைக் கொண்டு அந்நூல் எழுதியவரது அறிவின் இயல்பையும் பரப்பையும் உணர்கிறோம். இவ்வாறு ஒருவர் உரையைக் கொண்டு, அவர்தம் அறிவின் இயல்பை உணர்தல் கருதல் அநுமானம். இனி நூல்களில் நாம் முன்பு செய்த வினையின்பயன் நமக்கு இப்பிறப்பில் வருகிறது எனக் கூறப்படும் உரைகொண்டு, 'நாம் இப்பிறப்பில் செய்யும் வினைகள் மறுபிறப்பில் நமக்குப் பயன்தரும்' என உணர்கின்றோம். இஃது உரையனுமானம். இங்ஙனம் காண்டல் கருதல் உரை (பிரத்தியட்சம் அநுமானம் ஆகமம்) என்னும் பிரமாணங்கள் ஆகிய அளவைகள் மூன்றும் உணர்ந்து கொள்ளத் தக்கனவாகும்.

***

சிறுபுலியூர் அருமா கடலமுதன்

திரு டாக்டர் ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.

'நாராயணன்' என்ற சொல்லின் பொருள் நம் சிந்தையில் எழுகின்றது. ''நாராயணன் என்றது நாரங்களுக்கு அயநம் என்றபடி'' நாரங்களாவன நித்திய வஸ்துக்களின் திரள் 1 என்ற முமுட்சுப்படியின் வாக்கியங்களும் நினைவிற்கு வருகின்றன. நாராயணன் என்பது வடசொல். இதற்கு நாரணாம், அயநம், ய:, ஸ: நாராயண: என்றும், நாரா; அயனம் யஸ்ய ஸ:- நாராயண: என்றும் இருவகைப் புணர்ச்சி இலக்கணம் கூறப்பெறுகின்றது. இவற்றுள் முந்தியதற்கு ''நாரங்களுக்கு ஆதாரம் எவனோ அவன் நாராயணன்'' என்றும், பிந்தியநற்கு ''எவன் நாரம் ஒவ்வொன்றிலும் முழுமையாய் இருப்பவனோ, அவன் நாராயணன்'' என்றும் பொருள் கொள்ளப்பெறுகின்றன. முதற் புணர்ச்சியை ஆராய்கின்றோம்.

'நாரா:' என்பதனை நோக்குகின்றோம்: 'ர' என்னும் சொல்லிற்கு அழிவுள்ளது என்பது பொருள். நகரம் அதனை மறுக்கின்றது. ஆகவே, இவ்விரண்டு சொற்களும் சேர்ந்து அழிவற்றது (நித்தியம்) என்னும் பொருளைத் தரும். 'நா' என்னும் சொல் வடமொழி இலக்கணத்தின்படி 'நார' என்றாகி, அழிவில்லாத பொருள்களின் திரளைத் தெரிவிக்கின்றது. பன்மை வேற்றுமை சேரும்போது 'நார:' என்றாகிப் பொருள்களின் திரள்களை அறிவிக்கின்றது. எனவே, 'நா' என்பது அழிவுள்ள பொருளையும், 'நார' என்பது அழிவற்ற பொருள்களின் திரளையும், 'நாரா:' என்பது மேற்கூறிய திரள்கள் பல என்பதையும் காட்டா நிற்கும்.

ஒரு பொருளுக்குள்ள இயல்பு இருவகைப் படும். இவ்விரண்டும் சாத்திரங்களில் 'சொரூப நிரூபக தருமம்' என்றும், 'நிரூபித சொரூப விசேஷணம்' என்றும் சொல்லப்பெறுகின்றன. ஒரு பொருளை எந்த இயல்போடு சேர்த்தே அறிகின்றோமோ, எந்த இயல்பைவிட்டு அதை அறிய முடியாதோ , அஃது அந்தப் பொருளுக்குச் சொரூபக தருமம் எனப்படும். மேற்கூறிய இயல்பைக் கொண்டு அப்பொருளை அறிந்தபின்பு, அதற்குள்ள மற்ற இயல்புகளை அறிந்து கொள்ள நேரிடுகின்றதோ அது நிரூபித சொரூப விசேஷணம் என்று சொல்லப் பெறும். எடுத்துக்காட்டாக, மலருக்கு மணம் சொரூப நிரூபக தருமம்: அதிலுள்ள நிறம் முதலியன நிரூபித சொரூப விசேஷணம்.

இங்கு 'நாராயண' என்னும் சொல்லில் உள்ள 'நார' என்பது, பரமான்மா நீங்கலாக, மற்றப் பொருள்கள் யாவற்றையும் சொல்கிறதெனக் கொள்ளல் வேண்டும். இக்கோட்பாட்டின்படி சித்தையும், அசித்தையும் மற்றப் பொருள்கள் என்று இயம்புதல் போன்றே, பரமான்மாவிற்குரிய குணங்களையும் மற்றப் பொருள்கள் எனவே கூறுதல் வேண்டும். ஆதலின், அவற்றுள் முதன்முதல் பரமான்மாவிற்குள்ள சொரூப நிரூபக தருமங்களை நோக்குவோம்.

ஞானத்துவம், ஆனந்தத்துவம், அமலத்துவம், சத்யத்துவம், அநந்தத்துவம் ஆகியவை பரமான்மாவின் சொரூப நிரூபக தருமங்கள் எனப்படும். ஞானத்துவம் என்பது, அறிவின் தன்மை. உள்ளும் புறமும் உப்பாகவே இருக்கும் உப்புக்கட்டியைப் போன்று, பரமான்மதத்துவம் முற்றும் ஞானமாகவே இருக்கும். அறிவின்தன்மை அதன் இயல்பாகும். ஆனந்தத்துவம் என்பது, விரும்பப்படும் பொருளின் தன்மை. தேன், பால், கன்னல் முதலியவற்றை உண்ணும்போது ஓர் இன்பம் தோன்றுகின்றதல்லவா? இவ்வின்பத்தின் பொருட்டே அவற்றை விரும்புகின்றோம். 'அந்த இன்பம் விரும்பும் பொருளாய் இருக்கின்றதே, அஃது எதன்பொருட்டு?' என்று ஒரு வினா எழுமாயின் அதற்கு என்ன விடை சொல்ல முடியும்? அது போலவே, பிரமம் ஸ்வத:- விரும்பப்படும் பொருளாக உள்ளது. அதனுடைய தன்மையே ஆனந்தத்துவமாகும். அமலத்துவம் என்பது, தான் குற்றமற்ற பொருளாயிருத்தல் மட்டுமேயன்றி, மற்றப் பொருள்களின் குற்றங்களையும் போக்குவது எதுவோ, அஃதே அமலப் பொருளாகும். அஃது அதனுடைய அமலத்துவம் எனச் சொல்லப் பெறுகின்றது. சத்தியத்துவம் என்பது, அசித்திற்குள்ள பண்பின் வேறுபாடும், வடிவத்தின் வேறுபாடும், சித்திற்குள்ள பண்பினுடைய விகாரங்களும் அற்றிருப்பது எதுவோ, அதுவே சத்தியப் பொருளாகும். அதன் தன்மையே சத்தியத்துவம்என்பது. அநந்தத்துவம் என்பது, எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும், எல்லாப் பொருள்களிலும், ஆன்மாவாகவிருக்கும் பொருள் எதுவோ அதுவே அநந்தப் பொருளாகிய தத்துவம் ஆகும். அவ்வநந்தப் பொருளின் தன்மை அநந்தத்துவம் எனப்படும்.

எம்பெருமானின் ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜசு என்னும் குணங்

1. முமுட்சுப்படி—95, 96.

கள் நிருபித சொரூப விசேஷணங்களாகும். இவற்றைச் சார்ந்த வாத்சல்யம், சௌசீல்யம், சுவாமித்துவம், சௌலப்பியம் முதலிய எண்ணிறந்த மங்கள குணங்களும் இவற்றுள் அடங்கும். இந்த எண்ணங்கள் நம்சிந்தையில் குமிழியிட்டவண்ணம், மாயூரம் காளியாக்குடி விடுதியிலிருந்து சிறுபுலியூர் என்ற திவ்விய தேசத்திற்குப் புறப்படுகின்றோம். இத் திருத்தலம் மாயூரம்-காரைக்குடி கிளை இரயில் பாதையில், கொல்லுமாங்குடி என்ற நிலையத்திற்குக் கிழக்கே நடந்து சென்றால் ஒரு மைல் தொலைவில் உள்ளது. மாட்டுவண்டியில் சென்றால் 3 மைல் சுற்றவேண்டும். இந்நிலையம் மாயூரம் சந்திப்பிலிருந்து 8 மைல் தொலைவில் உள்ளது. நல்ல வசதிகளை வேண்டுவோர் மாயூரம் நகரிலிருந்து கிளம்புவதே சிறந்ததாகும்.

'சிறுபுலியூர்' என்பது திருத்தலத்தின் திருநாமம். சலசயனம் என்பது திருக்கோயிலின் திருநாமம். திருக்கடன்மல்லையில் (மாமல்லபுரத்தில்) தலசயனப் பெருமாள் கிடக்குமிடம் 'தலசயனம்' என்றதுபோல இங்கு சலசயனப்பெருமாள் கிடக்குமிடம் 'சலசயனம்' என்று வழங்கப்பெறுகின்றது. திருமங்கையாழ்வாரின் மங்களாசாசனத் திருமொழிப் பாசுரங்கள்தோறும் 'சிறுபுலியூர்ச் சலசயனம்' என்றே இத்திருக்கோயில் குறிப்பிடப்பெறுகின்றது. பெருமான் புலிக்கால் முனிவருக்கு (வியாக்கிரபாதர்)2 பாலசயனமாய்ச் சேவை சாதித்த தலமாதல் பற்றி இவ்வூர் சிறுபுலியூர் என வழங்கப் பெற்றதாகக் கூறுவர். சலம் என்பது மாயை; உறங்குவான்போல் யோகுசெய்வதற்குக் கொண்ட சயனமாதலால் 'மாயப்படுக்கை' எனப்பட்டது. நம் மனம் இந்தச் சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் நிலையில் பேருந்தில் வந்து கொண்டிருக்கின்றோம். ஊரருகில் இறங்கி ஊரை நோக்கி நடக்கின்றோம்.

தமிழகத்தில் மருத வளத்திற்குப் பேர் போனது கீழ்த்திசை; சிறப்பாக நன்னிலம் வட்டம், சோலைகளும் வாவிகளும், நீர் ஓடைகளும் நிறைந்த ஊர் சிறுபுலியூர். திருமங்கையாழ்வார் மருதநில வளத்தைத் தம் பாசுரங்களில் மிக அழகாகக் காட்டுவர்.

''வெள்ளம்முது பரவைத்திரை
விரியக் கரைஎங்கும்
தெள்ளும்மணி திகழும்சிறு
புலியூர்''3

(வெள்ளம் - நீர் ஓட்டம்; முதுபரவை-பழையதானகடல்; திரை - அலை; தெள்ளும்-கொழிக்கப்பெற்ற; மணி-இரத்தினங்கள்)

''கடல்வெள்ளம் அலையெறிந்து நவமணிகளைக் கொண்டு கொழிக்கும் நீர்க் கரைகளை உடையது சிறுபுலியூர்'' என்கின்றார் ஆழ்வார்.

''அறையும்புனல் ஒருபால்; வயல்
ஒருபால்; பொழில் ஒருபால்;
சிறைவண்டுஇனம் அறையும்சிறு
புலியூர்''4

(அறையும் - ஒலிக்கின்ற; புனல் - நீர்; ஒருபால்-ஒருபக்கம்; பொழில் - சோலைகள்; சிறை-சிறகுகள்; இனம் - திரள்கள்)

ஊரைச்சூழ்ந்த நீர்நிலைகளிலும் வயல்களிலும் பொழில்களிலும் வண்டுகள் இன்னொலிகளை எழுப்பிக் கொண்டுள்ளன; கண்ணுக்கும்செவிக்கும் விருந்தூட்டும்சூழ்நிலையை உடையது சிறுபுலியூர்'' என்கின்றார் ஆழ்வார்.

நீர் நிலைகளில் வண்டுகள் ஒலிக்குமோ? என்ற வினா எழுகின்றது. நீர்நிலைகளில் மதுவோடு கூடிய வெள்ளப்பெருக்கம் இருக்குமாதலால் மதுவின் நசையினால் வண்டுகள் வந்து மொய்க்கும். கம்பநாடனும்,

''ஈக்கள் வண்டொடு
மொய்ப்ப வரம்பிகந்து
ஊக்கமே மிகுந்து
உள்தெளிவு இன்றியே
தேக்கு எறிந்து
வருதலில் தீம்புனல்
வாக்கு தேனுகர்
மாக்களை மானுமே''5

(மொய்ப்ப - மொய்க்க; வரம்பு-எல்லை; இகந்து-கடந்து; ஊக்கம் - உற்சாகம்; தேக்கு -ஏப்பம்; எறிந்து - வீசிக்கொண்டு; வாக்கும் - வார்க்கும்; தேன் - கள்; நுகர்-குடிக்கின்ற; மாக்கள்-மனிதர்கள்; மானும்-ஒத்திருக்கும்)

என்ற பாடலில் இதனைக் காட்டுவன். கட்குடியரையும் ஆற்றுவெள்ளத்தையும் ஒப்பிட்டுக் காட்டும் பாடல் இது. கட்குடியரைக் கூறுமிடத்து; ஈக்கள் வண்டொடு மொய்த்தல்-அவரிடத்துள்ள கள் நாற்றத்திற்காக ஈக்களும் வண்டுகளும் மொய்த்தலும்; வரம்பு இகத்தல்-தமது குலம் குடிப்பிறப்பு என்ற இவற்றுக்கு ஏற்ற ஒழுக்கத்தைக் கைவிடுதலும்; ஊக்கம் மிகுதல்-உற்சாகம் மிகுதலும்; உள்தெளிவு இன்மை-மனம் தெளிவு பெறாமையும்; தேக்கு எறிதல் - ஏப்பம் விடுதலும் ஆகியவற்றைக் கட்குடியரிடம் காணலாம். ஆற்று வெள்ளத்தைக்கூறுமிடத்து; ஈக்கள் வண்டொடு மொய்த்தல்-அடித்துச் செல்லும் பல்வகைமலர்களிலுள்ள தேன் முதலியவற்றிற்காக ஈக்களும் வண்டுகளும் மொய்த்தலும்; வரம்பு இகழ்தல்-கரைகடந்து செல்லுதலும்; ஊக்கம் மிகுதல்-வலிமை மிகுதலும்; உள்தெளிவு இன்மை- தன்னுள்ளே இருக்கும் நீர் கலங்காதிருத்தலும்; தேக்குஎறிதல் - அடித்துக்கொண்டுவரும் தேக்குமரங்களை வீசுதலும் ஆகியவற்றைக் காணலாம். இப்பாடலில் வண்டுகள் வெள்ளத்தில் மொய்ப்பதை எடுத்துக் காட்டியிருப்பதைக் கண்டு மகிழலாம்.

---

2. வியாக்கிரபாதர் : வியாக்கிரம்—புலி ; பாதர்-கால்களையுடையவர்.

3. பெரியதிருமொழி ய:9:1.

4. ஷெ 7-9:3.

5. கம்பரா. பால. ஆற். 10

இன்னும் ஆழ்வார், ''எறிநீர்ச் செந்தாமரை மலரும் சிறுபுலியூர்''6 என்று இவ்வூரைக் காட்டுவர். மேலும்,

''முழுநீலமும் அலராம்பலும்
அரவிந்தமும் விரவிக்
கழுநீரொடு மடவார்—அவர்
கண்வாய்முகம் மலரும்
செழுநீர்வயல் தழுவும்சிறு
புலியூர்''7

(முழுநீலம்-முற்றிலும் கறுத்துள்ளநீலோற்பல மலர்; அரவிந்தம்-தாமரை; கழுநீர்-செங்கழுநீர்ப்பூக்கள்; விரவி-சேர்ந்து; மடவார்-பெண்கள்)

என்று காட்டுவர். இங்கு சிறுபுலியூரில், ஊருக்கும் வயலுக்கும் வாசி (வேறுபாடு) தெரிந்து கொள்ளவொண்ணாதபடி இருக்கும் என்கின்றார். நீலோற்பலங்களைப் பார்த்தால் அவ்வூர்ப் பெண்களின் கண்களாகத் தோற்றும்; அரக்காம்பல்களை நோக்கினால் அப்பெண்களின் செவ்விதழ்களை நிகர்ப்பதாக இருக்கும்; தாமரை மலர்களைக் காணின், அம்மலர்களின் முகம்போலக் காட்சி அளிக்கும். எனவே, உள் வீதிகட்கும் வெளிநிலங்களுக்கும் வேறுபாடு தெரிவரிதாக இருக்கும். இவ்வூர்ப் பெண்கள் கிளிப்பிள்ளைகட்குப் பேசும் பயிற்சி தருவதைக் ''கிளி, மடவார் செவ்வாய் மொழி பயிலும் சிறுபுலியூர்''8 என்று காட்டுவர்.

இங்ஙனம் ஊரின் சூழ்நிலையை அனுபவித்தவண்ணம் ஊருக்குள் நுழைகின்றோம். ஊர் எப்படிப்பட்டது? 'திருவிற் பொலிமறையோர்' வாழும் 9 ஊராகும் சிறுபுலியூர். ஓமத்தீயை வளர்க்கின்ற மறையோர் வாழும் ஊராகும். 10. அக்காலத்தில் வேதம் ஓதி வேள்வி வளர்க்கும் அந்தணர் வாழ்ந்த ஊராக இருந்தது என்பதை ஆழ்வார் இந்த இரண்டு பாசுரங்களில் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். இப்பொழுது அத்தகையோர் வாழும் இடமாகத் திகழவில்லை. ஊர் சிறிய ஊராயினும் தேவையான ஒருசில பொருள்கள் விற்கும் அங்காடிகள் உள்ளன. கோபுர வாயிலுக்கு வெளியில் வலப்புறத்தில் நல்லதொரு விடுதி உள்ளது. குடும்பத்துடன் வரும் திருத்தலப் பயணிகள் இங்கு வசதியாகத் தங்கலாம். தாங்களாக உணவு தயாரித்துக் கொள்ளலாம். வேறு நல்ல விடுதிகள் இங்கு இல்லை.

இந்தத் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானின் இணையடிகளன்றி வேறொன்றையும் அறியாதவர் திருமங்கையாழ்வார்.

''பறையும்வினை தொழுதும்மின்நீர்
பணியும்சிறு தொண்டீர்
....
புலியூர்ச்சல சயனத்து
உறையும்இறை அடியல்லது
ஒன்றிறையும் அறியேனே'' 11

(பறையும் - தொலைந்துபோம்; வினை-பாவங்கள்; சிறுதொண்டீர்- கீழானவற்றில் தொண்டுபட்டுத் திரிகின்றவர்கள்; ஒன்று - வேறொன்று: இறையும் -சிறிதும்)

இவ்வாறு தகுதியற்றவர்களைப் பணிந்து திரிகின்றவர்களை நோக்கி, ''சிறுபுலியூர்ச் சலசயனத்தைத் தொழுது உய்வீர்களாக; அப்படித் தொழுதலால் நும் பாவங்கள் யாவும் தொலைந்துபோம்'' என்று ஆற்றுப்படுத்துகின்றார் ஆழ்வார். ''இங்குப் பொருந்தி வாழ்கின்ற பெருமானுடைய இணையடிகளன்றி வேறொன்றையும் அறியேன்'' என்று தனது பற்றுறுதியையும் வெளியிடுகின்றார். மேலும், ''சலசயனத்து, ஆன் ஆயனது அடியல்லது ஒன்று அறியேன் அடியேனே'' 12 என்று கூறுவர். கிருஷ்ணாவதாரத்து எம்பெருமானே இங்கும் எழுந்தருளியுள்ளான் என்பது ஆழ்வாரின் நம்பிக்கை. ''கிருஷ்ணாவதாரம் தீர்த்தம் பிரசாதித்ததென்று வெறுக்க வேண்டாதபடி பிற்பாடர்க்கும் அநுபவிக்கலாம்படி அவ்வவதாரத்தின் படியே வந்து சாய்ந்தவன்'' என்பது பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானம்.

சிறுபுலியூர் என்ற திருத்தலமும் வேண்டா; அங்குள்ள சலசயனத்திருக்கோயிலும்வேண்டா; அங்குக் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானும் வேண்டா; அத்திருக்கோயிலைத் தொழுவதையே இயல்பாகவுடைய பாகவதோத்தமர்களின் திருவடிகளே சரணம் என்றிருப்பார்க்குத் துயரெல்லாம் தொலைந்திடும் என்கின்றார் ஆழ்வார். ''சலசயனம், தொழுநீர்மையுடையார் அடிதொழுவார் துயர்இலரே'' 13 என்பது திருமங்கையாழ்வாரின் திருவாக்கு. ''தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்'' 14 என்ற நம்மாழ்வாரின் திருவாக்கும் ஈண்டு ஒருங்குவைத்து எண்ணிப் போற்றத்தக்கது. பாகவதர் வழிபாடு பகவான் வழிபாட்டைவிடச் சிறந்தது என்பது வைணவ சமயத்தின் தலையாய கோட்பாடு.

மேற்கூறப்பெற்ற சிந்தனையுடன் திருக்கோயிலுக்குள் நுழைகின்றோம். கிழக்கு நோக்கிய திருமுகமண்டலங்கொண்டு புயங்க சயனத்தில் சேவைசாதிக்கும் அருமாகடலமுதனைக் கண்டு தரிசிக்கின்றோம். தாயாரின் திருநாமம் திருமாமகள் நாச்சியார் - உற்சவமூர்த்தி கிருபாசமுத்திரப்பெருமாள் (கருணைக்கடல் பெரு

6. பெரியதிருமொழி 7:9:5.
7. ஷை 7:9:6
8. ஷை 7.9:8
9. ஷை 7.9:2
10. ஷை 7.9:7
11. ஷை 7.9:3
12. ஷை 7.9:4
13. ஷை 7.9:6
14. திருவாய்மொழி 7.1:11

மாள்) என்ற திருநாமத்தால் வழங்கப்பெறுகின்றார். திருமங்கையாழ்வாரின் திருப்பாசுரங்களாலேயே எம்பெருமானை வழுத்துகின்றோம், சரண்புகுகின்றோம்.

சிறுபுலியூர் எம்பெருமான் இருக்கும் இடம் தனக்குத் தெரியவில்லையே என்கின்றார் ஆழ்வார்.

சேயோங்குதண் திருமாலிருஞ்
சோலைமலை உறையும்
மாயா! எனக்கு உரையாய்இது:
மறைநான்கின் உளாயோ?
தீயோம்புகை மறையோர்சிறு
புலியூர்ச்சல சயனத்
தாயோ? உன தடியார்மனத்
தாயோ? அறி யேனே''15

(சேயோங்கு -மிகவும் உயர்ந்த; தண்-குளிர்ந்த; உறையும் - வசிக்கும்; மறை-வேதம்; தீ-ஓமத்தீ; ஓம்பு - வளர்க்கும்; மறையோர்-வேதியர்)

என்பது ஆழ்வார்பாசுரம். ''எம்பெருமானே, அடியேனுக்கு ஓர் ஐயம். நீ நான்மறையில் உள்ளாயா? சிறுபுலியூர்ச் சலசயனத்தில் உள்ளாயா? நினது அடியார்களின் நெஞ்சில் உள்ளாயா? நீ இன்னவிடத்தில் உள்ளாய் என்பதை அடியேனால் அறிதக்கூடவில்லை. நீயே நின் சோதி வாய்திறந்து அருளிச் செய்தருள்வாயாக என்கின்றார். இவ்விடத்துப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம்.: ''இத்தால் சொல்லிற்றாய்த்து - சௌபரி பலவடிவு கொண்டாப்போல இவ்வோவிடங்கள் தோறும் இனி அவ்வருகில்லை என்னும்படி குறையறவர்த்திக்கிறபடியை (இருக்கிறபடியை)க் காட்டிக் கொடுத்தான்'' என்பது. அப்ராக்ருத திவ்விய மங்கள விக்கிரகங்களையும் கண்ணால் கண்டு அனுபவிக்கலாம்படியான அர்ச்சாமூர்த்திகளையும், நெஞ்சாலே அனுபவிக்கலாம்படி அந்தர்யாமியாயிருக்கும் வடிவுகளையும், ஒருகாலே சேவைசாதிப்பித்தபடியாலே கண்டு ஆச்சரியப்படுகின்றார், ஆழ்வார் என்பதை இதனால் பெறவைக்கின்றார். திருமாலிருஞ்சோலை உறையும் மாயா! என்று அழகரை விளித்தது என்னோவெனின்: நான்மறைகள், சிறுபுலியூர்ச் சலசயனம், அடியார் மனம் என்னும் இடங்களில் உறையும் எம்பெருமான் ஒருவனே என்று உண்மையை விளக்கும் இப்பாசுரத்தின் உள்ளுறையாதலால், திருமாலிருஞ்சோலை மலையில் உறைபவனும் இவனே என்பது விளியினால் பெறப்படும்.

மாதர்களின் கண்ணழகில் ஈடுபட்டு அழிந்து போகாமல் எம்பெருமான் திறத்தில் ஈடுபட்டு உய்வு பெற வேண்டிச் சிறுபுலியூர்ச் சலசயனத்து எம்பெருமானைத் தொழுகின்றதாகக் கூறுகின்றார்; தன்னை அலட்சியம் செய்யாமல் அருள்புரியுமாறு வேண்டுகின்றார் ஆழ்வார்.

''மையார்வரி நீலம்மலர்க்
கண்ணார்மனம் விட்டிட்டு
உய்வான்உன கழலேதொழு
தெழுவேன்.........
.......புலியூர்ச்சல சயனத்து
ஐவாய்அர வணைமேல்உறை
அமலாஅரு ளாயே''16

(மையார் -மைஅணிந்த ;வரி - ரேகை; நீலமலர்-கருநெய்தற்பூ; மனம்-மனத்தை; உய்வான் - உய்யும்பொருட்டு; அருளாய் கிருபைகாட்டுவாய்)

என்பது அவர்தம் திருவாக்கு. இந்த வாக்கைக் கொண்டே நாமும் அவனை வேண்டுகின்றோம்

பெரியபிராட்டியார் மார்பில் உறையும் எம்பெருமானிடம் ஆழ்வார் சரண்புகுகின்றார்.

''கருமாமுகி லுருவா! கனல்
உருவா? புனல் உருவா!
பெருமால்வரை உருவா!பிற
உருவா! நின துருவா!
திருமாமகள் மருவும்சிறு
புலியூர்ச்சல சயனத்து
அருமாகடல் அமுதே!உனது
அடியேசரண் ஆமே''17

(மா-பெரிய; முகில்-மேகம்; உருவா-உருவமுடையவனே, கனல் -நெருப்பு, புனல்-நீர். மால்வரை - பெரியமலை; நினது-உன்னுடைய; திருமாமகள்-பெரிய பிராட்டியார்.)

என்பது ஆழ்வார் பாசுரம். இத்திருப்பாசுரத்தின் இனிமை கனிந்த நெஞ்சினரால் நன்கு அனுபவிக்கத்தக்கது. ஆழ்வார் தமது உள்ளன்பு நன்கு விளங்க எம்பெருமானை வாயார விளிக்கின்றார். இறுதியில் ''உன் திருவடிகளே சரணம்'' என்று கூறி, அவன் திருவடிகளில் சரண்புகுகின்றார். நாமும் ஆழ்வாரின் அடியொட்டிச் சரண்புகுகின்றோம். பாசுரத்தை மிடற்றொலிகொண்டு ஓதி உளங்கரைகின்றோம்.

''ஆமருவி மேய்த்த
அரங்கர்எதிர் ஆர்நிற்பார்
தாமருவி வாணனைத்தோள்
சாய்த்தநாள்—சேம
முறுபுலியூர் வன்றோல்
உடையான் உடைந்தான்
சிறுபுலியூர் எந்தைமேற்
சென்று'' 18

(ஆ-பசு; மருவி-விரும்பி; எதிர் - முன்பாக; வாணன்-பாணாசுரன்; மருவி- கிட்டி; சாய்த்த - அறுத்துத்தள்ளிய; நாள்-காலத்தில்; சேமம் - காவல்; புலிஊர் வல்தோல் உடையான் - வலிய புலித்தோலை ஆடை

15. ஷை 7.9:7.

16. ஷை 7.9:8

17. ஷை 7.9:9

18. ஆழ்வார்......

யாக உடைய சிவன்; மேல்சென்று-எதிர்த்துச்சென்று, உடைந்தான் - தோற்று ஓடினான்)

''அவர்இவர் என்று இல்லை
அனங்கவேள் தாதைக்கு
எவரும் எதிர்இல்லை
கண்டீர்-உவரிக்
கடல்நஞ்சம் உண்டான்
கடன்என்று வாணற்கு
உடன்நின்று தோற்றான்
ஒருங்கு''19

என்ற திவ்விய கவியின் திருப்பாசுரமும் நினைவிற்கு வர அதனையும் ஓதி மகிழ்கின்றோம். இதற்கு அடிமூலமாக உள்ள திருமழிசையாரின் பாசுரத்தையும் சிந்திக்கின்றோம்.

(அனங்கவேள் - மன்மதன்; உவரிக்கடல்-உப்புக்கடல்; நஞ்சம்-நஞ்சு; கடன் என்று-உன்னைக் காக்க நான் கடமைப்பட்டவன் என்று. ஒருங்கு - குடும்பத்துடன், பரிவாரத்துடன்)

என்பது பாசுரம். அவர் என்பது சிறந்தவர்களையும், இவர் என்பது தாழ்ந்தவர்களையும் குறிக்கின்றன. ''தாழ்ந்தவர்களான நம் போலியர் எம்பெருமானுக்கு எப்படி எதிராக முடியாதோ, அப்படியே உயர்ந்தவர்கள் என்று கருதப் பெறும் உருத்திராதிகளும் எம்பெருமானுக்கு எதிர் நிற்கமுடியாது'' என்ற கருத்து இப்பாசுரத்தில் வலியுறுத்தப் பெறுகின்றது. ''கலியன் ஒலிமாலை, பாரார் இவை பரவித் தொழப் பாவம் பயிலாவே''20 என்ற பல சுருதிப் பாடலடிகளை நினைத்தவண்ணம் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

19. நான்முகன் திருவந்தாதி—56.

20. பெரிய திருமொழி—79:10.

**

ஆகமங்கள்

'ஆகமம்' என்னும் சொல்லுக்கு அறிஞர்கள் இருவகையிற் பொருள்கூறுவர். ஆ என்பது பாசம்; க என்பது பசு; ம என்பது பதி. எனவே பதிபசுபாசம் ஆகிய முப்பொருள்களின் இயல்புகளை ஆராய்ந்து விளக்கும் நூல், ஆகமம் எனப்படும்.

இனி இவ்வாறன்றி, ஆ எனில் ஞானம் ; க எனில் மோட்சம்; ம எனில் மலஅழிவு எனப்பொருள் கொண்டு, உயிர்களுக்கு மலத்தை அழித்து ஞானத்தை உண்டாக்கி வீடுபேறு ஆகிய மோட்சத்தைக் கொடுக்கும் நூல், ஆகமம் எனவும் கொள்ளலாம். இருபத்தெட்டுச் சிவாகமங்களின் பெயர்களும் பின்வருமாறு :—

1. காமிகம்
2. யோகஜம்
3. சிந்தியம்
4. காரணம்
5. அஜிதம்
6. தீப்தம்
7. சூட்சுமம்
8. சகஸ்ரம்
9. அம்சுமான்
10. சுப்பிரபேதம்
11. விஜயம்
12. நிசுவாசம்
13. சுவாயம்புவம்
14. ஆக்கிநேயம்
15. வீரம்
16. இரவுரவம்
17. மகுடம்
18. விமலம்
19. சந்திரஞானம்
20. முகபிம்பம்
21. புரோற்கிதம்
22. சர்வோத்தரம்
23. பாரமேசுவரம்
24. சந்தானம்
25. இலளிதம்
26. கிரணம்
27. சித்தம்
28. வாதுளம்

''காமிகமே யோகசமே சிந்தியமே காரணமே அசிதம் தீத்தம்
பூமிபுகழ் சகச்சிரம் சூக்குமம் அஞ்சுமான் சுப்பரபேதம் பொற்பின்
ஆம்இனிய விசயம் நிச்சுவாசம் சுவாயம்புவமே அனலம் வீரம்
நாம இரவுரவம் மகுடம் விமலம் சந்திரஞானம் விம்பம்மே''

''மேய புரோற்கிதம் சருவோத்தரம் பாரமேசுரமே மிளிர் சந்தானம்
தூய இலளிதம் கிரணம் சித்தமே உயர்வுறு வாதுளமே என்ன
ஆய இருபத்தெட்டு ஆம், ஆகமத்தின் தொகை; இவைகள் அடைவே தோற்றம்''

—சிவஞானசுவாமிகள்.

இவ்விருபத்தெட்டு ஆகமங்களுள் முதல் ஐந்தும் சத்யோஜாதம்; அடுத்த ஐந்தும் வாமதேவம்; அதற்கு அடுத்த ஐந்தும் அகோரம்; அதற்கும் அடுத்த ஐந்தும் தத்புருஷம்; இறுதியுள்ள எட்டும் ஈசானம் என்னும் சிவபிரானின் திருமுகங்களினின்று முறையே தோன்றின என்பர்.

—ஆசிரியர்.

திருஞானசம்பந்தர் அருளிய கோள்அறு திருப்பதிகம்

(மூலமும் உரையும்)

[கவிஞர் திரு. மனசை ப. கிரன், B.A., B.T.]

பதிக வரலாறு :

சம்பந்தரும் நாவுக்கரசரும் திருமறைக் காட்டில் இருந்தபொழுது, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும், சம்பந்தரைப் பாண்டிய நாட்டிற்கு வந்து, சமண் இருள் கெடுத்துச் சைவஒளி பரப்ப வேண்டிக்கொண்டு, பரிசனங்களை அனுப்பினர். சம்பந்தர் அதற்கு இசைந்து புறப்பட்டார். அப்பொழுது நாவுக்கரசர் 'நாளும் கோளும் வலியில செல்லற்க' என்றார். அதற்குச் சம்பந்தர் 'பரசுவது நம் பெருமான் கழல்கள் என்றால் பழுது அணையாது' எனப் பகர்ந்து, இத் திருப்பதிகம் பாடியருளினார். (சம்.616). ''கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரை செய்தது'' ஆதலின், இது 'கோளறு திருப்பதிகம்' எனப் பெயர் பெற்றது. இஃது ஆணையிட்டுக் கூறிய அருமைப்பாடு உடையது.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்வெள்ளி
சனிபாம் பிரண்டும்உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மூங்கில் போன்ற தோளையுடைய அம்மையை இடப்பாகத்திற் கொண்டவரும், ஆலால விடத்தை உண்டு அடக்கிய கண்டத்தை உடையவரும் ஆகிய சிவபெருமான், மிகச் சிறந்த வீணையை மீட்டிக் கொண்டும், குற்றம் அற்ற சந்திரனையும் கங்கையையும் தமது திருமுடிமேல் அழகுறப் புனைந்துகொண்டும், ஏன் உள்ளத்திற் புகுந்து தங்கியிருப்பதனால், சூரியன் சந்திரன் அங்காரகன் புதன் குரு சுக்கிரன் சனி இராகு கேது ஆகிய இரண்டு பாம்புகள், முதலிய கோள்கள் எல்லாம், குற்றம் அற்ற நலத்தையே செய்வன. அவைகள் அடியார்களுக்கு மிகப்பெரிதும் நல்லனவே ஆகும்.

'நல்ல நல்ல' என்னும் அடுக்கு, தம்முடைய தெளிவும் அதனைப் பிறர்களுக்கு அறிவுறுத்தும் துணிவும் பற்றி இருமுறை வந்தது. 'அடியார்க்கு' என்று கூறியமையாது 'அடியார் அவர்க்கு' எனக் கூறியருளிய திறத்தால், அடியார்க்கே யன்றி அவர்தம்மைச் சேர்ந்தோர்களுக்கும் இடர் இல்லை என்பது உணர்த்தியவாறு. 'ஆசறும்'–தீமை தீரும் எனவும் பொருள் கொள்ளலாம். 'அதனால்' என்பது காரணக் கிளவி; உருபேற்ற சுட்டுப்பெயர் அன்று. (1)

என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ
டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பு மாலையும் பன்றியின் கொம்பும் ஆமையின் ஓடும் ஆகிய இவைகள் தமது மார்பில் விளங்க, எருதின்மீது ஏறிவரும் இறைவன் பொன்னிறம் பொருந்திய ஊமத்தப் பூமாலையையும் கங்கையையும் திருமுடியிற் சூடிக் கொண்டு, அம்மையுடன் என் உள்ளத்திற் புகுந்து தங்கியிருப்பதனால், ஆயில்யம் மகம் விசாகம் கேட்டை திருவாதிரை என்பனவும், இவற்றுடன் எண்ணப்படுவனவாய பரணி கார்த்திகை பூரம் சித்திரை சுவாதி பூராடம் பூரட்டாதி என்னும் பிற நாண்மீன்களும் எல்லாம், அன்புடன் நலத்தையே விளைவிப்பன. அவைகள் அடியார்களுக்கு மிகப் பெரிதும் நல்லனவே ஆகும்.

''ஆதிரை பரணி ஆரல்
ஆயில்யம் முப்பூரம் கேட்டை
தீதறு விசாகம் சோதி
சித்திரை மகம் ஈராறும்
மாதனம் கொண்டார் தாரார்;
வழிநடைப் பட்டார் மீளார்;
பாய்தனிற் படுத்தார் தேறார்;
பாம்பின்வாய்த் தேரை தானே''
(2)

எனவரும் சோதிடநூற் பாடல், ஈண்டு உணரற் பாலது

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

அழகு வளரும் பவளம் போன்ற திரு மேனியில் ஒளிமிகுந்த திருநீற்றை அணிந்து, உமையம்மையுடன், வெள்ளை எருதின்மீது, மணம்வீசும் கொன்றை மலரையும் பிறைச் சந்திரனையும் திருமுடிமேற் புனைந்துகொண்டு, சிவபெருமான் என் உள்ளத்திற் புகுந்து தங்கியிருப்பதனால் ,திருமகள் கலைமகள் செயமகள் நிலமகள் ஆகியோரும், இந்திரன் அக்கினி இயமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன் என்னும் எட்டுத் திசைக் காவலர்கள் ஆகிய பல தெய்வங்களும், அரிய நியதிகளையுடையன என்றாலும் நலத்தையே செய்வன. அவைகள் அடியார்களுக்கு மிகப் பெரிதும் நல்லனவே ஆகும். (3)

மதிநுதல் மங்கை யோடு வடவா லிருந்து
மறையோது மெங்கள்பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பிறைபோன்ற அழகிய நெற்றியையுடைய உமையம்மையுடன், கல்லால மரத்தின்கீழ் அமர்ந்து, வேதங்களின் பொருளை அருளிச் செய்த எங்கள் சிவபெருமான், கங்கையாற்றுடன் கொன்றைமாலையையும் திருமுடிமேல் அணிந்து கொண்டு, என் உள்ளத்திற் புகுந்து தங்கியிருப்பதனால், சீற்றம் மிக்க காலன் அக்கினி இயமன் இயமதூதர் ஆகியவர்களுடன், பலவகையான கொடிய நோய்களும், நலத்தையே விளைவிப்பன. அவைகள் அடியார்களுக்கு மிகப் பெரிதும் நல்லனவே ஆகும். (4)

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்த னோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும்இடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சை அணிந்த திருநீலகண்டத்தை உடையவரும், என் தந்தையும், உமையம்மையுடன் விடையின்மீது ஏறுபவரும், நமது தலைவரும் ஆகிய சிவபெருமான், அடர்ச்சியால் இருள் தங்கிய வன்னி கொன்றை ஆகிய மரங்களின் மலர்களைத் தமது திருமுடியில் அணிந்து கொண்டு, என் உள்ளத்திற் புகுந்து தங்கியிருப்பதனால், கொடிய சினத்தையுடைய அவுணர்களுடன், அச்சத்தை விளைக்கும் இடியும் மினலும், அளவில்லாது மிகுந்துள்ள பூதங்களும் எல்லாம், நலத்தையே கொடுப்பன. அவைகள் அடியார்களுக்கு மிகப் பெரிதும் நல்லனவே ஆகும். (5)

வாள்வரி அதள தாடை வரிகோவ ணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

ஒளியும் கீற்றுக்களும் உடைய புலித்தோல் ஆடையையும், வரிந்து கட்டிய கோவணத்தையும் உடையவர் ஆகிய சிவபெருமான், அன்று அலர்ந்த புதிய வன்னிமலர், கொன்றைமலர்களுடன், கங்கையாற்றையும் திருமுடிமேற் சூடிக்கொண்டு, உமையம்மையுடன் சேர்ந்து வந்து, என் உள்ளத்திற் புகுந்து தங்கியிருப்பதனால், கொலைத்தொழில் வாய்ந்த சிங்கம் புலி யானை பன்றி கொடிய பாம்பு கரடி மனிதக் குரங்கு முதலிய விலங்குகள் எல்லாமும்கூட, நன்மையே புரிவன. அவைகள் அடியார்களுக்கு மிகப் பெரிதும் நல்லனவே ஆகும். (6)

செப்பிள முலைநன் மங்கை ஒருபாகம் ஆக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்து
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

செப்புக் கிண்ணம் போன்ற, இளமையான முலைகளையுடைய, நல்ல அம்மை ஒரு பக்கத்தில் இருக்க, விடை ஏறிவரும் செல்வன் ஆகிய சிவபெருமான், தம்மை அடைபவர்கள் உடன்பட்டு விரும்பும் பிறைச் சந்திரனையும் கங்கை நீரையும் திருமுடிமேல் அணிந்து கொண்டு,என் உள்ளத்திற் புகுந்து தங்கியிருப்பதனால்,வெப்பு நோயும் நளிர்சுரமும் வாதப்பிணியும், மிகுதிப் படுதலால் வருத்தும் பித்தமும், மற்றும் உள்ள தீவினைகளும் வந்து துன்புறுத்த மாட்டா. நன்மையையே உண்டாக்குவன. அவைகள் அடியார்களுக்கு மிகப் பெரிதும் நல்லனவே ஆகும். (7)

வேள்பட விழிசெய் தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

முன்னொரு காலத்தில் மன்மதன் அழியும் படி விழித்து நோக்கி, விடையின் மேல்அமர்ந்து உமையம்மையுடன் சேர்ந்து, ஒளிமிகுந்த திங்களையும், வன்னிமலர் கொன்றைமலர்களையும் திருமுடியிற் சூடிக்கொண்டு வந்து, சிவபெருமான் என் உள்ளத்திற் புகுந்து தங்கி

யிருப்பதனால், ஏழு கடல்கள் சூழ்ந்த இலங்கைக்கு அரசனாகிய இராவணன் போன்றஅரக்கர்களுடன், ஆழம் மிக்க கடல்களும், பிற இடர்களும் எல்லாம் வந்து நம்மைத் துன்புறுத்தமாட்டா. நன்மையையே அளிப்பன. அவைகள் அடியார்களுக்கு மிகப் பெரிதும் நல்லனவே ஆகும். (8)

பலபல வேட மாகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல திருவுருவங்களைக் கொள்ளும் மேலோரும், பெண்ணை ஒருபாகத்தில் உடையவரும், விடையில் ஏறுகின்றவரும், எங்கள் தலைவரும் ஆகிய சிவபெருமான், கங்கையம்மையாருடன், எருக்கம்பூ மாலையையும் சூடிக்கொண்டு, என் உள்ளத்திற் புகுந்து தங்கியிருப்பதனால், தாமரை மலரில் இருக்கும் பிரமனும், திருமாலும், வேதங்களும், தேவர்களும், சுழன்று வருகின்ற காலமும், அலைகின்ற கடலும், மேருமலையும் ஆகிய அனைத்தும் நலனையே விளைவிப்பன. அவைகள் அடியார்களுக்கு மிகப் பெரிதும் நல்லனவே ஆகும் (9)

கொத்தலர் குழலி யோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பூங்கொத்துக்கள் மலர்கின்ற கூந்தலையுடைய அம்மையுடன் சென்று, அருச்சுனனுக்கு அருள் கொடுத்த பண்பு அமைந்த வேடன் ஆகிய ஞானச்செல்வன், ஊமத்த மலரையும் திங்களையும் பாம்பையும் திருமுடிமேற் சூடிக்கொண்டு, என் உள்ளத்திற் புகுந்து தங்கியிருப்பதனால், அப்பெருமானது திருநீறு புத்தர்களுடன் சமணர்களையும் வாதத்தில் தோல்வியுறச் செய்யும். இஃது ஐயம் அற்றுச் சிறந்த உறுதியான செய்தியாகும். அந்தத் தகுதியினால், தம் இயல்பால் தீயனவும்கூட, நலமே கொடுப்பன. அவைகள் அடியார்களுக்கு மிகப் பெரிதும் நல்லனவே ஆகும். (10)

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல்
துன்னி வளர்செம்பொ னெங்கும் நிகழ
நான்முக னாதி யாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொன் மாலை ஓதும் அடியார்கள், வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

தேன் பொருந்திய சோலைபோலக் கரும்புகளும், விளைகின்ற நெற் பயிர்களும் நெருங்கி வளர்ந்து, அதனாற் சிறந்த செல்வ வளம் எங்கும் பரவிப் பெருகுமாறு, பிரமன் முதலிற் பூசித்து வழிபட்ட பிரமாபுரம் என்னும் சீர்காழியில், மறைகளின் பொருள்நுட்பங்களையுணர்ந்து, கலைஞானமும்சிவஞானமும்ஒருங்கே கைவந்த திருஞானசம்பந்தன், வலிய சூரியன் முதலிய கோள்களும், அசுவினி முதலிய நாள்களும், அடியார்களை வந்து துன்புறுத்தாதபடி, பாடிய நல்ல சொன்மாலை யாகியஇக் 'கோளறு திருப்பதிகத்தை' ஓதுகின்ற திருத்தொண்டர்கள், மேலுலகத்தில் அரசாட்சி புரிவர். இம்மையிலும் இனிது வாழ்வர். இது நமதுஆணை. (11)

விஷ்வக் சேனர்

விஷ்வக் சேனருக்குச் சேனைமுதலியார் (படைத்தலைவர்) என்றும், ஒரு பெயர் உண்டு. சேனை நாதன் என்றும் கூறுவர். சைவ சமயத்தில் சிவபிரானுக்குச் சண்டேசுவரர் எங்ஙனமோ, அங்ஙனமே வைணவ சமயத்தில் திருமாலுக்கு விஷ்வக்சேனர் விளங்குகின்றார் எனலாம். சண்டேசுவரர் போலவே, இவர் பெருமாள்கோயிற் பணிகள் பலவற்றையும் மேற்பார்வையிட்டு ஆட்சி செய்வதுடன், பெருமாள் திருவுலாப்புறம் போதருங்கால் உடன் வருபவராவர். விஷ்வக்சேனர் என்னும் சொல்லுக்கு உலகமெங்கும் சேனைகளை யுடையவர் என்பது பொருள். இவர் அனந்தன் கருடன் என்பவர்களைப் போல, நித்திய சூரிகளுள் ஒருவர் ஆவர். இவரே நம்மாழ்வாருக்குக் குரு என்றும், நம்மாழ்வார் ஆக அவதரித்தவர் என்றும் கூறுவர்.

இவர்தம் நிறம் கறுப்பு. தலையில் திருமுடி உண்டு. நான்கு கைகளுடன் இருப்பார். இரண்டு கைகளில் சங்கும் சக்கரமும் விளங்கும். ஏனை இரண்டு கைகளில் கதாயுதமும் பிரம்பும் ஏந்தியிருப்பது உண்டு. சில திருவுருவங்களில் ஒரு கையில் வாளும், மற்றொரு கையில் பிரம்பும் காணலாம். சிலவற்றில் இடக்கை இடுப்பில் இருக்க, வலக்கை அச்சுறுத்தும் அதிகார தோரணையில் காணப்படும்.

வைணவ சமயக் கொள்கையின்படி, நாராயணரும் மகாலட்சுமியும் முறையே முதல் இரண்டாம் ஆசாரியர்களாக விளங்க, இவரே மூன்றாம் ஆசாரியராகத் திகழ்கின்றார். பெருமாள் கோயில்களில் இவருக்கு வடகிழக்கு மூலையிற் சந்நிதி அமைந்திருக்கும். இவர்தம் திருநட்சத்திரம் ஐப்பசிப் பூராடம். மனைவியின் பெயர் சுத்ராவதி. சைவத்தில் விநாயகர்போல, வைஷ்ணவத்தில் இவரை எல்லாச் செயல்களுக்கும் தொடக்கத்தில் வணங்கி வழிபடுவர். திருவரங்கம், பெருமாள் கோயில், திருமலை முதலிய தலங்களில் உள்ள கோயில்களில் பிரம்மோற்சவம் தொடங்குவதற்கு ஒருநாள் முன்னர், இவரைத் திருவீதி எழுந்தருளச் செய்து வலம் வருவிப்பது வழக்கம். பிரம்மோற்சவப் பெருவிழாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செம்மையாகச் செய்யப்பட்டுள்ளனவா? என்று, இவர் மேற்பார்வையிடுவதாக ஐதிகம்.

—ஆசிரியர்.

சைவத் திருமுறைகள்

[திரு. வி. சந்திரசேகரன், B.Sc.]

திருமுறை என்னும் பெயர் சைவசமய ஆசிரியர்கள் அருளிச் செய்துள்ள பாடல்களின் பன்னிரு தொகுதிகளுக்கும் உரியதொன்று. ''சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்'' என மணிவாசகரும், ''திருவே என் செல்வமே தேனே'' எனத் திருநாவுக்கரசரும் பாடியிருத்தலின், திரு என்னும் சொல், சிவம் எனப் பொருள் தரும். முறை என்பது நெறி என்று பொருள் பயக்கும். 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப் படும்' என்னும் திருக்குறளில் வரும் முறை என்னும் சொல்லுக்கு ஆசிரியர் பரிமேலழகர் 'அறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறி' எனப் பொருள் கூறியிருத்தல் காணலாம். ஆதலின் திருமுறை என்பதற்கு, சிவ பரம் பொருளின் பால் நெறிப்படுத்தி உய்விக்கும் நூல்கள் எனப் பொருள் கொள்ளலாம்.

இனி, திரு-தெய்வத் தன்மை; முறை-நூல் எனவும் பொருள் கொள்ளுதல் பொருந்தும். முறை என்னும் சொல், நூல் எனவும் ஒரு பொருளைக் குறிக்கும். இவ்வுண்மையினை யுணர்த்தும் வண்ணம் இச்சொல்,

''இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன்
முறைவரை வேன்என முயல்வது ஒக்குமால்;
அறுமுகம் உடையஒர் அமலன் மாக்கதை
சிறியனோர் அறிவினேன் செப்ப நின்றதே''

எனவரும் கந்தபுராண அவையடக்கச் செய்யுளின்கண், ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியர் அவர்களாற் பயன்படுத்தப்பட்டிருத்தல் காணலாம். ஆதலின் தெய்வத்தன்மை மிக்க சிறந்த நூல்கள் எனவும், திருமுறை என்னும் சொற்குப்பொருள் உரைத்தல் அமையும்.

(1-3) திருஞானசம்பந்தர் அருளியவை முதல் மூன்று திருமுறைகள். அவை தூய சிறந்த நடைநலனும், மிகுந்த இசையினிமையும், உயர்ந்த கலைத் திறனும், எழில் கனிந்த இயற்கைப் புனைவுகளும் செறிந்து, இளமைக்குரிய பெருமித வளர்ச்சியும் வீறும்பெற்று, ஒப்புயர் வற்றுப் பொலிந்து விளங்குகின்றன.

(4-6) திருநாவுக்கரசர் அருளியவை நான்கு, ஐந்து ஆறாம் திருமுறைகள். அவை அறிவு முதிர்ந்து, அனுபவம் பழுத்து, மக்கள் வாழ்க்கைக்கு உறுதிபயக்கும் உயரிய கருத்துக் களைத் திட்பமுறச் சுவைபெருக உருக்கமாக அறிவுறுத்துகின்றன.

7. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்தது ஏழாம் திருமுறை. இவர்தம் பாடல்கள் கலையழகும், இசையினிமையும், நகைச் சுவை நலங்களும் பிறவும் கலந்து நிறைந்து, மனித வாழ்வியலின் அனுபவ வாய்மைகளை, நம்மனோர் மனங்கொளத் தேற்றுகின்றன.

8. மாணிக்கவாசகர் அருளிய எட்டாம் திருமுறை, அழகிய இனிய கருத்துச் செறிவும், அயரா அன்பு நலனும், இறையருளுணர்வின் இணையிலாத் திறமும் நிரம்பி, எளிமை இனிமை தெளிவு முதலியசிறப்புகள் அமைந்தது. கல்லைப் பிசைந்து கனியாக்க வல்ல உருக்க மும் நெகிழ்ச்சியும் உடையதாய், ஒப்புயர்வற்ற பக்திப் பெரு நூலாக மிளிர்கின்ற திருவாசகம் இதன்கண் அமைந்துள்ளது. சங்ககால நல்லிசைப் புலவர் பெருமக்கள் பாடிய அகப் பொருட் செய்திகளோடு, இறைவனின் அருட் டிறச் செய்திகளையும் இனிது இயைத்துக் கலை நல மெலாம் கனிய, மெய்யுணர்வு நுண்பொருட் கருத்துக்கள் செறிந்த செந்தமிழ்ப் பெருங்கரு வூலம் ஆக, ''காமம் சான்ற ஞானப் பனுவல்'' எனக் குமரகுருபரர் பாராட்டும் நிலையில் சிறந்தோங்கித் திகழும்படி, மாணிக்கவாசகர் பாடியருளிய திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் தெய்வத் திருநூலும், எட்டாம் திரு முறையிலேயே அமைந்துள்ளது.

9. ஒன்பதாம் திருமுறை என்பது, திருவிசைப்பா-திருப்பல்லாண்டு என்னும் பதிகங் களின் தொகுதியாகும். திருப்பல்லாண்டு சேந் தனர் அருளியது. திருமாளிகைத்தேவர் கருவூர்த்தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடியது திருவிசைப்பா. கண்டராதித்த சோழ தேவர் (கி.பி. 949-957) பாடிய பாடல்களும், முதலாம் இராஜராஜ சோழன் (கி.பி.985-1014) கட்டிய இராஜராஜேச்சரம் பற்றிய பாடல் களும், இராஜேந்திர சோழன்(கி.பி.1012-1044) கட்டிய கங்கை கொண்டசோழேச்சுரம் பற்றிய பாடல்களும் பிறவும், திருவிசைப்பாவில் அமைந் திருக்கின்றன.

10. பத்தாம் திருமுறை, திருமூலர் அருளிய திருமந்திரம். இது யோக ஞான நுண் பொருள்கள் பலவற்றை விளக்குவது. 'ஞான முதல் நான்கும் மலர் நற்றிருமந்திரமாலை' எனச் சேக்கிழார் இதனைப் புகழ்ந்துள்ளார். இஃது ஏறத்தாழ மூவாயிரம் பாடல்களைக் கொண்டது.

11. பதினொன்றாம் திருமுறை, திருவால வாயுடையார் திருமுகப்பாசுரம் முதலாக, காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர் கோன், சேரமான்பெருமாள், பட்டினத்தார், நம்பியாண்டார் நம்பிகள்முதலியபலர் இயற்றிய 40 பிரபந்தங்களைத் தன்கண் கொண்டிருப் பது.

12. பன்னிரண்டாம் திருமுறை, சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் ஆகும். தமிழகத்தின் சமய-சமுதாய - கலாசார - வரலாற்றுப் பெருங்களஞ்சியம் எனத் தலைசிறந்து விளங்குவது பெரியபுராணம். இதனைத் தமிழ் நாட்டின் தேசிய காவியம் (National Epic) எனக் கூறுவது மிகப்பொருந்தும்.

***

நம்பெருமாள் திருவுருவநலம்

[திரு. அ. தேவராசன், B.A. காஞ்சிபுரம்]

முன்னுரை :

நாராயணன் என்னும் நலம்தரும் சொல்லுக்குப் பலபல பொருள்கள் உண்டு. ஆங்காங்கே, அவ்வவ்விடத்திற்கு ஏற்றபெற்றியில் அச்சொல்லுக்குப் பெரியோர்கள் பலவகைப் பொருள்களைப் பணிப்பர். ''புருஷகார பலத்தாலே சுவாதந்தரியம் தலைசாய்ந்தால், தலையெடுக்கும் குணங்களைச் சொல்லுகிறது நாராயணபதம். அவையாவன : வாத்சல்யமும், சுவாமித்துவமும் சௌசீல்யமும் சௌலப்பியமும், ஞானமும் சக்தியும் என்பன'' என்று பிள்ளைலோகாசாரியர், தாம் இயற்றிய முமுட்சுப்படி என்னும் நூலில் அருளிச் செய்துள்ளார்.

ஆறு குணங்கள் :

(1) வாத்சல்யம்: பசு தன் கன்றினிடத்திலே கொண்டிருக்கும் பரிவு. பசுவானது தான் ஈன்ற கன்றினுடைய உடம்பின் மீதிருக்கும் அழுக்காகிய வழும்பினையும் விரும்பியுண்ணும்; தன்பாலை உண்ணக் கொடுத்துக் கன்றை வளர்க்கும். அக்கன்றுக்கு ஊறு செய்பவர்களைத் தன் கொம்பாலும் குளம்பாலும் எதிர்த்து, தன் கன்றுக்கு யாதொரு ஊறும் நேராதபடி பாதுகாக்கும். அதேபோல இறைவனும் அடியவர்களின் குற்றங்களை ''என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்'' என்று விரும்பி ஏற்றுமகிழ்வான். அவர்களுக்குத் தீங்கு ஏதும் நேராமல் அவர்களைப் பெருங்கருணையுடன் பாதுகாத்து அருள்வான். இறைவனின் இவ்வியல்பே வாத்சல்யம் எனப்படும்.

(2) சுவாமித்துவம்: உடைமையை உடையவனாய் இருக்கும் இருப்பு, சுவாமித்துவம் எனப்படும். சேதனன் ஆகிய உயிர் தன்னைப் புறக்கணித்து விமுகனாக இருப்பினும், அவனைக் கைவிட்டொழிக்க மனம் வாராமல் எப்படியாயினும் ஆட்கொண்டு காத்தருள்தற்கே விரும்பி எதிர்சூழல் புக்குத் திரிவதற்கு உரியபடி, உயிர்களுக்கும் இறைவனுக்குமுள்ள உறவுமுறைமை சுவாமித்துவம் ஆகும்.

(3) சௌசீல்யம்: தான் உயர்வற உயர்ந்தவனாய் இருப்பினும் எத்துணை இழிந்தவரோடும் யாதொரு வேறுபாடுமின்றி ஒருங்கே மேல் விழுந்து புரையறக் கலந்து பழகித் தண்ணளி புரியும் பண்பு.

(4) சௌலப்பியம்: எத்துணையும் உயர்ந்த இறைவன் எத்துணையும் எளிவந்து, யாவரும் சுலபமாகத் தன்னைப் பற்றிக்கொள்ளும்படி தன் வடிவைக் கண்ணுக்கு இலக்காக்கும் எளிமைத் தன்மை.

(5) ஞானம்: உயிர்கள் கீழ்நின்ற நிலையையும், அவைகளை மேல் உய்த்துக் காத்தற்குரிய வழி வகைகளையும் அறிந்திருக்கும் தன்மை.

(6) சக்தி : அங்ஙனம் தான் அறிந்தபடி சேதனர்களின் குற்றங்களையும் இழிவுகளையும் போக்கி, அவற்றிற்குத் தன்னைக் கொடுத்து நலம் செய்தற்குரிய பேராற்றல். நாராயணன் என்னும் நலந்தரும் சொல், இந்த ஆறு பெரும் பண்புகளையும் சிறப்பாகக் குறிப்பிட்டுணர்த்துகின்றது.

நம்பெருமாள் திருவுருவம் :

சிறந்த இந்த ஆறு தெய்விகப் பண்புகளும் திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ளநம்பெருமாள் திருவுருவ அமைப்பில், தெற்றென விளங்குகின்றன என்று பெரியோர்கள் கூறுவர். பெருமாள் தமது திருக்கைகளிலே முறையே தரித்துக்கொண்டுள்ள திருவாழி திருச்சங்கு என்னும் திவ்விய ஆயுதங்கள் அவர்தம் ஞானம் சக்தி என்னும் பண்புகளை உணர்த்துகின்றன. அடியார்களை நோக்கி அஞ்சேல் என்று அருளிச் செய்யும் நிலையிலுள்ள அபயஅஸ்தம் என்னும் திருக்கை, அவரது வாத்சல்யம் என்னும் பண்பைக்குறிக்கும். அவரது திருமுடி, அனைத்திற்கும் அனைவருக்கும் தலைமைநிலையில் விளங்கும் அவர்தம் சுவாமித்துவத்தைப் புலப்படுத்தும். அவரது திருமுகமும் புன்முறுவலும், அவர்தம் சௌசீல்யத் தன்மையைச் சுட்டும். ஒளிமிக்க அழகிய தாமரை மலர்ப்பீடத்தில், அவர்தம் திருவடிகளை ஊன்றி நிற்கும் நிலை, அவருடைய எளிமை என்னும் சௌலப்பியத் தன்மயைச் சாலவும் விளக்கும்.

முடிவுரை :

இங்ஙனம் ஞானம் சக்தி வாத்சல்யம் சுவாமித்துவம் சௌசீல்யம், சௌலப்பியம் என்பன, ஒருங்கே அழகுற அமைந்து விளங்கும் திருவுருவைக் கொண்டு திகழும் திருவரங்கம் நம்பெருமாள் திருவடிகளை, நாம் அனைவரும் அன்புடன் வழிபட்டு இன்புற்று வாழ முயல்வோமாக!

பேதையும் மேதையுமான சீதை

"முத்தமிழ்ப் பெருஞ் சொற்கொண்டல்''

திரு. புரிசை. சு. முருகேச முதலியார், திருவண்ணாமலை.

(முற்றொடர்ச்சி)

கானகத்தில் கவந்தன் கைவலையில் சிக்குண்டு, தவித்தபொழுதுதான் அப்பெரும் பூதத்திற்கு இரையாகி இறந்து விடத் தகுமென்றும், அதற்குக் காரணம் தான் நாட்டிற்குத் திரும்பிச் சென்று சனகபுரம் செல்ல நேர்ந்தால், சீதையைப் பறிகொடுத்துவந்த பேதைமை தன் உள்ளத்தை வருத்தும் என்றும், அங்குள்ளார் பெரிதும் நகையாடுவார்கள் என்றும், இராமன் கூறி வருந்திய செய்தியைக் கடைசியாகக் கண்டோம். இச் சிந்தனையால் இராமபிரான் எங்கெங்கு வருந்த நேர்ந்தன என்பதனைக் காண்பதால், சீதையார் பட்ட பேதைமைத்தனம் நன்கு வெளிப்படலாகும்.

கிட்கிந்தையில் சுக்கிரீவன் அரசில் இருக்கின்றனன். கார்காலம் வந்தது. இராம இலக்குவர் கானகத்தில் மதங்க வனத்தில் ஆசிரம வாசிகளாக இருக்கின்றனர். தேவியைப் பிரிந்த துன்பத்தை அக் கால இயல் மிகவும் பெரிதாக்கி விட்டது. இராமன் காட்சியிற்படும் ஒவ்வொன்றும் அத்துன்பத்தை வளர்ப்பதில் பங்கு கொள்ளுகின்றன. பூத்துக் குலுங்கும் ஒரு பச்சைக்கொடி, அது வாடைக் காற்றினால் மெல்லென அசைந்து ஆடுகின்றது. அக் கொடியை முன்னிலையாக்கிப் பேசுகின்றனன், பெருந்தகை. ''ஏ கொடியே! உனக்கு அமைந்த பெயர் மிக்க கருத்துள்ளது. கொடிய குணமுள்ள உன்னைக் கொடி என்று அழைக்கின்றனர். நீ வலிந்து எனது உயிருள்ளும் நுழைகின்றனை. என் துன்பங் கண்டு சிரிப்பதுபோல் மலர்கின்றனை. என்னை அகன்ற சீதையின் சிற்றிடையை நினைப்பூட்டுகின்றனை. அதனோடு நீ குழைந்து குழைந்து எனது உயிரையுங் குழையச் செய்கின்றனை'' என்று கூறி வருந்தினன்.

''மழை வாடையொடு ஆடி வலிந்து உயிர்மேல்
நுழைவாய் மலர்வாய் கொடியாய் கொடியே!
இழைவாள் நுதலாள் இடைபோல் இடையே
குழைவாய் எனது ஆவி குழைக்குதியோ''

(கார்காலப்படலம்—55)

அங்குள்ள ஒரு பெண் மானைக் கண்டனன், முன் ஒரு மானைத் தொடர்ந்து, ஒரு மானை இழந்து மாழ்குறும் மன்னவன். தான் கண்ட மானை, மானே பிணையே என்று அழைக்காமல் ''உழையே'' என்று அழைக்கின்றனன். ''உழை'' என்ற சொல் இடம் என்ற பொருளையும் உணர்த்தும். (''இடமும் மானும் யாழ் நரம்பும் உழை''-பிங்கலந்தை) இப்போது இராமன் அலைவது ஒரு இடத்தைத் தேடித்தான். பிரியா திருந்த ஒரு செல்வியைப் பிரிய முன்னின்றதும் ஒரு மான்தான். அது எங்கும் இல்லாத மான், யாருங் காணாத மான், யாரும் படாத துன்பத்திற்கு ஆளாக்கிவிட்டது இப்பொழுது காணும் மான், யாவருங் காண நிற்கும் பரம்பரையில் வந்த மான். ஆதலால் அம் மான் படுத்திய துன்பத்தை இம் மான் அகற்ற ஒரு வழிதருமோ? என அலைகின்றது இராமன் உள்ளம். ''ஏ மானே! இடத்திற்கும் உங்கள் இனத்திற்கும் பெயர்ப் பொருத்த முளதே, உழையென்பது உங்கள் பெயரும் இடத்தின்பெயரும் அல்லவா? நான் இப்போது சீதையிருக்கும் இடந் தேடித்தானே அலைகின்றேன்; அவளிருக்கும் இடத்தை நீ கண்டு சொல்ல முடியுமா? கூடுமானால் சற்று உரைப்பாய். அப்படி உரைப்பதனால் எனக்குச் சீதையை மட்டுந் தந்ததாகாய், அவளுடன் சென்ற எனது உயிரையுந் தந்தனையாவாய். சீதை தானே தனியாகப் போய்விடவில்லை. அவள் எனது உயிரையுங் கொண்டு போய் விட்டனள். என்னோடு ப்ன்னாள் பழகிய ஒரு மனைவி, எனது உயிரைக் கவர்ந்து சென்றதேன் என்கின்றனையா? அது அவள் பிழையல்ல, எனது பிழைதான். அது என் குற்றம் என்கின்றனையா? மனையகத்தில் வாழும் பெண்ணுக்கு உயிர் அவள் கணவன். அக் கணவனுக்கு உயிர் எது? அவன் செய்யுந் தொழில். ஒரு தலைமகன் யார் என்ன வேலையிட்டாலும் செய்து விடக்கூடாது. ''தூக்கி வினை செய்'' என்பது முதியோர் கட்டளை. தூக்குதல் என்றால் என்ன? சீர்தூக்குதல். அச் சீர்தூக்கி எதையும் செய்பவர்; ஒருக்காலும் இகழ்ச்சிக்கு உரியவராகார். சொல்லுவார் எதையும் சொல்லலாம். கேட்பவருக்கு அறிவு வேண்டும். அறிவிருந்தும் அதைப் பயன்படுத்தாது தொழில் மேல் சென்றால் துன்பந்தான் வரும். நான் மதியின்றி ஒரு செயலைச் செய்யத் தலைப்பட்டேன். அது இன்று விதியே என வருந்தி அழவைத்துவிட்டது.''

அறிவுண்டு ஆராயவில்லை.

நான் எப்பொழுதும் கீழ்மையிற் செல்லு வேன் அல்லேன். மிக மேன்மையான நெறியி லேயே நிற்பேன். எளிய மக்களைப் போலக் கண்டன எல்லாம் விரும்பமாட்டேன். எனது அறிவு நூலிழையிலும் நுண்ணியது. அந் நுண் ணறிவைக் கொண்டு எதனையும் எக்காலத்தும் ஆராய்வதும், ஆய்ந்து தெளிந்த வழியில் செல் வதுமே எனது வழக்கம். இவ்வகையான நுண்ணறிவு இருந்தும், அவ்வறிவைப் பயன் படுத்தாது ஒருபோது ஒரு தொழிலில் ஈடுபட் டேன். அப் பிழைபாடு எனது மனைவியைப் பிரிந்து வருந்தச் செய்தது. தன்னைத் திருத்த வேண்டிய யான், திருத்தாமல் விட்டதனால் பெருந் துன்னபத்திற்கு ஆளானவள், எனது உயிரைத் துணைகொண்டு சென்றுவிட்டாள். ஏ! மானே! அந்த மாதின் மேல் குற்றமில்லை, அறிவைப் பயன்படுத்தும் சிந்தனையின்றிச் சீர்குலைகின்ற என்னுடையதே பிழைபாடு, என வருந்தினன் இராமன்.

''விழையேன் விழைவானவை மேன்மையின் நின்று
இழையேன் உணர்வேன் அவை இன்மையினால்
பிழையேன் உயிரோடு பிரிந்தனரால்
உழையே! அவர் எவ்வுழையார்? உரையாய்''
(கார்காலப்படலம்—56)

அண்ணல் தனது கூர்த்த அறிவைப் பயன் படுத்தாது விட்டுவிட்டுப் பரிபவப்படுகின்றேன் என்கின்றனனே, அந்த இடம் எங்கே? வனத் திலே மாய மான் வந்தது, மலர் பறிக்க வெளி வந்த சீதையார், அதனை முதலாகக் கண்ட னர், அதன் காட்சியின்பத்தில் கருத்தைப் பறி கொடுத்த சீதையார் ஓடிச் சென்று, தனது தலைவனுக்குப் பொன்மான், பொன்மான், வந்துதான் பாருங்களேன் என்றனர். அப் பொழுதே ''அது பொய் மான்'' என்றனன் இளவல். மெய்யாகப் பார்த்து வந்தேன் வாருங் கள் வாருங்கள் என்று வருந்தினாள் மணமங் கையார். பொய்யோ மெய்யோ பார்ப்போமே, அதிலென்ன குறை என வெளிவந்தனன் வள் ளல். வந்தது வம்பெனக் கருதி, மனங்கேளாது தம்பியும் பின்வந்தனன். மான் மருண்டு நோக்கிற்று. அப்படி நோக்கிய மானைத் தானும் நோக்கினான் தலைவன்.

நோக்கிய தலைவன் ''இது நன்று என்ற னன்''. காரிகை, முன்னமே அதை நன்று நன்று என்று பன்முறை கூறிநிற்கின்றனள். காவலனும் கண்டவுடனே இது நன்று என்றே கூறுகின்ற னன். இத்தலைவன் தலைவி இருவர் சொற் களிலும், சிந்திக்கத் தக்கதொரு சொல், தலைவி சொல் அல்ல. தலைவன் சொல்லே. ஏன்? சீதை கண்டவுடனே நன்றென்றனள், அது நல்லதாக இருக்காது என்றனன், இளவல். இந்த இளவலின் மாறுபட்ட கருத்து வந்தும், அம்மானின் திறத்தை ஆழ்ந்துகண்டு, உடன் பிறந்த துணைவன், மணந்துவந்த துணைவி இருவர் கருத்தையும் நனியாய்ந்து எது நன் றென்று சொல்ல வேண்டிய தலைவன், ஆரா யாமலே ஒருதலையான முடிவிற்கு வந்தது சரி யல்லதான்.

உப்புக் களத்தில் தொழில் செய்கின்றனன் ஒரு ஆண்மகன். அவனுக்கு அவன் மனைவி உணவு கொண்டு வந்து தந்தனள். உப்புக் குன்றில் இருந்தபடியே அவள் கொணர்ந்து தந்த கூழை அருந்தலுற்றனன் அந்த ஆடவன். அது அவனுக்குச் சுவையாக இல்லை. என்ன இது நன்றாகவில்லேயே என்றனன் அவன். அவள் கேட்டனள், அதில் என்ன உப்பில்லையா என்று. அச் சொல் அவனுக்குக் கோபத்தை உண்டு பண்ணிற்று. நானென்ன உப்பிற்கும் வழியற்றவனா? என்னை நீ இப்படிச் சொல்ல லாமா? ஆயிரம் கலம் உப்பின் மலைமேல் இருக்கின்றேன் யான் என்றனன் அவன். அவள் இப்படி அதைத் தாருங்கள் என வாங்கினாள். வாங்கிச் சிறிதே தனது வாயில் இட்டுப் பார்த் தனள். அதில் அடியோடு உப்புதானில்லை. ஒரு துளி அள்ளியிட்டுக் கலக்கிக் கொடுத்தனள். ஆகா எவ்வளவு ருசி, எவ்வளவு ருசி என்று அருந்தினான் அந்த ஆண்மகன்.

தான் உப்பு மலையிலிருந்தாலும், ஒரு சிறிது அள்ளியிட்டால்தான் உணவுக் குவ ளைக்கு உப்பு சேருமல்லவா? அதுபோல எவ் வளவு நுண்ணிய அறிவுடைய ஒருவற்கும், அவ்வறிவைப் பயன்படுத்தினால் அன்றி எப்படி உண்மை விளங்கும்? இந்த நிலையாயிற்று இங்கே இராமபிரான் நிலைமை. சீதை மானைக் கண்டதும் கண்களினால் மாத்திரந்தான், இராமன் மானைக் கண்டதும் கண்களினால் மாத்திரம்தான். இளவல் அதனைக் கண்டது கண்களால் அல்ல, கருத்தினால். மானாக வந்தவனே பகைவன். அவன் இவர்கள் மூவ ரையும் பார்த்துக் கொண்டே புறப்பட்டனன், பார்த்துக் கொண்டே வடிவெடுத்தனன், பார்த் துக் கொண்டே நடக்கின்றனன், நிற்கின்றனன். அவன் இவர்கள் மூவரையும் கருத்தினால் பார்க்கின்றனன். தங்களைப் பார்ப்பவனோ பகைவன். அவன் பார்ப்பது கருத்தினால், அவ் வளவினன் ஒருவனைத் தாங்கள் கொஞ்சமும் கருதுவது இன்றிக் கண்களால் மாத்திரம் கண்டு இது அழகிது அழகிது என்றால் என்ன ஆவது? எலுமிச்சம் பழம் அழகான வடிவினது, அழ கான நிறத்தது. அது உண்டவரின் பித்தத்தை நீக்கி அவர்களை உய்விக்கும். எட்டிப்பழம், எலுமிச்சையிலும் வடிவானது, நிறமானது. அது உண்டவர் அழகை உயிரொடு ஒழிக்கும். இரண்டின் பண்புகளைக் கருத முடியுமானால் கருதிப் பார்க்கவேண்டும். இல்லையானால் கருதி அறிந்துள்ளவர்கள் சொல்லையேனும் கேட்டறியவேண்டும். இல்லையானால் வருவ தென்ன, தொல்லைதான். மானாக வந்த பகை வனோ எப்படியிவர்களைப் பிரிக்கலாம் என்று எண்ணித் தப்படிப் போட்டு நிற்கின்றனன். இவர்கள் ஆசைப் படபட, பெற்றனன் வெற்றி எனச் செருக்கடைகின்றனன் அவன். அவன் செருக்கை அழிக்க வேண்டுமானால் நடக்கும் வகையை அறியவேண்டும். தனது வன்மையை வளர்த்துக் கொள்ளவும் வேண் டும். தம்மைத் தாம் காத்துக் கொள்ளவும் வேண்டும். இந்த ''வகை வளர்வு காப்பு'' மூன்றிலும் முன்னிற்கின்றனன் இளந் துணை வன். அவனை நோக்கி நோக்கி அஞ்சுகின்றனன் பகைவன். அதற்கு மாறுபடும் இருவரையும்

நோக்கி மிஞ்சுகின்றனன் பகைவன். இவர்களால் அவன் செருக்கு வளருகின்றது. ''வகை அறிந்து தற்செய்து தற்காக்க மாயும்-பகைவன் கண் பட்ட செருக்கு'' (திருக்குறள்).

இங்கு பேரறிவுள்ள பெருந்தகை தனது நுண்ணறிவைப் பயன்படுத்திப் பார்க்காமலே அப் பொய்ப் பொருளுக்கு மெய்ப்பொருள் தன்மையளித்து, ''இது நன்று'' என்றது, பெரும் பிழைக்கு வித்திட்டது. இந்த இடம் நோக்கிக் கவி கூறும் ஒரு அழகிய உண்மையைப் பார்ப்போம்.

''நோக்கிய மானை நோக்கி (தனது) நுதியிழை மதியில் ஒன்றும் தூக்கிலன் நன்று இது என்றான்''. இது எங்கே வனத்திடையிலே. அவ்வளவு முன்னரே கவி கூறிய ஒரு கருத்தினைத் தலைவனுங் கருதிப் பார்க்க வேண்டி வந்தது இங்கே. எட்டிக் கனி வடிவை நிறத்தைக் கண்டு கொண்டு உண்டு ஏங்கித் துன்புறும் ஒருவன், அதனால் விளைந்த கேட்டைவிலக்கி நல்லதை யாக்கத் தக்கதொரு எலுமிச்சையைக் கண்ணாரக் கண்டு அதனொடு அளவளாவுவான் போலப் பொய் மான் செய்த துன்பத்தை மெய்ம்மானாகிய நீயுமா செய்கின்றது? எனது தேவியினிருப்பிடத்தைச் சற்றே சொல்லலாகாதா? எனக் கேட்கலாயினன் மதங்க வனத்திலே. கவி தமது கருத்தாகக் கூறும் ஒன்றையும், இடம் நோக்கித் தலைவன் கருத்தாகக் கூறும் ஒன்றையும், மறுபடி ஒத்திட்டுப் பார்ப்போம்.

''விழையேன் விழை வானவை மேன்மையில் நின்று
இழையேன் உணர்வேன் இவை இன்மையினால்
பிழையேன் உயிரோடு பிரிந்தனரால்
உழையே அவர் எவ்வுழையார் உரையாய்''
(இங்கு இராமன்)

''நோக்கிய மானை நோக்கி
நுதியிழை மதியில் ஒன்றும்
தூக்கிலன் நன்று இதுஎன்றான்
அதன்பொருள் துணியலாகும்;
சேக்கையின் அரவு நீங்கிப்
பிறந்தது, தேவர் செய்த
பாக்கிய மாகு மன்றோ
அதன்பொருள் பழுது போமோ''
(அங்கே கம்பர்)

ஊரிலுள்ளவர் கற்கண்டும் கட்டியுந் தின்று சுவைகாண, வயலில் வளர்ந்த கரும்பு ஆலைவாய்ப்பட்டு அங்கம் பஞ்சுபடுவதுபோலத் தேவர்கள் இன்புற இந்தத் தேவதேவன், இவ்வளவு துன்புறுகின்றனன் என்றனர் கம்பர்.

—தொடரும்.

நின்னை யார் நினைக்க வல்லார்?

நிலம் நீர் தீ வளி விசும்பு (பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம்) எனப் பூதங்கள் ஐந்து. **நிலம்,** சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் ஐந்து குணங்களையுடையது. **நீர்,** சப்தம், பரிசம் ரூபம் ரசம் என நான்கு குணங்கள் உள்ளது. **தீ,** சப்தம் பரிசம் ரூபம் என மூன்று குணங்கள் கொண்டது. **வளி,** சப்தம் பரிசம் என இரண்டு குணங்களைப் பொருந்தியது. **விசும்பு,** சப்தம் என்னும் ஒன்றே அமைந்தது. இப் பஞ்ச பூதங்களுக்கும், இவற்றின் குணங்களுக்கும் நிர்வாககனாய் இருக்கும் எம்பெருமானே! நீ இவ்வண்டத்துக்கு உட்பட்டவையாய், ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாய் உள்ள, எல்லாப் பொருள்களுக்கும் ஆன்மாவாக விளங்குகின்றாய். அத்தகைய நின்னைத் தம்முடைய முயற்சியினால், தாமே ஆராய்ந்து சிந்தித்து அறிந்து கொள்ள வல்லவர்கள், ஒருவரும் இல்லை.

''பூநிலாய ஐந்துமாய்ப் புனற்கண்நின்ற நான்குமாய்த்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகால் இரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ணம், நின்னை யார்நினைக்க வல்லரே?''
—திருமழிசையாழ்வார், திருச்சந்தவிருத்தம்.

[பூ-பூமி, பிருதிவி, நிலம்; புனல்-நீர், அப்பு; தீ—நெருப்பு, தேயு; கால்—காற்று, வாயு; மீ—மேல், மேலுள்ள ஆகாசம், விசும்பு. இப்பாடல் ஐந்து பூதங்களையும், அவற்றிற்குரிய குணங்களையும் கூறுகின்றது. ஐம்பூதங்களுக்குரிய குணங்கள் தன்மாத்திரை என வழங்கப்பெறும். ''வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்'' என்னும் திருக்குறளில் ஐம்பூதங்கள் பற்றியும்; ''சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின் வகை தெரிவான் கட்டே யுலகு'' என்னும் திருக்குறளில் ஐம்பூதங்களின் பண்புகளான தன் மாத்திரைகள் பற்றியும், ஆசிரியர் திருவள்ளுவர் குறிப்பிட்டருளியிருத்தல் காணலாம். திருமழிசையாழ்வார் பாடியருளியபடியே,

''பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி''

என்று, மணிவாசகரும் ஐம்பூதங்கள் பற்றியும், அவற்றிற்கு முறையே பண்புகள் ஆய தன்மாத்திரைகள் பற்றியும், தமது திருவாசகத்தில் கூறியிருத்தல், கருதியுணர்ந்து மகிழற்பாலது.]

—ஆசிரியர்

திருவாசகத்தின் இலக்கியத்திறன்*

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை:

தமிழ் இலக்கியங்களுள், திருவாசகத்திற்குத் தனிப்பெருஞ் சிறப்பிடம் உண்டு. திருவாசகத்தின் இலக்கியத் திறனை ஆராய்ந்து உணர்ந்து அளந்து அறிந்து கொள்வதற்கு முன்னர், இலக்கியம் என்பது யாது? அதற்குரிய இலக்கணங்கள் யாவை? என்பது பற்றி ஒரு சிறிது கருதியுணர்தல், நமக்கு இன்றியமையாததாக உள்ளது. இறைவனின் இயல்புகள் பற்றி எங்ஙனம் நாம் வரையறுத்துக் கூறுதல் இயலாதோ, அதுபோலவே இன்னதுதான் இலக்கியம் என்று வரையறை செய்து வகுத்துக் கூறுவதும், நம்மனோர்க்கு ஒருவகையில் அரியதொரு செயலேயாகும்.

இலக்கியநலக் கூறுகள்:

ஒரு சிறந்த இலக்கியமானது தன்னைப் பயில்பவர்களின் அறிவை வளர்ந்தோங்கச் செய்தல் வேண்டும். தான்கூறும் கருத்துக்களைப் பயில்பவரின் உள்ளத்தில் நன்கினிது அழுந்திப் பதியுமாறு, உணர்ச்சி மிக்க முறையில், வெளியிடுதல் வேண்டும். கருத்துக்களை வறிதே வெற்றெனத் தொடுத்துச் செல்லாமல், சுவை பெருகும்படி அழகிய கற்பனைத் திறங்கள் அமையும்வண்ணம் விளக்குதல் வேண்டும். அங்ஙனம் விளக்குங்கால், இலக்கியங்களின் சொல்லிலும் பொருளிலும் அமைப்பிலும் வடிவிலும் ஒரு சிறந்த கலைத்திறன் இயல்பாகப் பொருந்தி விளங்குதல் வேண்டும். இவ்வகையில் சிறந்த இலக்கியங்களில் அறிவுநலக்கூறு (Intellectual element), உணர்ச்சிநலக்கூறு (Emotional element), கற்பனை நலக்கூறு (Imaginative element), கலைநலக்கூறு (Technical element) என்னும் நான்கும், நல்லமுறையில் அமைந்திருத்தல் வேண்டும் என்பது, மேலைநாட்டுத் திறனாய்வாளர்களின் கருத்து. நம் தமிழகத்துச் சான்றோர்களின் திருவுள்ளப்படி, இந்நான்கு கூறுகள் மட்டுமேயன்றி, இனிய சிறந்த நல்ல இலக்கியங்களில், தெய்விகநலம் (Element of Sublimity) என்னும் ஒரு பெருஞ் சிறப்பியற் கூறும் அமைந்திருத்தல் வேண்டும். இந்த ஐந்து வகையான கூறுகளும் நன்கினிது அமையப் பெற்றதே ஒப்புயர்வற்ற சிறந்த இலக்கியமாகும்.

''ஓங்கும் அறிவுநலம், உற்ற உணர்ச்சிநலம்,
பாங்குமிகு கற்பனைப் பண்புநலம்,-தேங்கிமிளிர்
செம்மைக் கலைநலம், தெய்வநலம் சேர்ந்திடில்,ஆம்
மெய்ம்மை இலக்கியநல் வீறு''

—ந.ரா.மு.

தெய்விக நலம்:

''தெய்விக நலம் என்பது, ஐந்து ஊற்றுக்களினின்று பொங்கி எழுகின்றது. அவற்றுள் முதலாவதும் மிக முக்கியமானதும், கருத்துக்களைத் தெளிவுற அறுதியிட்டு உறுதியுடன் தெரிந்து புரிந்து கொள்ளுதலாகும். இரண்டாவது, ஆற்றல்மிக்க உள்ளெழுச்சி உணர்ச்சியாகும். கவிதைச் சிறப்புக்குரிய இவ்விரண்டும், பெரும்பாலும் கருவிலேயே திருவாக அமையத் தக்கன எனலாம். இனி ஏனையன மூன்றும் கலையியற்பாற் பட்டன. மூன்றாவது ஊற்றானது, கருத்துக்கள் இனிய எழில்வடிவம் கொள்ளுதலாகும். அது கருத்துக்களைப் பற்றியனவும், அவற்றை வெளிப்படுத்தும் சொற்களைப் பற்றியனவும் என, இரண்டு வகைப்படும். அடுத்து நான்காம் ஊற்று, குறிப்பிடத்தக்க மொழிநடை பற்றியது. சொற்களைத் தேர்ந்து அமைத்தல், கருத்துக்களுக்குக் கவர்ச்சி மிக்க வடிவம் கொடுத்தல், கவிஞனின் தனியியல்பைப் பலப்படுத்தும் சொல்நடை அமைப்பு என்பவை, இதனைச் சார்ந்தன. இங்ஙனம் மேற்குறித்த நான்கினையும் ஒருங்கிணைத்து இயைத்துப் பொருத்தமான சிறந்த கட்டுக்கோப்புடன் விளங்கும்படி செய்வது, ஐந்தாம் ஊற்று ஆகும்''. இவ்வாறு லாங்கினஸ் (Prof. Longinus) என்னும் இலக்கியத் திறனாய்வாளர், செவ்விதின் விளக்குகின்றார்.

* அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், 'தமிழ்க்கடல்' - 'சிவமணி' திரு. இராய. சொக்கலிங்கம் அவர்கள் நினைவு, அறக்கட்டளையின் சார்பில் நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவியது. 28-3-80).

''தெய்வநலம் ஐந்தூற்றாற் சிறந்தெழூஉம்;
கருத்துணர்ந்து தெளிந்து தேர்தல் ;
தொய்வில்பெரும் உணர்வாற்றல்; சூழ்கருத்திற்கு
உருவொடுசொல் தோற்று வித்தல்;
செய்யநற்சொல் கலையினொடு சிறந்ததனி
இயலமைப்பு; சேர்த்தி வற்றை
மெய்யிணைத்துப் பிணைக்கும்நலம்; இவைஐந்தும்
தெய்வநலம் விளங்கச் செய்யும்'' (1)

—ந. ரா. மு.

இவ்வடிப்படையைக் கொண்டு ஆழ்ந்து நுணுகி ஆராய்ந்து காண்போமாயின், கருத்துக்களின் தெளிவுமிக்க உறுதிப்பாடு, ஆற்றல் மிக்க உள்ளெழுச்சி உணர்ச்சி, கருத்துக்களின் எழில்வடிவ அமைப்பு, அவற்றை வெளிப்படுத்தும் சொற்பொருள் நுணுக்கங்கள், கவிஞனுக்கே உரிய தனிப்பெருஞ் சிறப்பியல்புகள் ஆகியவை, திருவாசகத்தின்கண் அமைந்து விளங்கி, அதனது ஒப்புயர்வற்ற இலக்கியத் திறனைப் புலப்படுத்துதல் காணலாம்.

இலங்குநூல் :

ஒரு நூலை நாம் அஃது இலக்கியமா? அல்லது இலக்கியம் அன்றா? என ஆராய்ந்து முடிவு செய்வதற்குப்பலவகை அளவுகோல்கள் உண்டு. ஒரு சிறந்த இலக்கியமானது, இன்று தோன்றி நாளை மாய்ந்து மறைந்தொழியும் இயல்பினதன்று. அஃது என்றென்றும் நிலைபெற்று நின்று விளங்கும் தன்மை வாய்ந்தது. ஆசிரியர் திருவள்ளுவர் ''விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்'' என்னும் திருக்குறளில் ''இலங்குநூல்'' என்றது, என்றும் அழியாமல் நின்று நிலவும் சிறப்புமிக்க அரும்பெரும் இலக்கியங்களையே யாகும். சிறந்த இலக்கியங்கள் தம்முடைய பலவகை நலங்களால்,''நவில்தொறும் நூல்நயம்போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு'' என்றபடி, தம்மைப் பயில்பவர்களுக்கு ஒரு சிறிதும் தெவிட்டாமல், மேலும் மேலும் சுவை பெருக்கிக் கொண்டு திகழும். தொட்டனைத்தூறும் மணற்கேணி போல, அது தம்மைப் பயில்பவர்களுக்குப் பயிலுந்தோறும் இடையறாத இன்பமும் அறிவும் விளைவிக்கும்; தம்மைப் பயில்பவர்களுக்கு மேலும் மேலும் பயிலும் ஆர்வத்தை மிகுவிக்கும்.

நூறுமுறை படித்தாலும்
தெவிட்டாமல், நுணுகித்தோய்ந்து
ஊறிமிக மேன்மேலும்
ஓதுதற்குப் பெருவிருப்பம்
ஆறுஎனப் பெருகுறப், பல்
ஆயிரங்கால் கற்கவைக்கும்
வீறுயர்நூல் எது?அதுதான்
இலக்கியமாய் விளங்குகிற்கும்! (2)

—ந.ரா.மு.

சிறந்த இலக்கியத்திற்குரிய இச்சீரிய இயல்பு, திருவாசகத்தின்கண் அமைந்து கிடத்தல் அனைவரும் அறிந்தது. திருவாசகத்தினை எத்தனையாயிரம் முறைதான் ஓதினாலும், பாராயணம் செய்தாலும், உண்மை அன்பர்களுக்கு மேலும் மேலும் அதனை ஓதுதற்கு ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் எழுமேயன்றி, ஒருபோதும் போதுமென்ற உணர்வு ஏற்படுவதில்லை. திருவாசகத்தின் இலக்கிய நயச் சிறப்பிற்கு, இதுவும் ஒரு காரணமாகும்.

ஓதுதொறும் உயர் அனுபவம்

ஒரு சிறந்த இலக்கியமானது, காலத்தினால் வாடிச் சிறப்பிழந்து கழிந்தொழியாது. அதன்கண் அதற்கேயுரிய பலவேறு வகையான தனிச் சிறப்பியல்புகள் அமைந்திருக்கும். ஆதலின், அதனை எத்தனை முறை படித்தாலும் சிறிதும் சுவை குன்றவோ, தெவிட்டவோ செய்யாது. அதனைப் பயிலுந்தோறும், அஃது அறிவாகிய உணவை நமக்கு ஊட்டிக் கொண்டேயிருக்கும். அங்ஙனம் அறிவு உணவை ஊட்டிக் கொண்டிருந்தாலும், அது நம் ஆர்வப் பசியைத் தணித்து விடாமல், மேலும் மேலும் வளர்த்துக் கொண்டே இருக்கும்.

காலத்தால் வாடிக் கழியாது; பன்னலமார்
சீலத்தால் குன்றாச் சுவைதிகழும்;—ஏலத்தான்
ஊட்டிப் பசிபெருக்கும்; ஓங்கும் இலக்கியநன்
மாட்சிக் கிணையுண்டோ? மற்று.

—ந. ரா. மு.

எழிலும் பயனும் மிக்க, சிறந்த இலக்கியத்துக்குரிய இந்த இயல்புகள் அனைத்தும், திருவாசகத்தின்கண் சிறப்புற அமைந்து விளங்குகின்றன எனத் துணிந்து கூறலாம். திருவாசகம் தோன்றி எத்துணையோ பல நூற்றாண்டுகள் ஆகியும், அதன் அருமை பெருமைகள் ஒரு சிறிதும் குறைகின்றில. அதனை எத்தனை முறை ஓதினாலும், அதன் சுவையும் இனிமையும் ஒருசிறிதும் குறைவதில்லை.

''ஆவதென்? இதனைக் கண்டிங்
கணைதொறும் என்மேற் பாரம்
போவதொன் றுளது போலும்!
ஆசையும் பொங்கி மேன்மேல்,
மேவிய நெஞ்சும், வேறோர்
விருப்புற விரையா நிற்கும்!
தேவர்அங் கிருப்ப தெங்கே?
போகென்றார் திண்ண னார்தாம்''

—பெரியபுராணம்.

1 "The sublime rises from five fountains. The first and most important is the firm grasp of ideas. The second is vigorous and inspired emotion. These two constituents of poetic excellence are for the most part inborn. The other three come from art. The third is the formation of figures, of which there are two kinds, those of ideas and those of words. Next is notable language, which has as its parts the choice of words and figurative and individual diction. The fifth, which serves to hold all the other in unison is fitting and dignifed arrangement"

—Prof. Longinus,
On the sublime.

2 "Read it a hundred times; it will forever keep its freshness as a petal keeps its fragrance"

—Robert Frost.

(3) "Age cannot wither her; nor custom stale her
Infinite variety: Other women cloy
The appetites they feed; but she makes hungry
Where most she satisfies"

—*William Shakespeare,*
Antony and Cleopatra

என்பதுபோல, நாம் திருவாசகத்தினை ஓதுந் தொறும், நமக்கு ஒருவகைத் தூய்மையுணர்வும், தெய்விக இயல்பும், நம்மை அறியாமலே நமக்கு உண்டாதலை, நாம் நம் அனுபவத்திற் காணலாம். அதனை மேலும் மேலும் பல்லா யிரக் கணக்கான முறை ஓதுதல் வேண்டும் என்னும் ஆர்வமும், பக்தியுமே, நல்லோர்கள் அனைவர் உள்ளத்திலும், இயல்பாக எழுந் தோங்கி வளரக் காண்கின்றோம்.

சிறந்த கவிதையும், நிறைந்த பொருளும்:

ஒரு சிறந்த கவிதை அல்லது இலக்கியம் என்பது, எவருள்ளத்தையும் கவ்விக் கவர்ந்து கொள்ளை கொண்டு, இன்பம் வழங்கும் திறன் அமைந்தது. அஃது ஒப்புயர்வற்ற தூய ஞானி களாகிய அருளாளர்களின் திருவாயினின்று மலரும்! எல்லையில்லாத நுண்மாண் நுழை புலமும், நூற்புலமையும், இனிய உணர்ச்சிப் பெருக்கங்களும், சிறந்த கவிதையின்கண் நிறைந்து திகழும். சொற்களின் அமைப்பாலும், பொருள்களின் சிறப்பாலும், அஃது அழியா இயல்பிற்றாய், எழில்மிக்கு ஓங்கி இலங்கும். பலகால் பாடிப் படித்துப் பயின்று நினைத்து உணருந்தோறும், அதன் சுவைநலம் சிறிதும் குறையாமல் பெருகிக் கொண்டே, வற்றா ஊற்றாய் வளர்ந்தோங்கிச் செல்லும். இத் தகைய ஒப்புயர்வற்ற நற்பெரும் கவிதை களைப் பாடுந் திறம், இறைவனின் திருவருட் கொடையினாலேயே அமைவதாகும்.

''நல்ல கவிதை என்பதுதான்,
தூய ஞானச் சான்றோர்பால்,
எல்லை யிலாநுண் நூற்புலமை,
இனிய உணர்ச்சிப் பெருக்கதனால்,
சொல்லிற் பொருளிற் சிறந்தோங்கி,
நினைக்கும் தோறும் சுவைபெருகி,
வல்ல இறைவன் அருட்கொடையாய்,
வளங்கள் சிறப்ப மலர்ந்துநிற்கும்''
—ந.ரா.மு.

அத்தகைய இறையருட் பயனாம் பாடல் களின், அரிய பெரிய நுண்ணிய பொருள்களை ஆராய்ந்து அளந்து கூறுதல் என்பது, நம்ம னோர்க்கு எளிதில் இயல்வதொரு செயல் அன்று. அதன் பொருள்நலங்கள் நம் அறி வாற்றலுக்கும் தவநலத்திற்கும் ஞானத்திற்கும் ஏற்ப, எல்லையின்றிப் பரந்து விரிந்து கொண்டு செல்லும். ''எல்லையற்ற பல பொருள் நுட்பக் குறிப்புக்களை உணர்த்திக்கொண்டு செல்ல வல்ல தன்மையதாதலே, சிறந்த கவிதை எனத் தெளியப்படுதற்குரிய சீரிய சான்றாகும். சிறந்த நல்ல கவிதைச் செய்யுள் எதுவாயினும், அதனைச் சுற்றி அளவிடற்கரியதொரு பொருட் குறிப்புச் சூழ்நிலை மிதந்து கொண்டேயிருக் யிருக்கும். கவிஞன் கருதியதும் கூறியதும் ஒரு கருத்தேயாயினும், அக்கருத்தே மிக விரிந்து பரந்து, அவன் கருதாத வேறு பல இயை புடைய நற்கருத்துக்களையும், தன்கண் பொலி யத் தோற்றுவித்துக்கொண்டு திகழும்''.(4)

''நல்லிசைக் கவிஞர், திறம்தெரிந்து ஆய்ந்து,
நயம்நனி பொருந்திட ஆளும்
சொல்லில், நுண் பொருள்கள் துதைந்துநன்
றொளிர்ந்து
சுவைமிகப் பெருகிநின் றோங்கி,
எல்லையின் றாக எழில்மிக விரிந்தே,
இனிதுற விளங்கிடும்; அனைய
பல்பொருள் பொதுளப் பாடுமா வல்ல
பாவலர் பெருமை, யார் பகர்வார்?'' (4)
—ந.ரா.மு.

கவியரசும், கவிதையரசும்:

எளிமையான நடையில், தெளிவான முறையில், இனிய சுவைமிக்க கருத்துக்கள் பொதிந்து பொதுளும்படியும், கற்பவர் உள் ளம் கவலை தணிந்து களிப்புற்றுத் திகழும் நிலையிலும், எவரொருவர் அழகு அமையப் பாட வல்லவராகத் திகழ்கின்றாரோ, அவரே சிறந்த கவிஞர்; கவிஞர்களுக்குள்ளே தலை சிறந்த பெருங் கவியரசர் என்று போற்றத் தக்கவராவர்.

''எவர் ஒருவர் எளியநல்ல
இனிய எழிற் சொற்களினால்
சுவைபெருகத் தெளிவுமிகத்
துயர்போக்கி மகிழ்வுறுத்தி
நவையொழிக்கும் பாடல்கள்
நலம்பொதுளப் பாடுவரோ,
அவர்கவிஞர்; கவிஞருளே
அரசர்எனத் திகழ்ந்தொளிர்வர்'' (5)
—ந.ரா.மு.

இவ்வடிப்படையில் செவ்விதின் ஆராய்ந்து கருதினால், மாணிக்கவாசகர் ஒப்புயர்வற்ற ஒரு சிறந்த பெருங் கவியரசர்; அவர் அருளிச் செய்த திருவாசகம், ஈடும் எடுப்புமற்ற ஓர் உயரிய கவிதையரசு எனத்தகுந்த தெய்விகப் பேரிலக்கியமாகும்.

''சிறந்த இனிய கவிதைகளைத் தேர்ந்துணர் வதும், அவற்றைத் திறம் தெரிந்து சுவைத்து மகிழ்ந்து இன்புறுவதும், நாம் நம் மனித வாழ்க்கையைப் புனிதமாக்கிக் கொள்ளும் வழி களுள் ஒன்றாகும். இயற்கைக் காட்சிகளில் காணப்படும் பலவேறு வகையான அழகின் திறங்களைக் கூர்ந்து நோக்கிச் சிந்தித்து இன் புறும் உளநலம் வாய்ந்தவர்களுக்கும்; நம் முடைய மனித வாழ்வின் மறைபொருள் நுட் பங்களை ஆழ்ந்து இனிது ஆராயும் அறிவு நிலையினருக்கும்; சமயம் தத்துவம் முதலிய உயர்ந்த புனிதமான துறைகளில் ஈடுபட்டு, உயர உயரப் பறந்து மேலெழுந்து செல்லும் ஆன்மிக நிலையினருக்கும்; ஒழுக்கத் தூய்மை யையும் இறையருட் பேற்றையும் பெரிதும்

---

4. "The proof of the purest poetry is that its meaning is inexhaustible. About the best poetry, and not only the best, there floats an atmosphere of infinite suggestion. The poet speaks to us of one thing, but in this one thing there seems to lurk the secret of all. He said what he meant, but his meaning seems to beckon away beyond itself, or rather to expand into something boundless which is only focussed in it"

—Prof. *A. C. Bradley,*
Oxford Lectures on Poetry.

5. "They shall be accounted poet-kings,
Who simply tell the most heart-easing things"

—John Keats

விரும்பித் தேடி அடைய முயலும் சிறந்துயர்ந்த குறிக்கோள் கொண்டவர்களுக்கும்; ஒரு நல்ல இனிய சிறந்த கவிதையினைப் போல, நிலையான அழகுடையதாகவும், உள்ளத்தில் நன்கு பதிந்து இன்பம் விளைவிப்பதாகவும் விளங்குவது, வேறு பிறிது எதுவும் இல்லை.''

இயற்கைஎழிற் கின்புறுதல், வாழ்வியலை ஆய்தல்,
மயற்கையறும் மெய்யுணர்வு வானில்-உயர்ச்சியுறல்
நல்லொழுக்கில் நின்றருளை நாடல் உடையவர்
கட்கு,
இல்லை இலக்கியம்போல் இன்பு!

அரியநல் இயற்கை அழகினை ஆராய்ந்து
அகங்களித் தின்புறு பவர்க்கும்,
மருவும்இவ் வாழ்க்கை மறைபொருள் பலவும்
மதித்துணர் அறிஞர்கள் தமக்கும்,
விரிவுறு சமய மெய்யுணர் வொளியில்
விரும்பிமேன் மேற்படர் பவர்க்கும்,
திருவருள் ஒழுக்கம் செறிந்த தூயவர்க்கும்,
சிறந்தநற் கவிதையே இன்பாம்! (6)

—ந. ரா. மு.

''நலஞ்சிறந்த ஓர் இனிய கவிதையானது, வாழ்வியற் கவலைகளால் வருந்தி நிற்கும் மனங்களுக்கு நோய் தணிக்கும் மருந்தாகப் பயன்படுகின்றது. உலகியற்கொடுமைகளையுணர்ந்து சில்லிட்டுப்போன உள்ளங்களுக்குத் தெம்பூட்டி உணர்வளிக்கும் காலைக் கதிரவனின் ஒளி மிகுந்த கதிர்களாக விளங்குகின்றது; கொடிய பழி நெறிகளிலேயே பழகி, இழிதகவான நடத்தையே பயின்று கறைபடிந்து போன இதயங்களுக்கு, அழுக்கு அகற்றும் அழகிய தெளி நீர் ஓடையாகத் திகழ்கின்றது. அறிவும் ஆற்றலும் மிக்குப் பண்பட்ட தூய அகங்களுக்கு அரும்பெறல் இன்ப விருந்தாக மிளிர்கின்றது.''

மனக்கவலை தீர்க்கும் மருந்தாகும்; எல்லா
நினைப்பரிய தீக்குணமும் நீக்கும்:—தனக்கிணை
யில்
ஞாயிறாய்த் தெள்ளமிழ்த வான்யாறாய்த்
தேனூற்றாய்
மாவிருந்தாம் நற்கவிதை மாண்பு! (7)

—ந. ரா. மு.

இலக்கியத் திறன்:

திருவாசகம் தோன்றிய காலந்தொட்டு அதனை நம் தமிழக மக்கள் அனைவரும் ஓதி மகிழ்ந்து பயன்பெற்று வருகின்றனர். எத்துணையோ பல நூற்றாண்டுகளாகத் திருவாசகம் தமிழக மக்களால் பெரிதும் மதித்துத் துதித்துப் போற்றப்பெற்று வருகின்றது. திருக்கோயில்களிலும், வீடுகளிலும், தமிழக மக்கள் அதனைப் பயின்றோதி இறைவனை வழிபட்டு வருகின்றனர். (8) வாழையடி வாழையாக வந்துள்ள நமது தமிழகச் சான்றோர்கள், தவஞானிகள், அருளாளர்கள் ஆகிய பலரும், திருவாசகத்தின்கண் பெரிதும் ஈடுபட்டு, அதனை முறையாக ஓதித் தம் பாடல்களில் அதனைப் பெரிதும் அன்புடன் எடுத்துக் கையாண்டு, போற்றிப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். இவைகளெல்லாம் திருவாசகத்தின் இணையற்ற இலக்கியத் திறன்களை விளக்கப் போதியனவாகும். எனினும் அதன் அரும்பெரும் இலக்கியத் திறனைத் தெற்றென அறிந்துணர்தற்கு, அதன்கண் போதரும் ஓரிரு பாடல்களின் சொற்பொருள் நுட்பங்களை மட்டுமாதல், நாம் ஈண்டு இயன்றவரை இனிது முயன்று ஆராய்ந்து காண்போம்.

"அண்டத்து அரும்பெறல் மேகன்'':

மாணிக்கவாசகர், திருப்பெருந்துறையில் குருவடிவில் வந்து தம்மை ஆட்கொண்டருளிய இறைவனை''அண்டத்து அரும்பெறல் மேகன்'' என்று திருவாசகத்தில், திருவண்டப்பகுதி(66-95) என்னும் அகவலில், சிறப்புறப் போற்றியுள்ளார். இறைவனை ஓர் அரும்பெறல் மேகமாக உருவகம் செய்து, முப்பத்தொரு வரிகளில், மிக விரிவாகவும், அழகாகவும், மாணிக்கவாசகர் விளக்கியருளியிருக்கும் திறம், பெரிதும் வியந்து நயந்து சுவைக்கத் தக்கதாக விளங்குகின்றது.

''பரமா னந்தப் பழங்கடல் அதுவே,
கருமா முகிலில் தோன்றித்,
திருவார் பெருந்துறை வரையில்ஏறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய,
ஐம்புலப் பந்தனை வாள்அரவு இரிய,
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப,
நீடெழில் தோன்றி வாள்ஒளி மிளிர,
எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து,
முரசு எறிந்து,
மாப்பெருங் கருணையின் முழங்கிப்,
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட,
எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்,
செஞ்சுடர் வெள்ளம் திசைதிசை
தெவிட்ட, வரையுறக்
கேதக் குட்டம் கையற ஓங்கி,

---

6. "To a mind brooding on the silent beauty exhibited in the varied phenomena of nature, to an intellect diving deep into the mysteries that lie in the most corners of life, to a soul soaring high into ethereal regions of religion and philosophy, to a spirit seeking serence rest in moral sanctity and Divine grace, nothing appears so permanently beautiful, so certainly impressive and effective, as the study of a fine piece of poetry".

—Maraimalai Adigal

7. "The soothing power of poetry is great and its influence on our mind is vivid and sweet. To hearts eaten away by sorrow and wordly cares, the reading of poetry comes as a healing balm; to hearts chilled by the icy hand of cruelty, it appears like the warming rays of the morning sun; and to hearts stained with blackest crime and the basest vice, it comes as the washing water of a crystal rill. Ah! How lovely are the changes wrought by poetry in the mind of man; and how profound and permanent are the moral effects it brings into his inward nature.''

—Maraimalai Adigal

8. "These poems are daily sung throughout the whole Tamil country with tears of rapture, and committed to memory in every Saiva temple by the people, amongst whom it is a traditional saying, that the sage of Thiru-Vathavur was a sincere seeker after God, whom, in ways that he then knew not of, he has since been permitted to know and worship..Scarcely ever has the longing of human soul for unity and peace and divine fellowship found worthier expression..."

—Rev. Dr. G.U.Pope

இருமுச் சமயத்து ஒருபேய்த் தேரினை,
நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்,
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவபெருந் தாபம் நீங்காது அசைந்தன ;
ஆயிடை வானப்பேர் யாற்று அகவயிற்
பாய்ந்தெழுந்து இன்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொருது அலைத்து
இடித்து,
ஊழூழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித்து எழுந்து,
உருவ அருள்நீர் ஓட்டா, அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி, மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி, நிறைஅகில்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்,
மீக்கொள மேன்மேல் மகிழ்தலின் நோக்கி,
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்,
தொண்ட உழவர் ஆரத் தந்த,
அண்டத்து அரும்பெறல் மேகன் வாழ்க!''

பாடலின் பொருள் :

''மிக மேலான இன்பப் பழங்கடல் ஆக விளங்கும் சிவமானது, கரிய பெரிய மேகம் போலத் தோன்றி, திருப்பெருந்துறை என்னும் மலையின்மீது ஏறி, விந்துதத்துவம் ஆகிய மின்னல் ஒளியினை, எல்லாத் திசைகளிலும் பரவுமாறு செய்து, ஐம்புல அவாக்கள் ஆகிய பாம்புகள் இரியவும், உலகியற் றுன்பங்களாகிய கோடைகால வெம்மை ஒழியவும், அருள் மழையினைப் பொழிந்தது.''

''மழை பொழியுங்கால், மின்னலும் இடியும் தோன்றுதல் இயல்பு. சிவமேகம் அருள்மழை பொழியுங்கால், விந்துதத்துவம் மின்னலாக மின்னியது; நாத தத்துவம் இடியிடித்தாற் போல முழங்கியது. மின்னியும் இடித்தும் மழைபொழியும் நிலையில், இந்திர கோபப் பூச்சிகள் பரவிப் பெருகும். உயிர்களின் அளவில்லாத பிறவிகள், இந்திர கோபப் பூச்சிகள் போல மிகுந்து காணப்படுகின்றன. கார்காலத்திற்குரிய தோன்றி மலர்கள் மலர்வது போல, சிவத்தின் 'அஞ்சல்' என்ற திருக்கை விளங்கியது. காந்தள் மலர்களைப்போல, அடியார்களின் கூப்பிய கைகள் திகழ்ந்தன. அருள் ஆகிய வெள்ளம், இன்பச் சுழிகளைச் சுழல விட்டுக்கொண்டு பெருக்கெடுத்து ஓடுகின்றது.

''இவ்வருள் வெள்ளத்தின் நீரைத் தலைப்பட்டுப் பருகுதற்குத், தவப்பேறு ஒரு சற்றும் வாய்க்காத பேதை உயிர்கள் ஆகிய மான்கூட்டங்கள், பிறவித் துன்பமாகிய நீர்விடாய் மேற்கொண்டு, அறுவகைப் பொய்ச் சமயங்களாகிய கானல் நீரினை உண்மைநீர் என்று மயங்கி, அலைந்து திரிந்து வருந்துகின்றன.''

''இந்நிலையில் அருள் வெள்ளமானது பெருகுதலால், மலப்பிணிப்பு ஆகிய பந்தம் என்னும் ஆற்றின் கரைகள், இருபுறத்தும் இடிந்து சிதைந்து அழிகின்றன. இருவினைகளாகிய மாமரங்கள் வேரோடு பறித்து வீழ்த்தப்படுகின்றன. இவ்வருள் வெள்ளத்தினை அடியார்கள், தங்கள் உள்ளமாகிய பெரிய குளங்களில் நிரப்பிக் கொள்கின்றனர்.''

''அங்ஙனம் நிரப்பிக் கொண்ட அடியார்களாகிய உழவர்கள், வழிபாடு என்னும் வயலில், அன்பு என்னும் விதையினை விதைத்து, பேரின்பம் ஆகிய பயிர் விளையும்படி செய்து, சிவபோகம் என்னும் சிறந்த பயனை நிரம்பத் துய்த்து மகிழ்கின்றனர்.''

''இங்ஙனம் அருச்சனையாகிய வயலில், அன்பு ஆகிய விதையை விதைத்து, தொண்டர்கள் ஆகிய உழவர்கள், அநுபவித்து இன்புறும்படி தந்த, அண்டத்து அரும்பெறல் மேகன் ஆகிய சிவபெருமான், நீடு இனிது வாழ்க!'' என்பது, மேலே குறிப்பிடப்பெற்ற திருவாசகத்துத் திருவண்டப் பகுதி வரிகளின் திரண்ட பொருள் ஆகும்.

இலக்கியச் சுவைத்திறன் :

இவ்வினிய அழகிய பகுதியின்கண், எல்லாம் வல்ல இறைவனை, அவன்றன் பேரருட் பெற்றிமை பற்றி, **மேகம்** என்று குறிப்பிட்டுச் சிறப்பித்து உரைக்கத் தலைப்பட்ட மாணிக்க வாசகர், அவ்வடிப்படைக் கருத்தினையே படிப்படியே தொடர்புடைய ''கடல்-மலை-மின்னல்-இடி - அரவு-கோடை-மழை- தோன்றிப்பூ-தம்பலப்பூச்சி - காந்தள்மலர் - வெள்ளம் - சுழி - கரை-மரம் - கானல்நீர் - மான்கூட்டம் - குளம்-வயல் - உழவர் - விதை - பயிர்'' என்னும் பலவற்றினையும் ஒரு தொடர்புபடத் தொகுத்தமைத்து வரிசையாக்கி, அவைகள் பலவற்றையும் அழகுற இணைத்துப் பிணைத்து, நீண்டதோர் உருவகம் செய்து, இறைவனின் திருவருட் சிறப்பினை விளக்கியுள்ள திறம், அறிஞர் அனைவருக்கும் கழிபெருஞ் சுவை பயக்கும் இலக்கிய நலம் செறிந்த தொன்றாகும். திருவாசகத்தின் இலக்கியச்சுவை நலத்தின் திறத்திற்கு, இஃது ஒரு சிறந்த இனிய அரும்பெறல் எடுத்துக்காட்டு எனலாம்.

கவிஞன் தன் உள்ளத்தில் தோன்றும் நுண்ணிய கருத்துக்களை, ஏனையோர் உள்ளங்களிலும் நன்கினிது பதியும்படி, ஓர் உருவம் கொடுத்துத் திண்ணிய பொருளாக்கி, அழகும் சுவையும் அமையுமாறு வெளிப்படுத்துகின்ற ஓர் அரும்பெறல் அணியே, உருவகம் எனப்படும். கவிதைத் துறையில் உருவகம் என்னும் அணியானது, மிகவும் முதன்மையும் சிறப்பும் அருமைப்பாடும் வாய்ந்தது. அருவமாகவும் நுண்மையாகவும் திகழும் கருத்துக்களுக்கும் பண்புகளுக்கும் ஓர் அழகிய பருவடிவம் படைத்துக் கொடுத்து, அவற்றை அனைவருடைய மனக்கண்ணுக்கும் புலப்படுமாறு கொணர்ந்து நிறுத்தி விளக்குவது, உருவக அணியின் சிறப்பியல்பாகும். இத்துணைச் சிறந்த உருவகங்களை, மிக்க பொருத்தமும் சிறப்பும் உடையனவாகக் கையாளும் திறன் ,பெரும் புலமை நலம் எய்தப்பெற்ற ஒரு சில மேதைகளுக்கே அமைந்து இயலும்.

உருவக வகைகள் :

இத்தகைய சிறந்த புலமை நலம் கைவரப்பெறாதவர்களுக்குத் தம்முடைய கவிதை

களில் உருவகம் புணர்த்துதல், எளிதில் இயல மாட்டாது. மிக முயன்று ஒரோவழி உருவகம் புனைந்தாலும், பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதைபோல, அஃது ஒன்றில் தொடங்கி, மற்றொன்றிற் சென்று, வேறு பிறிதொன்றாகி, அறவே பிழைபட்டு முடிந்தொழியும். இன்னோரனைய பிழைபட்ட உருவகங்களையே, ''கலப்பு உருவகம்'' (Mixed Metaphor) என்பர் அறிஞர்.

I smell a rat;
it is on the air;
I shall nip it in the bud

என்னும் ஆங்கில மொழிச் சொற்றொடர் போல்வன, இக்கலவை யுருவகத்திற்குப் பொருத்தமான நல்ல எடுத்துக்காட்டாகும்.

இங்ஙனம் ஒன்றில் தொடங்கி, மற்றொன்றிற்குச் சென்று, பின் வேறொன்றாக முடிந்து பிழைபட்டொழியாமல், ஒன்றோடு ஒன்று இயல்பான தொடர்பும் இயைபும் பொருந்துமாறு, திறன் தெரிந்து தேர்ந்து அமைத்தல், சிறந்த கவிஞர் பெருமக்களுக்கே செவ்விதின் வாய்க்கும். இதனை இயைபு உருவகம் என வழங்குவர்.

மேலும் இவ்வியைபு உருவகத்தினையே அரைகுறையாகச் செய்து விடுக்காமல், முழுவதும் அமைந்து பொருந்துமாறு முற்றாக எடுத்து, நீளப் பிணைத்துத்தொடுத்து முடித்தல் என்பது, ஓர் அரிய பெரிய கலைத்திறன் என்பதில் ஐயமில்லை. இங்ஙனம், எடுத்த ஒரு கருத்தினையே படிப்படியாக வளர்த்துப் பொருத்தமுற இயைத்து, நீள நெடுகத் தொடுத்து முடிக்கும் உருவகம், முற்றுருவகம் (Sustained Metaphor) எனப்பெயர்பெறும்.

இயைபு முற்று உருவகம்:

தனித்தனியே பல இடங்களிலும் சிதறிப் பிரிந்து கிடக்கும் பொருள்களை யெல்லாம், ஒருங்கே தொகுத்துத் தொடர்புபடுத்தி, அவ் அருங்கலைத் திறத்தால், நம்மனோரின் சிந்தனையுணர்வுக்குத் தெவிட்டாத விருந்தளித்து, உவகைச்சுவையூட்டி நிற்கும் மாட்சிமையுடையது, இயைபு முற்று உருவகம் என்னும் அணி. திருவண்டப்பகுதி என்னும் திருவாசகப் பாடலின்கண், இத்துணைச் சிறந்த இயைபு முற்றுருவக அணியானது, இணையற்ற எழில்மிக்க முறையில் அமைந்திருப்பது, திருவாசகத்தின் இலக்கியத் திறனை விளக்குவதற்குப் போதிய சான்றாகும்.

உருவகப் பொருத்தம்:

(1) மாணிக்கவாசகர் சிவபெருமானைப் ''பரமானந்தப் பழங்கடல்'' எனக் குறிப்பிடுகின்றார். கடல் எல்லையற்றுப் பரந்து விரிந்து விளங்குவது. இறைவனும் அத்தகையவன். உலகைச் சூழ்ந்து கிடக்கும் கடல்களின் வேறு பிரித்து, இறைவனை உணர்த்துவதற்காகப் 'பழங்கடல்' எனவும், 'பரம ஆனந்தக்கடல்' எனவும் சிறப்பித்தார்.

2. கடல் நீரே மேகமாக மாறி வருதல் போல, இறைவனே குரு வடிவத்தில் தோன்றி எழுந்தருளிப் போந்த அருமைப்பாடும் சிறப்பும் விளங்க,''அண்டத்து அரும்பெறல் மேகன்'' என்றார். மழை பெய்து உலகைக் காக்கும் மேகம், அருள் சொரிந்து உயிர்களைக் காத்து நலம் புரியும் இறைவனின் இயல்புக்கு,ஒருபுடை உவமையாகும். மேகம் போன்று வரையா வண்மையுடைய இறைவன் 'மேகன்' எனச் சிறப்பிக்கப்பெற்றான். அவனது அருமையும் பெருமையும் முறையே 'அரும்பெறல்' - 'அண்டத்து' என்னும் அடைமொழிகளால் உணர்த்தப்பெற்றன.

3. மேகம் ஒரு மலையைச்சென்று சார்ந்து, அங்கே தங்கிப் படிந்து மழைபொழியும் தன்மையதாதல் போல, இறைவன் குருவடிவம் கொண்டு, திருக்கயிலையினின்று பெயர்ந்து சிறப்புமிக்க திருப்பெருந்துறைக்குப் போந்தருளினன் ஆதலின், அத்தலத்தினை மலையாக உருவகம் செய்து 'திருவார் பெருந்துறை வரையில் ஏறி' என்றார்.

4. மேகம் மலையின்கட் சென்று தங்கி மழை பெய்யத் தலைப்படுங்கால், மின்னல் ஆகிய ஒளியைத் தோற்றுவிக்கும்; அதுபோல இறைவன் குருவடிவம் கொண்டு, போந்து, தனது பேரெழில் ஒளிவடிவைக் காட்டினன் ஆகலின், அதனைத் 'திருத்தகும் மின்னொளி' என்றார்.

5. மேகத்தினின்று மழை பொழியத் தலைப்படுங்கால், மின்னலுடன் இடி முழக்கமும் நிகழ்தல் இயற்கை. அதுபோல இறைவனின் திருவுருவக் காட்சி எய்தும் பேறுபெற்ற அடியவர்களுக்கு, அவ் இறையருளால் மணி கடல் யானை குழல் மேகம் வண்டு தும்பி வீணை பேரிகை யாழ் என்னும் தசவித நாதங்கள் முழங்குதல் கேட்கப்பெறும். ஆதலின், அவ்வனுபவத்தினை ''முரசு எறிந்து மாப் பெருங் கருணையின் முழங்கி'' என மாணிக்க வாசகர் மொழிந்தருள்கின்றார்.

6. மேகம் மழை பொழியுங்கால் நிகழும் மின்னலொளியும், இடி முழக்கமும் காரணமாகப், பாம்புகள் இறந்துபட்டு அழிவது இயல்பு; அம்முறையில் இறைவனின் திருவுருவக் காட்சியும், திருவருட்பேறும் தலைப்பட்ட அடியவர்களுக்குத் தம்மைக் கட்டுறுத்திப் பிறவியின் கண் செலுத்திவந்த பந்தனைகள் ஆகிய ஐம்புல அவாக்கள் அறவே நீங்கி அழிந்தொழிதல் பற்றி ''ஐம்புலப் பந்தனை வாள் அரவு இரிய'' என்றார்.

7. மேகம் மழை பொழியத் தொடங்கினால், கோடை காலத்தின் வெப்பம் குறைந்து தணிவு எய்தும். அதுபோன்றே இறைவனின் திருவருளுக்கு உரியவராயின பின், அடியவர்களின் துயரங்களும் முடிவெய்தும். இவ்வுண்மை ''வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப'' எனச் சுட்டப்பெற்றது.

—(தொடரும்)

"புள்ளின் பின் போன தனிநெஞ்சம்"

முன்னுரை :

''அடியவர்களுக்குக் கடவுள் இடத்தில் ஏற்படும் அளவற்ற பேரன்பின் இயல்பினைப் பால்இயற் காதலுணர்வு நிலையில் வைத்து, ஒப்புமைப்படுத்தி உருவகம் செய்து அழகுற விளக்குதல், அனைத்துச் சமயங்களிலும் காணப்படுகின்ற, ஒருவகைச் சிறந்த இலக்கிய நுண்பொருட் கவிதை மரபு நெறியாகும். ஒருசிலர் பிறழ நினைப்பதுபோல, அஃது ஓர் இழிதகவான காம உணர்ச்சி பற்றிய நோய்க் கூறு என்று தவறாக நினைத்தல், பொருந்துவ தன்று. அது மிகவும் தூய புனிதம் சான்ற மேலான விண்ணுலகத்துத் தெய்விகக் காதலுணர்வின் அனுபவ நலத்தை, மண்ணுலக மக்களாகிய நம்மனோர்க்கு விளங்கச் செய்து உணர்த்தும்பொருட்டு, கவிதைகளும் இலக்கியங்களும் கையாளுகின்ற ஒருவகை மரபு நெறிக் கருவியேயாகும். இத்துறையில் ஆழ்வார்களாகிய வைணவ சமயப் பெரும் சான்றோர்கள் அருளிச் செய்துள்ள பாடல்கள், ஈடும் எடுப்பும் அற்று, உலக இலக்கியங்களிலேயே எழிலோங்கிச் சிறந்து திகழ்கின்றன எனத் துணிந்து கூறலாம்.''*

பராங்குச நாயகியாக மாறி, நம்மாழ்வார் பாடியருளியுள்ள, நலம் சிறந்த திருவிருத்தப் பாடல்கள் அனைத்தும், இதற்கு ஓர் இணையற்ற இனிய எடுத்துக்காட்டு ஆகும். அத்தகைய சிறப்புமிக்க திருவிருத்தப் பாடல்களுள் ஒருவிருத்தப் பாடலை மட்டும், ஈண்டு இயன்றவரை காண்போம்.

குழற்கோவலர் மடப்பாவையும்
மண்மகளும் திருவும்
நிழற்போல்வனர் கண்டு நிற்கும்கொல்?
மீளும் கொல்? தண்ணம் துழாய்
அழற்போல் அடும் சக்கரத்து அண்ணல்
விண்ணோர் தொழக்கடவும்
தழற்போற் சினத்த அப்புள்ளின்பின்
போன தனி நெஞ்சமே.

பொழிப்புரை:

குளிர்ந்த அழகிய துளசி மாலையையுடையவனும், கொடியவர்களை நெருப்புப்போல் அழிக்கின்ற சுதரிசனம் என்னும் சக்கரப்படையுடையவனும் ஆகிய திருமால், தேவர்கள் வணங்கும்படி ஏறிச் செலுத்துகின்ற, பகைவர்களைக் கொல்லுதலில் நெருப்புப் போன்ற சீற்றத்தையுடைய, அந்தக் கருடாழ்வான் ஆகிய பறவையின் பின்னே சென்ற, என்னுடைய துணையில்லாதநெஞ்சமானது, புல்லாங்குழலையுடைய இடையர்களின் இளமையும் அழகும் உடைய மகள் ஆகிய நப்பின்னைப் பிராட்டியும், பூமிப் பிராட்டியும், பெரிய பிராட்டியும், எம்பெருமானுக்கு நிழல் போலே பிரிவின்றியிருக்க, அவர்களைப் பார்த்துக் கொண்டு, அங்கேயே தங்கி விடுமோ? அல்லது இங்கு மீண்டும் திரும்பி வருமோ? தெரிந்திலது.

விளக்கவுரை :

இது, காதலனின் பிரிவால் வருந்துகின்ற காதலி தன் மனத்தைப் பெரிதும் நொந்து கூறும் முறையில் அமைந்த பாசுரம் ஆகும். தம்முடைய நெஞ்சைத் தம்மின் வேறுபோலப் பிரித்துப் பேசுதல், ஒருவகைக் கவி மரபு. பெருமாளைக் கருடாழ்வானின் மீதும், பிராட்டிமாருடனும் சேவிக்க விரும்பும் ஆழ்வாரின் அளவற்ற காதலை இப்பாசுரம் விளக்குகின்றது. இத்தகைய தமது தெய்வக் காதல், உண்டியே உடையே உகந்தோடும் உலகத்தார் நிலையில் மாறி நிலைகுலையாமல், மேலும் மேலும் இங்ஙனமே வளர்ந்தோங்குதல் வேண்டும் என்னும் ஆழ்வாரின் திருவுள்ளத்தை, இப்பாசுரம் இனிது உணர்த்துகின்றது.

(1) நப்பின்னைப் பிராட்டியானவள் கும்பர் என்னும் இடையர்குலத் தலைவனின் மகள் ஆதலால், ''குழற்கோவலர் மடப்பாவை'' என அவளைச் சிறப்பித்தார். வேய்ங்குழலின் இசை இனிமையினால் அறிவில்லாத பசுக்களையும் வசப்படுத்தவல்ல இடையர் குலத்தில் பிறந்ததனால், பண்மயத்த தன் மொழியழகின் இனிமையினால் பேருணர்வினன் ஆகிய பெருமாளையும், தனக்கு அடிமையாகும்படி வயப் படுத்த வல்லவள் என்பது குறிப்பு நுண்பொருள். குழல் என்பதைக் கூந்தற்கும் அடையாகக் கொள்ளலாம்.

(2) சீதேவி பூதேவி நீளாதேவி என்னும் தேவியர் மூவரும், இறைவனை விடாது பிரிவறத் தொடர்ந்து நிற்பது பற்றியும்; அவனது உள்ளக் களிப்பிற்கும் கிளர்ச்சிக்கும் காரணமாயிருப்பது பற்றியும்; அவனது திருவடிச் சார்பு

---

*"Though yearning after God is often delineated on the analogy of Sex-love, this analogy is seldom carried to excess by studied attempts at following all the pathological symptoms of erotic love. It therefore, represents a very chaste form of the expressions of divine love in terms of human love. The The Azhvars were probably the pioneers in showing how love for God may be on terms of tender equality, softening down to the rapturous emotion of conjugal love."

—*Prof. S. N. Das Gupta*,
The History of Indian Philosophy,
Vol. II. p.84.

பெற்றிருப்பது பற்றியும், ''நிழல் போல்வனர்'' எனச் சிறப்பித்தார். இனி, எம் பெருமானுக்கு நிழல் போன்றிருப்பவர்கள் என்று பொருள் கொள்வது அல்லாமல், இவர்கள் தம்மில் ஒரு வருக்கொருவர் சீறுபாறு என்று பிணங்கிப் பூசலிடாமல், ஒருவருக்கொருவர் உள்ளம் ஒத்து அன்பின் இயைந்து நிழல்போல்விளங்கும் இயல்பினைக் குறித்ததாகவும் கொள்ளலாம். இங்ஙனம் அன்றி, அடியார்களுக்கு அவர்களின் உள்ளம் மகிழும்படி, அரிய பல நல்ல தண்ணளி களைச் செய்து, நிழல் போன்றிருப்பவர்கள் என்றும் பொருள் கொள்ளுதல் பொருந்தும்.

(3) இத் தேவிமார்கள் இறைவனிடத் திருந்து ஒரு சிறிதும் பிரியப்பெறாமல் இருப்பது போல, நமக்கும் நித்தியயோகம் கிடைக்குமோ! இன்னமும் மாறிமாறிப் பலபிறப்பும் பிறக்கும் படியாகவே நேருமோ என்று, பராங்குச நாயகி யாகிய ஆழ்வார் கவலைப்படுகின்றனர். ஆதலின் அக்கவலையுணர்வைத் தமது நெஞ்சின்மேல் ஏற்றி, 'கண்டு நிற்குங்கொல்? மீளுங்கொல்?' என ஆழ்வார் ஐயுற்று வினவி அலமருகின்றார்.

(4) ''தண்ணந்துழாய் அழல்போல் அடும் சக்கரத்து அண்ணல்'' என்பதற்கு, குளிர்ந்த துளசிமாலையையும், நெருப்புப் போலப் பகைவர்களைச் சுட்டு அழிக்கின்ற சக் கரத்தையும் உடைய, பெருமாள் என்றுபொருள் கொள்வது மட்டும் அன்றி, வேறு வகையாகவும் பொருள் கொள்ளலாம். குளிர்ச்சியையுடைய தாகக் கூறப்பெறுகின்ற துளசி மாலையினு டைய தாங்குதற்கரிய வெப்பத்தைப்போல, மிகுந்த வெப்பம் உடையசக்கரத்தைக்கொண்ட பெருமாள் எனவும் பொருள் கொள்ளலாம். 'குளிர்ந்த துழாய்மாலையும் வெப்பமுடைய தாக விளங்குமோ?' எனச் சிலர் வினவுவர். காதல் வயப்பட்டு வருந்துபவர்களுக்குக் குளிர்ந்த பொருளுங்கூட வெதும்புவதாகவே விளங்கும். ''மேவு தண்மதியம் வெம்மதிய மாலோ, மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாலோ'' எனப் பிறிதோரிடத்தில் இவ்ஆழ்வார் பாடி யிருத்தல் இதற்குச் சான்றாகும்.

(5) இனி 'புள்ளின்பின் போன தனி நெஞ்சம்' என்னும் தொடருக்குப்பெரியோர்கள் பின்வருமாறு நுண்பொருள்கள் கூறுவர். (1) கருடன் வேதவடிவினன். ஆதலால் சிறந்த பிரமாணம் ஆகிய வேதத்தை ஆழ்வாரது திரு வுள்ளம் பின்பற்றிக் கடைப்பிடித்து ஒழுகுதல் உணரலாம். (2) 'தழல்போல் சினத்த அப்புள்' என்று பகைவரை அழிக்கவல்ல அந்தப் புள்ளின் ஆற்றலைக் கூறுதலால், அவ்வேதப் பிரமாணம் புறமதங்களின் புன்மைகளை அழிக்கவல்லது என்பதை உணரலாம். (3) 'சக்கரத்து அண்ண ணல் கடவும் புள்' என்றதனால் அந்த வேதப் பிரமாணம், இறைவனின் அருள் வரம்புக்கு உட்பட்ட அரும்பெறல் உடைமை என்பது விளங்கும். (4) 'விண்ணோர் தொழக் கடவும் புள்' என்றதனால் அந்தப் பிரமாணத்தின் வலிமையால் தேவர்கள் யாவரும் இறைவ னுக்கு அடிமைப்படுவர் என்பது பெறப்படும்.

முடிவுரை :

ஆழ்வார், தமது திருவுள்ளம் வேதங் களிலே புகுந்து ஈடுபட்டு, அந்தப் பிரமாணங் களின் மூலமாகத் திருமாலை அனுபவிக்கத் தொடங்கிற்று என்றும்; இணையற்ற இவ் அருளனுபவம் இங்ஙனமே மாறாமல் நிலை பெற்று நித்தியமாய் இருக்குமோ? அல்லது நிலை பிறழ்ந்து மாறிப்போய் விடுமோ? அங் ஙனம் மாறிவிடின் யான் எங்ஙனம் ஆற்றவல் லேன்? என்றும்; தமக்குத் தம் ஆராமையினால் ஏற்படும் ஐயப்பாடுகளை, இப்பாசுரத்தில் அருளிச் செய்திருக்கின்றார் என்று பெரி யோர்கள் பணித்தருள்வர். —ஆசிரியர்.

சிறந்த நற் கவிதை

வித்தகப் பொருளின் மாட்சி,
வியத்தகு சொல்லின் ஆட்சி,
மெய்த்திறம் திட்பம் நுட்பம்
விளக்கம், மற் றியாவும் மேவி,
எத்தனை முறைகற் றாலும்,
எழில்நலம் மேன்மேல் ஓங்கித்
தித்திக்கும் பாடல் தானே,
சிறந்தநற் கவிதை யாகும்! *

ந. ரா. முருகவேள், M.A..M.O.L.

* **"Read it a hundred times, it will for ever keep its freshness as a petal keeps its fragrance."** —*ROBERT FROST.*

சென்னைத் திருமயிலாப்பூர் அருள்மிகு மாதவப்பெருமாள் திருக்கோயில் வசந்த கல்யாண மண்டபத் திறப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன், ஆணையர் திரு யு. சுப்ரமணியன், I.A.S. மேற்பார்வைப் பொறியர் திரு என். இராமச்சந்திரன், B.E., F.I.E. திரு டி. கே. கபாலி, எம்.எல்.ஏ., திரு எஸ். வேங்கடாசலம் முதலிய பெருமக்கள் கலந்து கொள்ளுதல் (20-6-80).

பதிவு எண். எம். 7039

சென்னைத் திருமயிலாப்பூர் அருள்மிகு மாதவப்பெருமாள் திருக்கோயில்
வசந்த கல்யாண மண்டபத் திறப்பு விழாவில்,
அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், உரை நிகழ்த்துதல். (20-6-80)

பவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந.ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.